# தமிழரசு

மலர் - 21 இதழ் - 15.16

1.2.91 - 16.2.91.

JL
V211m N46
N91.21.15-16


1-2-1991



மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள், பெரும்புலவர் புதுவை சுந்தரசண்முகனார் அவர்களுக்குத் திருவள்ளுவர் விருதினை, சென்னை வள்ளுவர் கோட்டத்தில் நடந்த திருவள்ளுவர் திருநாள் விழாவின் போது வழங்கினார். மாண்புமிகு கல்வியமைச்சர் பேராசிரியர் க. அன்பழகன், மற்றும் தமிழ் வளர்ச்சிப் பண்பாட்டுத் துறைச் செயலர் டாக்டர் ஔவை நடராசன், தமிழ் வளர்ச்சித்துறை இயக்குநர் திரு கு. சிவஞானம் ஆகியோர் உடன் உள்ளனர் (15.1.91)

# இந்த இதழில்...


மாண்புமிகு முதல்வர் அவர்களின் நற்பணிப் பயணம் ... 2

அனைத்துத்துறை அலுவலர்கள் கூட்டத்தில் மாண்புமிகு முதல்வர் அவர்கள் உரை ... 4

தொழில் வளத்திற்கு முன்னுரிமை தரும் அரசு
—மேதகு ஆளுநர்
திரு. சுர்ஜித்சிங் பர்னாலா ... 9

அண்ணா வரலாறானார்
—புலவர் தமிழ்ப்பித்தன் ... 17

திருவள்ளுவர் திருநாள் ... 18

மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவு திருமண உதவித் திட்டம் ... 24

சிறுசேமிப்பு - முத்தான மூன்று திட்டங்கள் ... 26

வட ஆர்க்காடு-அம்பேத்கர் மாவட்டத்தில்-மாநில அறிவியல் கண்காட்சி ... 28

பெரியார் மாவட்டம்—வளர்ச்சிப் பணிகள் ... 30

பட்டு உற்பத்தியில் டான்சில்க் ... 39

சென்னைக்கு விரைந்து வரும் தெலுங்கு-கங்கை ... 46

சின்கோனா ... 48


இந்த இதழுடன்
இலவச இணைப்பு

**அக்கினிப் பிரவேசம்**

மேதகு ஆளுநர் அவர்கள் சட்டப் பேரவையில் 18.1.91 அன்று ஆற்றிய உரையின் மீது நடைபெற்ற விவாதங்களுக்கு மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் அளித்த பதிலுரை.


**தமிழரசு**

திருவள்ளுவர் ஆண்டு 2022

தைத் திங்கள் - 19

மலர்:21 இதழ்:15

1-2-1991



# மாண்புமிகு முதல்வர்

# நற்பணிப் பயணம்

ஏழை எளிய மக்களுக்கு உணவு, உடை, உறையுள் என்ற வகையில் எந்தக் குறைபாடும் நேரக்கூடாது என்பதிலே தமிழக அரசு கண்ணுங் கருத்துமாக நல்ல பல திட்டங்களைத் தீட்டிச் செயல்படுத்தி வருகிறது.

அதன் ஒரு கட்டமாகச் செங்கை-அண்ணா மாவட்டத்திலும், வட ஆர்க்காடு-அம்பேத்கர் மாவட்டத்திலும், திருவண்ணாமலை சம்புவராயர் மாவட்டத்திலும் உள்ள ஆதிதிராவிட மக்களுக்கு 4,635 இலவச காங்கிரீட் வீடுகள் மாண்புமிகு தமிழக முதல்வர் முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களால் அண்மையில் வழங்கப்பட்டன.

7.1.91, 8.1.91 ஆகிய இரண்டு நாட்களிலும், மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள், அதற்காக மேற்கொண்ட நற்பணிப் பயணம் மிகச் சிறப்பாக நடைபெற்றது.

இந்த நற்பணிப் பயணத்தில் மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு. கோ.சி. மணி அவர்களும், மாண்புமிகு பொதுப்பணித்துறை மற்றும் மின்துறை அமைச்சர் திரு. எஸ். துரைமுருகன் அவர்களும், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் டாக்டர் க.பொன்முடி அவர்களும், மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் திரு. க.சுந்தரம் அவர்களும் மாண்புமிகு முதல்வர் அவர்களோடு கலந்து கொண்டார்கள்.

4 — ஆம் அட்டை சொல்லும் செய்தி :

### விழா விவரங்கள்

7.1.91 அன்று மட்டும் பூவிருந்தவல்லி ஒன்றியத்தைச் சேர்ந்த செம்பரம்பாக்கம், திருப்பெரும்புதூர் ஒன்றியத்தைச் சேர்ந்த வல்லக்கோட்டை, வாலாஜாபாத் ஒன்றியத்தைச் சேர்ந்த ஏனாதூர், காஞ்சிபுரம் ஒன்றியத்தைச் சேர்ந்த கூரம்கேட், நெமிலி ஒன்றியத்தைச் சேர்ந்த மேலப்புலம், வாலாஜாபேட்டை ஒன்றியத்தைச் சேர்ந்த சென்ன சமுத்திரம் ஆகிய ஊர்களில் இந்த நற்பணிப் பயண விழா இனிதே நடைபெற்றது.

தொடர் நிகழ்ச்சியின் இரண்டாவது நாளான 8.1.91 அன்று - ஆர்க்காடு ஒன்றியத்தைச் சேர்ந்த மேல்விசாரம், கீ.வை. குப்பம் ஒன்றியத்தைச் சேர்ந்த சேனூர், வேலூர் ஒன்றியத்தைச் சேர்ந்த அப்துல்லாபுரம், போளூர் ஒன்றியத்தைச் சேர்ந்த சந்தவாசல், சேத்துப்பட்டு, வந்தவாசி ஆகிய ஊர்களில் இவ்விழா சிறப்புற நடைபெற்றது.

முதல் நாள் காலை 10 மணியளவில் செம்பரம்பாக்கத்தில் தொடங்கிய இவ்விழா, மறுநாள் நள்ளிரவில் வந்தவாசியில் முடிவுற்றது.



### மகிழ்ச்சி வெள்ளத்தில் மக்கள்

செங்கை-அண்ணா மாவட்டத்தில் மாண்புமிகு முதல்வர் அவர்கள் நற்பணிப் பயணம் மேற்கொண்டபோது - மக்கள் தங்கள் இல்லங்களின் முன் வண்ணக் கோலமிட்டும் மலர் தூவியும் மேளதாள இசைமுழக்கத்தோடு மகிழ்ந்து வரவேற்றார்கள். சில இடங்களில் குலவையிட்டும் ஆரத்தி எடுத்தும் தாய்மார்கள் வாழ்த்தி வரவேற்றனர்.

இராணிப்பேட்டையில் தொடங்கிய இரண்டாம் நாள் பயணத்தின் போதும் - வழி நெடுகிலும் பொதுமக்களும், சிறுவர் சிறுமியரும், தாய்மார்களும், தொழிலாளர்களும், விவசாயிகளும், மாணவ-மாணவியரும் வெயிலென்றும் பாராமல் வீதியின் இருமருங்கும் கூடி நின்று வாழ்த்தொலி முழக்கி வரவேற்றார்கள். பல இடங்களில் மேள தாளங்களோடு - தாரை தப்பட்டை மகிழ்ச்சி முழக்கம், கரகாட்டம் - ஒயிலாட்டம் ஆகியவைகளோடு வாணவேடிக்கையுமாக வரவேற்பு நிகழ்ச்சிகள் நெஞ்சைத்தொடும் வண்ணம் நேர்த்தியாக அமைந்திருந்தன!

திருவணணாமலை-சம்புவராயர் மாவட்டத்தின் வரவேற்பும் எல்லா வகையிலும் மேம்பட்டிருந்தது. புதிதாகத் திறக்கப்பட்ட வீடுகளிலெல்லாம் வாழை மரங்கள் கட்டப்பட்டிருந்தன. வழிநெடுகிலும் வண்ண விளக்குச் சரங்களோடு கூடிய பிரம்மாண்டமான - ஈபிள் டவர், பூம்புகார் கலைக்கூடம் போன்ற வரவேற்பு வளைவுகள் வனப்புக் காட்டின!

எல்லா இடங்களிலும் மக்களின் இதய பூர்வமான வரவேற்பை - எழுச்சிமயமான வாழ்த்து முழக்கங்களை - வரவேற்புப் பதாகைகளை- வகைவகையான வாழ்த்துச் சுவரொட்டிகளை - தென்னங்குருத்து மற்றும் மாவிலைத் தோரணங்களைக் காணமுடிந்தது.

நற்பணிப்பயணத்தின் இறுதி நிகழ்ச்சியாக வந்தவாசிக்கு மாண்புமிகு முதல்வர் அவர்கள் வருகை தந்தபோது இரவு 11 மணி. கொட்டும் பனியையும் பொருட்படுத்தாமல் லட்சோபலட்சம் பேர் பொதுக்கூட்ட ஏற்பாடு செய்யப்பட்டிருந்த மாபெரும் பள்ளித்திடலில் கூடியிருந்தது திகைக்க வைப்பதாக இருந்தது. ஊரே விழாக்கோலம் பூண்டிருந்தது!

### பங்கேற்றுச் சிறப்பித்தோர்

இந்த இரண்டு நாள் நற்பணிப்பயணத்தின் போதும் நடைபெற்ற அத்தனை நிகழ்ச்சிகளிலும் மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் திரு. கோ.சி. மணி அவர்கள் தலைமை தாங்கினார்.

செங்கை-அண்ணா மாவட்டச் சுற்றுப் பயணங்களின்போது, மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.சமீர்வியாஸ் இ.ஆ.ப., அவர்களும் -

வட ஆர்க்காடு மாவட்டத்தில் நடைபெற்ற நற்பணிப் பயணங்களின்போது மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. மா. சத்தியமூர்த்தி இ.ஆ.ப., அவர்களும் -

திருவண்ணாமலை-சம்புவராயர் மாவட்ட நற்பணிப் பயணங்களிலெல்லாம் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. பெ. கோலப்பன் இ.ஆ.ப., அவர்களும் கலந்து கொண்டார்கள்.

ஊரக வளர்ச்சித்துறைச் செயலாளர் டாக்டர் எஸ். நாராயண் இ.ஆ.ப., ஊரக வளர்ச்சித் துறை ஆணையர் திரு. ஆறுமுகம் இ.ஆ.ப., முதலான அரசு உயர் அலுவலர்கள் பலரும் இந்நிகழ்ச்சிகளுக்கெல்லாம் வருகை தந்தார்கள்.

நற்பணிப் பயணத்தின் அத்தனை நிகழ்ச்சிகளிலும் மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் திரு. எஸ். துரைமுருகன், திரு. க. பொன்முடி,

41 — ஆம் பக்கம் பார்க்க





# காலம் பொன் போன்றது! கடமை கண் போன்றது!

## — முதல்வர் கலைஞர் —

இன்று இந்தக் கூட்டம் நடத்தப்படுவதின் முக்கியமான நோக்கம், அண்மையில் இரண்டு நாட்களுக்கு முன்பு நம்முடைய பிரதமர் அவர்கள் எல்லா மாநில முதலமைச்சர்களையும் அழைத்து வளைகுடா போரினால் இந்தியத் திருநாடு எந்த அளவிற்குப் பாதிப்புக்கு உள்ளாகும் என்பது குறித்தும், மாநில அரசுகள் இந்த நேரத்தில் பல்வேறு பிரச்சினைகளைச் சந்திக்கக்கூடிய சூழ்நிலையில் அவைகளின் அணுகுமுறைகள் எவ்வாறு இருக்க வேண்டும் என்பது குறித்தும் விவாதித்திருக்கிறார்.

தமிழக அரசின் சார்பாக நம்முடைய பொதுப்பணித்துறை அமைச்சரை அந்தக் கூட்டத்தில் கலந்து கொள்ளுமாறு நான் கேட்டுக் கொண்டு - இந்தப் போரின் காரணமாக ஏற்படுகின்ற பாதிப்புகளிலிருந்து மக்களுக்குச் செய்ய வேண்டிய அவசர அத்தியாவசிய உதவிகளை நிறைவேற்றுவது குறித்தும்-குறிப்பாக அரசின் சார்பில் சிக்கனத்தை எல்லா வகையிலும் கடைப்பிடிக்க வேண்டும், அதற்கு மாநில அரசுகள் இந்திய அரசின் வழிகாட்டுதலுக்கு ஒப்புதல் அளிக்கின்றது என்பதைச் சுட்டிக்காட்டியும் தமிழக அரசின் சார்பில் நம்முடைய கருத்துக்களைப் பொதுப்பணித் துறை அமைச்சர் அந்த மாநாட்டில் தெரிவித்திருக்கிறார்.

இந்த வளைகுடா பிரச்சினை ஏற்படுவதற்கு முன்பேகூட இந்தக் கூட்டத்தைக் கூட்டுவதற்கு வேறொரு காரணமாக அமைந்தது பிப்ரவரி மாதத்தில் நாம் சமர்ப்பிக்க இருக்கின்ற நிதிநிலை அறிக்கையையொட்டி ஒவ்வொரு துறையின் சார்பாகவும் கடந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையில் தெரிவிக்கப்பட்ட அறிவிப்புகள் எந்த அளவிற்கு இப்போது நிறைவேறியிருக்கின்றன என்பதைப் பற்றிய கணிப்பு, இன்னும் நிறைவேற வேண்டியவை எந்த அளவிற்கு எஞ்சியுள்ளன என்பது பற்றியும் தெரிந்து கொள்ளவும், அவைகளை நிறைவேற்ற நாம் எத்தகைய விரைவான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும் என்பதை ஆராய்வதற்காகவும் இந்தக் கூட்டம் பயன்படும் என்பதற்காக அந்த நோக்கத்தோடும் இந்தக் கூட்டம் கூட்டப்பட்டிருக்கிறது.

### காலம் பொன் போன்றது! கடமை கண் போன்றது!

நிர்வாகத்தை - நிர்வாக இயந்திரத்தை Fine-Tune (நேர்த்தியாக இயங்க) செய்ய வேண்டும் என்பது என்னுடைய ஆசை. அந்த நோக்கத்திற்காகவும் உங்களை எல்லாம் இன்றைக்குச் சந்திக்கிறேன் என்பதை நீங்கள் மனதில் பதிய வைத்துக் கொள்ள வேண்டும்.

என்னைப் பொறுத்தவரையில் "காலம் பொன் போன்றது, கடமை கண் போன்றது" என்று நினைத்துக் கடமை ஆற்றுபவன் நான்.

மக்களுக்குத் தொண்டாற்றுவதில் விவேகத்தைப் போலவே வேகமும் தேவை என்பதை வலியுறுத்துகிறவன் நான். கிடைக்க வேண்டியது, காலம் கடந்து கிடைத்தால் அதைப் பெறுகிற மக்களுக்கு இழப்புதான் ஏற்படும் என்பதைப் பல நேரங்களிலே அரசு அதிகாரிகளிடம் தனித்துப் பேசுகின்ற நேரத்திலும், இதுபோன்ற நிகழ்ச்சிகளிலும் நான் எடுத்துக் காட்டியிருக்கிறேன். நான் முன்பு ஆட்சிப் பொறுப்பில் இருந்தபோதும் எடுத்துக்கூறியிருக்கிறேன். ஒரு பந்தயக்குதிரை வேகத்தில் பணியாற்றுவதை எனது லட்சியமாகக் கொண்டிருப்பவன் நான் என்பதையும் நான் தெரிவித்திருக்கிறேன். அந்த வேகத்தில் தொய்வு ஏற்பட்டால் பாதிக்கப் படப் போகிறவர்கள் இந்த மாநிலத்து மக்கள்தான்; அதை எண்ணிப் பார்த்து நாம் நடந்து கொள்ள வேண்டும் என்பதையும் சுட்டிக் காட்டியிருக்கிறேன்.

### நிலையற்ற அரசியலைப் பற்றிக் கவலைப்படாது கடமைகளைச் செய்திடுக!


அரசியல் வாதிகள் வந்து போகிறவர்கள். அது இங்கானாலும், இங்கிலாந்து ஆனாலும், அமெரிக்காவானாலும் - ஏன், உலகெங்கிலும் உள்ள எல்லா ஜனநாயக நாடானாலும் இதே நிலைதான். அதுதான் ஜனநாயகம். ஜனநாயகத்திற்கு உரிய இலக்கணம் அதுதான்.

நிலையான இடத்தில் இருக்கின்ற நீங்கள் நிலையற்ற அரசியலைப் பற்றிக் கவலைப்படாமல் மக்களுக்கான கடமைகளைச்செய்ய வேண்டும்.

ஜனநாயகத்தில் ஆட்சி மாறுவது சகஜம். அதற்காக அன்றாடம் பரபரப்பை ஊட்டும் செய்தித்தாள்களைப் படித்து விட்டு அதற்கேற்ப நிர்வாக இயந்திரம் உருட்டப்படுமானால், அது அந்த இயந்திரத்தையே பழுதாக்கிவிடும் என்பதை மறந்து விடக்கூடாது.

தமிழ்நாடு செம்மையான நிர்வாகத்திற்குப் பெயர் பெற்றது. தமிழ் நாட்டு அதிகாரிகள் இந்தியாவிலே மாத்திரமல்ல, சர்வதேச அமைப்புகளாலும் பாராட்டப்படுகிறவர்கள். அந்தப் பெயருக்கும், புகழுக்கும் நாம் ஒரு துளி களங்கமும் ஏற்படுத்தக் கூடாது. இதை உங்களுக்கு நினைவுபடுத்த வேண்டியிருப்பதற்காக நான் உண்மையிலேயே வருந்துகிறேன்.

நான் ஒரு கட்சிக்குத் தலைவன். இந்த மாநிலத்தின் முதலமைச்சரும் கூட. நீங்கள், ஒவ்வொரு துறைக்கும் தலைவராக இருப்பவர்கள் - நீங்களும் தலைவர்கள்தான். Leaders of Administration. A Leader should beloved; Not feared (நீங்கள் நிர்வாகத் துறைத் தலைவர்கள். ஒரு தலைவனைக் கண்டால் அன்பு ஏற்பட வேண்டும், அச்சம் ஏற்படக் கூடாது) என்பது என் கொள்கை. நான் இதுவரை என் வாழ்வில்



ஏதாவது வெற்றி பெற்றிருப்பேன் என்றால், அந்த வெற்றியின் ரகசியம் இதுதான். இந்த ரகசியத்தை உங்களோடு பகிர்ந்து கொள்வதில் நான் பெரிதும் மகிழ்ச்சி அடைகிறேன்.

நாம் இருப்பது ஒரு ஜனநாயக நாட்டில்; இப்போது இங்கே எமர்ஜென்சி இல்லை. அடிப்படை உரிமைகள் எதுவும் பறிக்கப்படவில்லை. எனவே நாம் நமது கடமையை ஆற்றுவதில் அச்சப்படுவதற்கு எதுவும் இல்லை.

அதிகாரிகளுக்கு ஒரு Commitment (பொறுப்புணர்வு) இருக்க வேண்டும் என்பதில் நான் நம்பிக்கை உடையவன். ஆனால் யாரிடம்? ஒரு தனி நபரிடம் அல்ல. ஒரு கட்சியிடம் அல்ல. நாம் பின்பற்றும் அரசியல் சட்டத்திடம்! நம்மை நம்பியிருக்கும் மக்கள் சமுதாயத்திடம்!

**உண்மையிலேயே நான் உங்களுக்குச் சொல்வேன்- ராமன் ஆண்டால் என்ன - ராவணன் ஆண்டால் என்ன - என்பது உங்களுக்குத்தான் பொருந்தும். மக்களைப் பொறுத்தவரையில் அதுவேறு விஷயம். ஆனால் அதிகாரிகளைப் பொறுத்தவரையில் ராமன் ஆண்டால் என்ன, ராவணன் ஆண்டால் என்ன என்பது முற்றிலும் பொருந்தக்கூடிய மொழியாகும்.**

### நல்லதொரு பாரம்பரியத்தைக் காப்பாற்றுவது உங்கள் கடமை!

**மீண்டும் கூறுகிறேன்,** தமிழகத்தில் தலைசிறந்த நிர்வாகிகளைப் பெற்றிருக்கின்ற ஒப்பற்ற பாரம்பரியத்துக்கு நீங்கள் சொந்தக்காரர்கள். (அந்தப் பாரம்பரியத்திற்கு இடையில் சிலரால் சிறிது மாசு ஏற்பட்டது- நான் எமர்ஜென்சி காலத்தைத்தான் சொல்கிறேன்) - அந்த நல்ல பாரம்பரியத்தைக் கட்டிக் காப்பாற்ற வேண்டியது உங்கள் கடமை என்பதை நினைவுபடுத்த வேண்டியது எனது பொறுப்பு.

நான் Delegation-இல் (பகிர்ந்தளிப்பதில்) நம்பிக்கை வைத்திருப்பவன். ஒருவரே எல்லாச் சுமையையும் சுமக்க முடியாது. பகிர்ந்து கொள்ள வேண்டும், உங்கள் சகாக்களோடு.




திட்டங்களைத் தொடங்கிவிடுகிறோம். அது செயல்படுகிறதா - யாருக்காகத் திட்டம் போடப்பட்டதோ அவர்களை அது போய் அடைகிறதா என்பதிலே போதிய கவனம் செலுத்தத் தவறி விடுகிறோம்.

எனவே அடிக்கடி "Review of the Progress and Monitoring" (வளர்ச்சி ஆய்வும் கண்காணிப்பும்) செய்யப்பட வேண்டும்.

### வேலைத் திறனைக் கெடுக்கும் வெட்டிப் பேச்சு!

ஈராக் போரினால் ஏற்பட்டிருக்கும் இந்தச் சூழ்நிலையில் - பொருளாதார நெருக்கடி மிரட்டிக் கொண்டிருக்கும் இந்த நேரத்தில் -சிக்கனத்தைக் கடைப்பிடிக்க வேண்டும். **வீண் செலவுகளைத் தவிர்க்க வேண்டும். காலதாமதத்தைத் தவிர்க்க வேண்டும். அத்தியாவசியப் பண்டங்களைப் பதுக்கி வைப்பவர் மீதும், விலைவாசி உயர்வை ஏற்படுத்த முனைபவர்கள்** மீதும் சமூக விரோதிகள் மீதும் சட்டம் ஒழுங்குப் பிரச்சினையைக் கெடுப்போர் மீதும் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

**Time Escalation (கால விரயம்)**
**Cost Escalation (பண விரயம்)**

இவைகள்தான் நமது திட்டங்களின் எதிரிகள். இந்த எதிரிகளை வீழ்த்த உங்கள் துணையை எதிர்பார்க்கிறேன்.

அதிகாரிகளுக்கும், ஆட்சி பீடத்தில் இருப்போருக்கும் உள்ள உறவு

- "Master - Slave" (எஜமான் - அடிமை) என்ற உறவு அல்ல, **தன்னம்பிக்கை அற்றவர்கள்தான் அடுத்த எஜமானனைப் பற்றிக் கவலைப்படுவார்கள். இதை நீங்கள் மறந்து விடக்கூடாது.**

**இந்தியாவில்** வேலைத் திறனைப் பாதிக்கும் ஒரு மாபெரும் காரியம் **எது என்றால் இந்தியர்களுக்கே உரிய "Gossip" (வெட்டிப்பேச்சு) என்கின்ற வியாதிதான், வேலைத்திறனையே பாதிக்கிறது. அந்தப் பயனற்ற வெட்டிப் பேச்சுத்தான் தனியார் தொழிற்சாலைகளில் - தனியார் அலுவலகங்களில் - ஏன் அரசு அலுவலகங்களில், உணவு விடுதிகளில் - ஏன் நமது இல்லங்களில்கூட வேலைத்திறனைக் குறைத்து விடுகின்றது.**

**சக்திக் களஞ்சியம்** அல்லது Power House ஆக இருக்கின்றவர்கள் இந்த "Gossip"-இல்தான் தங்கள் சிந்தனையையும், செயலையும், பொன்னான நேரத்தையும் விரயமாக்கி விடுகிறோம். **இந்தத் தொய்வு தொடராமல் தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டால் நமது வேலைத் திறன் அதிகமாகும் என்பதில் ஐயமில்லை.**

### பேச்சுரிமைக்கு எதிரியல்ல!

**ஏதோ நான் பேச்சுரிமைக்கு எதிரானவன் என்கின்ற தவறான எண்ணம் உங்களுக்கு ஏற்படத் தேவையில்லை. அந்தப் பேச்சு பயனுள்ள**




பேச்சாக - கருத்துள்ள விவாதமாக - கருத்துப் பரிமாற்றமாக இருக்கட்டும் என்றுதான் நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

நிலையற்ற தன்மை பற்றிக் குறிப்பிடும்போது நாமே - நிலையற்றவர்கள், இன்றிருப்பவர்கள் நாளை இருப்பதில்லை என்பதை மனித இயல் ரீதியாக உணர்ந்தவர்கள்; அதற்காக நிலையற்ற தன்மையைப் பற்றிக் கவலைப்பட்டுக் கொண்டிருந்தால் யாரும் வாழமுடியாது.

### அச்சம் தேவையில்லை ! இந்த அரசு தொடரும்!

ஒரு அரசு நீடிக்குமோ என்ற அச்சமே யாருக்கும் ஏற்படத் தேவையில்லை. இந்த அரசே தொடரும். ஜனநாயகத்தில் மாறுதலே ஏற்படாது **என்பதில்லை. மீண்டும் முதலிலே இருந்தவர்களே திரும்ப வரமாட்டார்கள் என்பதும் இல்லை. பதின்மூன்று ஆண்டுகளுக்குப் பிறகு - தி.மு.கழக ஆட்சி** மீண்டும் வராது என்று சிலர் கனவு கண்டு கொண்டிருந்தபோது நாங்கள் வரவில்லையா?

### நம் பணியில் நல்ல வேகமும் நேர்மையும் ஆர்வமும் வேண்டும்!

நம்முடைய பணியில் நல்ல வேகமும் அதே நேரத்தில் நேர்மையும் **ஆர்வமும் இருக்க வேண்டுமென்று மீண்டும் ஒருமுறை என்னை** உங்களோடு இணைத்துக் கொண்டு கேட்டுக் கொள்கிறேன்.

### காரணங்கள் பற்றிக் கவலையில்லை! பயன்கள்தான் முக்கியம்!

பல்வேறு துறைகளின் சார்பாக கடந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையில் அறிவிக்கப்பட்ட பல்வேறு திட்டங்கள் குறித்து எடுக்கப்பட்ட நடவடிக்கைகளில் - சில துறைகளில் ஏற்பட்டுள்ள கால தாமதமும் அதற்கான காரணங்களும் இங்கே ஆராயப்பட்டிருக்கின்றன. என்றாலும் காரணங்களைச் சொல்வதன் மூலமாகப் பொதுமக்களுடைய மன நிறைவை நாம் பெற முடியாது. காரணங்கள், ஏற்கத் தக்க காரணங்களாகக் கூட இருக்கலாம். குறிப்பாக எனக்குத் தொடர்புடைய கலைத்துறை

உதாரணம் ஒன்றைக் குறிப்பிட்டுச் சொல்ல வேண்டுமேயானால், மிகுந்த கஷ்டப்பட்டு, அதிகச் செலவிட்டு ஒரு படத்தைத் தயாரித்து அதை வெளியிட்ட பிறகு அந்தப் படம் மக்களிடம் உரிய திருப்தியைப் பெற வில்லை என்கிறபோது, அது குறித்த விமர்சனம் வருகின்றபோது - தயாரிப்பாளர் 'நான் என்ன செய்வது? கதாநாயகன் மற்றும் கதாநாயகி ஒத்துழைப்பு தரவில்லை; வெளிப்புறப் படக் காட்சியின் போது சரியான வெயில் இல்லை' என்றெல்லாம் காரணங்கள் சொல்லிக் கொண்டிருக்க முடியாது. ரசிகர்கள் விரும்புவது நல்ல படம். அதைப் போல, பொது மக்கள் விரும்புவது ஒரு நல்ல ஆட்சியை. அதைத் தர முடியாததற்குக் காரணங்கள் இருக்கலாம்; சரியான காரணங்களாகக் கூட இருக்கலாம். காரணங்களைப் பற்றி யாரும் கவலைப்படமாட்டார்கள். தங்களுக்குத் தேவையான பயன்களைப் பற்றித்தான் கவலைப்படுவார்கள். சிந்திப்பார்கள். அதை மனதில் நிறுத்திக் கொண்டு உங்களுடைய பணிகளை ஆற்ற வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

**(அத்தியாவசியப் பண்டங்களைப் பதுக்கி வைப்போர், சமூக விரோதிகள், சட்டம் ஒழுங்கு அமைதியைக் கெடுப்போர் ஆகியோர் மீது கடும் நடவடிக்கை எடுப்பது குறித்து அரசு உயர் அதிகாரிகளுடன் 19.1.91 அன்று நடத்தப்பட்ட அவசர ஆலோசனைக் கூட்டத்தில் மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் ஆற்றிய உரை)**





# தொழில் வளத்திற்கு முன்னுரிமை தரும் அரசு

**மேதகு ஆளுநர் திரு. சுர்ஜித்சிங் பர்னாலா அவர்கள்**

*(தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் 18.1.91 அன்று ஆற்றிய உரை)*

மதிப்பிற்குரிய சட்டப் பேரவை உறுப்பினர்களே

இப்புத்தாண்டில், தமிழ்நாடு சட்டப் பேரவையின் முதலாம் கூட்டத் தொடரில் உரையாற்றுவதில் மகிழ்ச்சியும் பெருமையும் கொள்கிறேன். உங்கள் அனைவருக்கும் புத்தாண்டு வாழ்த்துக்களையும் பொங்கல் திருநாளாம் தமிழர்

## மேதகு ஆளுநர் அவர்கள் தமிழில் பேசினார்!

தமிழகச் சட்டமன்றப் பேரவையில், மேதகு ஆளுநர் திரு. சுர்ஜித்சிங் பர்னாலா அவர்கள் 18.1.1991 அன்று உரையாற்றினார்.

அச்சடிக்கப்பட்ட அந்த உரையின் முதல் இரண்டு பத்திகளை மேதகு ஆளுநர் அவர்கள் தமிழிலேயே படித்தது குறிப்பிடத்தக்கது!

"மதிப்பிற்குரிய சட்டப்பேரவை உறுப்பினர்களே! இப்புத்தாண்டில் தமிழ்நாடு சட்டப் பேரவையின் முதலாம் கூட்டத் தொடரில் உரையாற்றுவதில் மகிழ்ச்சியும், பெருமையும் கொள்கிறேன். உங்கள் அனைவருக்கும் புத்தாண்டு வாழ்த்துக்களையும், பொங்கல் திருநாளாம், தமிழர் திருநாள் வாழ்த்துக் களையும் தெரிவித்துக் கொள்கிறேன்" என்று மேதகு ஆளுநர் அவர்கள் குறிப்பிட்டபோது, மாண்புமிகு முதல்வர், அமைச்சர் பெருமக்கள், சட்டப் பேரவை உறுப்பினர்கள் மகிழ்ச்சி தெரிவித்தார்கள்.

**திருநாள் வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கிறேன்.**

**2. இந்த ஆண்டுக்குப் பெருஞ் சிறப்பாக சமூக நீதிக்காவலர் டாக்டர் அம்பேத்கர் அவர்களின் நூற்றாண்டு நிறைவும், புரட்சிக் கவிஞர் பாவேந்தர் பாரதிதாசன் அவர்களின் நூற்றாண்டு நிறைவும் அமைகின்றன.**

**அவர்களின் பெருமையைப் போற்றுவதும், அவர்களின் ஆற்றலைப் பாராட்டுவதும் மட்டுமின்றி, அவர்களின் சமுதாயத்தொண்டு முழு வெற்றி பெற சபதம் ஏற்கவும் இந்த வாய்ப்பை** நாம் பயன்படுத்திக் கொண்டு பணியாற்றக் கடமைப்பட்டுள்ளோம்.

**3.** தொடர்ந்து அச்சுறுத்திக் கொண்டிருந்த வளைகுடா போர், உலகின் பல்வேறு நாட்டுத் தலைவர்கள் எடுத்த முயற்சிகளையும் மீறி தொடங்கிவிட்ட நிலையில், இதன் பாதிப்புகளை உலகம் முழுவதும் உள்ள மக்கள் சந்திக்க நேரும் அபாயம் இருப்பதோடு, நமது இந்திய நாட்டிலும் பொருளாதாரத்தில் மேலும் பின்னடைவு ஏற்படக்கூடும் என்ற அச்சம் தோன்றியுள்ளது. **இந்தக் கட்டத்தில் இந்திய அரசு எடுக்கும் எல்லா வகையான முயற்சிகளுக்கும், தேசிய நலனில் அக்கறை கொண்ட நமது தமிழக அரசு உறுதுணையாக இருந்து முழு ஒத்துழைப்பு வழங்கும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.**

**4.** சென்ற **ஆண்டில்** நம் நாட்டில் பல கொந்தளிப்பான சம்பவங்கள் நடைபெற்றுள்ளன. நாட்டின் பல பகுதிகளில் வகுப்புவாதக் கலவரங்கள் கோரத் தாண்டவமாடி பல உயிர்களைப் பலி கொண்டுள்ளன. **இத்தகைய சூழ்நிலையிலும்,** தமிழ்நாட்டில் நாம் மிகுந்த மனநிறைவு கொள்ளத்தக்க வகையில், அமைதியும் சாந்தமும் நிலவுகிறது என்பதில் நாம் அனைவரும் பெருமை அடைகிறோம். திருத்தியமைக்கப்பட்ட தேசிய ஒருமைப்பாட்டுக் குழுவின் முதல்கூட்டத்தை, இந்த அரசு, சென்னையில் 1990 செப்டம்பரில் வெற்றிகரமாக நடத்தியது. இந்த அரசு, சமயச் சார்பின்மைக் கொள்கைகளை முற்றிலும் செயல்படுத்துவதில் உறுதியாகவுள்ளது. மேலும், இம்மாநிலத்தில், வகுப்புக்கலவர தூண்டுதல்களுக்கு இந்த அரசு இம்மியளவுகூட இடமளிக்காமல், வருமுன் காக்கும் திட்டங்களையும், வந்தபின் உடனடியாகத் தடுத்து நிறுத்தும் செயல்பாடுகளையும் கடைப்பிடித்து வருகிறது.

**5.** தமிழ் மாநில அரசு நடைமுறைப்படுத்தி வரும் இடஒதுக்கீடு முறையைத் தொடர்ந்து மத்திய அரசு அலுவலகங்கள், மற்றும் மத்திய பொதுத் துறை நிறுவனங்கள் ஆகியவற்றில் பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு இடஒதுக்கீடுகள் அளிப்பதற்கு வகைசெய்யும் மண்டல் கமிஷன் பரிந்துரைகளைச் செயற்படுத்துமாறு 1989 மே திங்களில் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தைத் தொடர்ந்து, மத்திய அரசு, 1990 ஆகஸ்ட் மாதத்தில் எடுத்த உறுதியான நடவடிக்கைகள் குறித்து நாம் மகிழ்ச்சி அடைகிறோம். பிற்படுத்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்தவர்கள் முன்னேற்றத்திற்காகப் பாடுபட உறுதிபூண்டுள்ள இந்த அரசு, அவர்களுடைய இந்த உரிமைப் பிரச்சினை குறித்து உச்சநீதிமன்றத்தில் முறையிட்டுள்ளது. மண்டல் கமிஷன் பரிந்துரைகளைச் செயல்படுத்த உச்சநீதிமன்றம் பிறப்பித்த தடையாணையை அகற்றுவதற்கு நடவடிக்கைகள் எடுக்குமாறு இந்த அரசு மத்திய அரசை வலியுறுத்திக் கேட்டுக் கொள்கிறது.

**6.** இலங்கை அரசின் இராணுவம் குண்டு வீச்சு நடத்தி, தமிழ் ஈழ மக்களைக் கொன்று குவிப்பதால் அங்கிருந்து வந்துள்ள 1,22,000 தமிழ் அகதிகளுக்கு இருக்க இடமும், உணவும், உடையும், மருத்துவச் சிகிச்சை வசதிகளையும் அளிக்க நாம் உடனடி நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளோம். அகதிகளின் நிவாரணப் பணிகளுக்காக இதுவரையில் மத்திய அரசு வழங்கியுள்ள ரூ. 13 கோடியுடன், ரூ. 21 கோடி அனுமதிக்கப்பட்டுள்ளது. உன்னிப்பாகக் கண்காணித்தல், அடிக்கடி பார்வையிடுதல், தீவிரமாகக் காவல் புரிதல் ஆகியவை இந்த நிவாரணப் பணிகள் மிகவும் திறம்பட செயல்படுவதற்குக் காரணங்களாகும்.

**7.** பேச்சு வார்த்தைகள் மூலமாக, பிரச்சினைகளுக்குத் தீர்வு கண்டு, தமிழ் ஈழ மக்களுக்கு நிலையான அமைதியும் உரிமையும் கிடைத்திட வேண்டும் என்பதையே இவ்வரசு தனது கருத்தாகத் தொடர்ந்து வலியுறுத்தி வருகின்றது. எனினும், இலங்கையிலிருந்து வந்துள்ள தமிழ்ப் போராளிகளாலும் அவர்களது நெருங்கிய ஆதரவாளர்களாலும் இம்மாநிலம் சட்டம்—ஒழுங்கு பாதிக்கப்படுவதற்குரிய வன்முறைக் களமாக மாறிவிடாமல் தடுக்க அவர்கள் மிகுந்த கண்காணிப்பின் கீழும் கட்டுப்பாட்டிலும் வைக்கப்பட்டு, தனியான சிறப்பு முகாம்களில் பராமரிக்கப்படுகின்றனர். இந்த நடவடிக்கையின் பயனாகவும் நமது மாநிலத்தில் அமைதியான சூழ்நிலை நிலவி வருகிறது.

**8.** இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 263ஆம் பிரிவின்கீழ் மாநிலங்களுக்கு இடையேயான

> **"இந்திய அரசு எடுக்கும் எல்லா வகையான முயற்சிகளுக்கும், தேசிய நலனில் அக்கறை கொண்ட நமது தமிழக அரசு உறுதுணையாக இருந்து முழு ஒத்துழைப்பு வழங்கும்."**

> "சென்ற ஆண்டில் நம் நாட்டில் பல கொந்தளிப்பான சம்பவங்கள் நடைபெற்றுள்ளன. நாட்டின் பல பகுதிகளில் வகுப்புவாதக் கலவரங்கள் கோரத் தாண்டவமாடி பல உயிர்களைப் பலிகொண்டுள்ளன. இத்தகைய சூழ்நிலையிலும், தமிழ் [illegible]

குழு (Inter-State Council) ஒன்றை ஏற்படுத்துவது குறித்த நமது நீண்ட நாளைய வேண்டுகோள் ஏற்றுக் கொள்ளப்பட்டு, அக்குழுவின் வரலாற்றுச் சிறப்பு மிக்க முதல் கூட்டம் 1990 அக்டோபரில் டெல்லியில் நடைபெற்றது குறித்து நாம் மகிழ்ச்சியடைகிறோம். மத்திய – மாநிலங்களுக்கு இடையேயான பிரச்சினைகள் அனைத்தையும் விவாதித்து முடிவெடுக்க உச்ச அமைப்பாக இந்தக் குழு விளங்கும். மத்திய–மாநில அரசுகளின் உறவுகள் குறித்த பல்வேறு அம்சங்கள் மற்றும் மாநிலத்தின் உரிமைகள் தொடர்பாக தமிழக அரசின் கருத்துக்கள் இக்குழுவின் கூட்டத்தில் எடுத்துக் கூறப்பட்டுள்ளன.

**9.** தஞ்சை விவசாயிகள் சார்பாக உச்சநீதி மன்றத்தில் தொடரப்பட்ட வழக்கின் காரணமாகவும், அந்த வழக்கில் தன்னையும் இணைத்துக் கொண்டு நமது அரசு வாதாடியதன் காரணமாகவும், சட்டப் பேரவைத் தீர்மானம் நிறைவேற்றி மத்திய அரசைக் கேட்டுக் கொண்டதன் காரணமாகவும், 1990 ஜூன் திங்களில் மத்திய அரசு காவிரி நீர்ப் பங்கீட்டுப் பிரச்சினையை நடுவர் மன்றத்திற்கு அனுப்பியது. கருநாடகம் தண்ணீரைத் தேக்கிவிட்டதால், ஏறத்தாழ 12 இலட்சம் ஏக்கரில் உள்ள ஒருபோக நெற்பயிர் கூட நீரின்றி வாடுகிறது என்பதிலிருந்தே இப்பிரச்சினை எந்த அளவிற்கு மிகவும் கவலை அளிக்கத்தக்கதாக உள்ளது என்பது தெளிவாகிறது. இப்பயிரைக் காப்பாற்றத் தண்ணீரை விடுவிக்கக் கருநாடக அரசுக்குக் கட்டளையிடுமாறு கோரி இந்த அரசு நடுவர் மன்றத்திடம் முறையிட்டது. நடுவர் மன்றமோ சட்டவிதி நுட்பக் காரணங்களைக் காட்டி இந்த அரசின் முறையீட்டை நிராகரித்து விட்டது. வாடிக் கொண்டிருக்கும் பயிர்களைக் காப்பாற்ற நமது பிரதமர் எடுத்துள்ள முயற்சிகளுக்கு நன்றி தெரிவிப்பதுடன், தேவையான தண்ணீரை கருநாடக அரசு வழங்கும் என்று நம்புகிறோம்.

**10.** மத்தியில் முன்னர் இருந்த அரசு அறிவித்த வேளாண்மை கிராமப்புறக் கடன் நிவாரணத் திட்டத்தை முழுமையாகச் செயல்படுத்திய முதல் மாநிலம் தமிழ் நாடாகும். விவசாயிகள், கிராமப்புறக் கைவினைஞர்கள் வாங்கிய கடன்களில் ரூ. 10,000 வரை தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது. இந்த வகையில் கூட்டுறவு வங்கிகளும் வணிக வங்கிகளும் தள்ளுபடி செய்த மொத்தத் தொகை ரூ. 508.15 கோடியாகும். இதனால் 18.88 இலட்சம் பேர் பயனடைந்துள்ளனர்.



வேளாண்மையை ஒரு பெருந் தொழிலாகக் கொண்ட விவசாயிகள் நிறைந்த இந்தியத் திருநாட்டிலேயே முதன் முதலாக விவசாயிகள் அனைவருக்கும் பாசன விசையேற்றத்துக்கான மின்சாரத்தை இலவசமாக வழங்கியுள்ளது, நமது தமிழ் மாநில அரசுதான் என்பதை மகிழ்ச்சி பொங்க தெரிவித்துக் கொள்கிறேன். இதனால் பயனடைந்துள்ள விவசாயப் பெருங்குடிமக்கள் 12 இலட்சம் பேர்.

**11.** நடப்பாண்டில் பெய்த மழை மொத்தத்தில் மனநிறைவளிப்பதாக இல்லை. வடகிழக்குப் பருவமழை ஏழு மாவட்டங்களில் 20 சதவீதத்திற்கு மேற்பட்டு குறைவாகப் பெய்துள்ளது. அரசு மேற்கொண்ட பல்வேறு நடவடிக்கைகள் பயிர் விளைச்சல் குறையாதிருக்க உதவியுள்ளன. கருநாடக அரசு காவிரியில் தண்ணீர் திறந்து விட்டால், அரிசி உற்பத்தி முன்பு எப்பொழுதும் எய்தப்படாமல், சென்ற ஆண்டில் மட்டும் எய்தப் பெற்ற 62 இலட்சம் டன் என்ற அளவில் இருக்கும் என நம்புகிறோம். சிறு தானியங்கள் உற்பத்தி 15 இலட்சம் டன்னாகவும், பயறுவகை உற்பத்தி 4 இலட்சம் டன்னாகவும் இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. 24.25 இலட்சம் டன் அளவுக்கான கரும்பு உற்பத்தி ஒரு சாதனையாக விளங்கும். பருத்தி உற்பத்தி 5.3 இலட்சம் பொதிகளாக இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

**12.** தலைமைச் செயலாளர் தலைமையில் நிதித்துறை செயலாளர், வேளாண்மை உற்பத்தி ஆணையர் ஆகியோர் உள்ளிட்ட குழு 1990 டிசம்பரில் வாஷிங்டன் சென்று உலக வங்கி அதிகாரிகளுடன் வெற்றிகரமாகப் பேச்சு வார்த்தைகளை நடத்தி, தமிழ்நாட்டில் ரூ. 310 கோடி செலவிலான வேளாண்மை வளர்ச்சித் திட்டத்தைச் செயல்படுத்த வகை செய்துள்ளது. இத்திட்டம் தமிழ்நாட்டில் விதை உற்பத்தி வசதிகளை வலுப்படுத்தும். பாலாறு, வெள்ளாறு வடிநிலத்தில் 1,35,000 ஏக்கர் நிலத்தில் நீர்வரத்துப் பகுதி மேம்பாட்டுப் பணியும் (Water shed development) மேற்கொள்ளப்படும். மேற்குமலைத்தொடர் நெடுக 90,000 ஏக்கர் பரப்பளவில் புதிதாகக் காடு வளர்ப்புத் திட்டம் ஒன்று மேற்கொள்ளப்படும். மாநிலம் முழுவதிலும் கால்நடைகளுக்கான மேம்பட்ட மருத்துவப் பணிகளுக்கும் உறைவிந்து அளிக்கும் பணிகளுக்கும் இத்திட்டம் உதவும். கிராமப்புற குடிநீர் வழங்கும் திட்டங்கள் வடஆற்காடு–அம்பேத்கர், தென் ஆற்காடு, சேலம், தருமபுரி ஆகிய மாவட்டங்களில் மேற்கொள்ளப்படும். செங்கை - அண்ணா, வடஆற்காடு - அம்பேத்கர், தென்ஆற்காடு, திருச்சிராப்பள்ளி, தஞ்சாவூர் ஆகிய மாவட்டங்

> "இந்த அரசு, சமயச் சார்பின்மைக் கொள்கைகளை முற்றிலும் செயல் படுத்துவதில் உறுதியாகவுள்ளது. மேலும், இம்மாநிலத்தில், வகுப்புக் கலவரத் தூண்டுதல்களுக்கு இந்த அரசு இம்மியளவுகூட இடமளிக்காமல், வருமுன் காக்கும் திட்டங்களையும், வந்தபின் உடனடியாகத் தடுத்து நிறுத்தும் செயல்பாடுகளையும் கடைப்பிடித்து வருகிறது."

"இந்தியத் திருநாட்டிலேயே முதன் முதலாக விவசாயிகள் [illegible]

களில் 800 கிலோ மீட்டர் தொலைவுக்கு கிராமப்புற அங்காடிச்சாலைகள் அமைப்பதற்கான திட்டம் செயல்படுத்தப்படும்.

**13.** இம்மாநிலத்தில் உள்ள ஒவ்வொரு குடிமகனுக்கும் விரிவான பாதுகாப்பு ஏற்பாடு அளிக்க வேண்டும் என்பதே அரசின் உறுதியான கொள்கையாகும். இந்தப் பாதுகாப்பு ஏற்பாட்டில் அடிப்படைத் தேவைகளான உணவு, உடை, உறையுள் ஆகியவற்றை அளிப்பதும், கருவுற்ற மகளிர், குழந்தைகள், உடலூனமுற்றவர்கள், ஆதரவற்றவர்கள் ஆகிய பலவீனப் பிரிவினருக்குப் பாதுகாப்பு அளிப்பதும் அடங்கும். நமது கொள்கைகளும் திட்டங்களும் இந்த நோக்கத்தை அடையும் வகையில் அமைந்தவையாகும்.

**14.** இந்த அரசு ஆட்சிப் பொறுப்பை ஏற்றபோது அரிசிப் பற்றாக்குறை மிகக் கடுமையாக இருந்தது. திறமையாக நிருவகிக்கப் பட்டதால், இன்று, நிலைமை மிகவும் சீராக உள்ளது. நமது கிடங்குகளில் 3.6 இலட்சம் டன் என்ற பெருமளவிற்கு அரிசியை நாம் தற்போது இருப்பில் வைத்துள்ளோம். இதனால் ஒரு குடும்பம் சாதாரணமாக மாதமொன்றுக்கு பெறக்கூடிய 12 கிலோ அரிசி அளவிற்கு மேல் 8 கிலோ பச்சரிசியைக் கூடுதலாக வழங்க முடிந்துள்ளது. ஒரு கிலோ ரூ. 3.25 என்ற மிகச் சன்னரக அரிசியின் விலையையும், ஒரு கிலோ ரூ. 2.75 என்ற சன்னரக அரிசியின் விலையையும் 1990-ம் ஆண்டு டிசம்பர் திங்கள் 1-ம் நாள் முதல், ஒரு கிலோ ரூ. 2.50 என்ற ஒரே விலையாக இவ்வரசு குறைத்துள்ளது. இதனால் உணவுப் பொருள்களுக்காக வழங்கப்படும் மானியத் தொகையின் அளவு ரூ. 195 கோடியிலிருந்து ரூ. 256.62 கோடியாக உயர்ந்துள்ளது.

**15.** பொது விநியோக முறையின் செயல்பாட்டை மேம்படுத்த சில முக்கியமான நடவடிக்கைகளை நாம் மேற்கொண்டுள்ளோம். நியாயவிலைக் கடைகளில் உள்ள விற்பனையாளர்களுக்கு தொகுப்பு ஊதியம் ரூ. 250 ஆக இருந்தது. அவர்களின் நீண்டகால கோரிக்கையை ஏற்று 1990 ஜூன் முதல் இதனை ரூ. 350 ஆக உயர்த்தி இந்த அரசு அளித்து வருகின்றது. **அந்த விற்பனையாளர்களின் முறையீட்டை மேலும் பரிசீலித்து நியாய விலைக் கடைகளில் அவர்களது பணி, கடமை உணர்வுடனும் கண்ணியமாகவும் நடைபெற வேண்டும் என்ற நோக்கத்துடன் 1—2—1991 முதல் அவர்களது தொகுப்பு ஊதியம் ரூ. 500 ஆக உயர்த்தப்படுகின்றது.**

மேலும், முதற்கட்டமாக, 1,200 குடும்ப அட்டைகளுக்கு மேல் பதிவு செய்யப்பட்டுள்ள கடைகள் இரண்டாகப் பிரிக்கப்படுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இந்த நடவடிக்கை மேலும் தொடரப்பட்டு எந்த ஒரு கடையிலும் குடும்ப அட்டைதாரர்களின் எண்ணிக்கை 800-க்கும் அதிகமாகாமல் இருக்கும்படி வகை செய்யப்படும்.



**16.** ஏற்கனவே செய்யப்பட்ட ஆய்வின்படி 10,323 குடியிருப்புகளில், ஏதேனும் ஒருவகையில் குடிநீர் வழங்கும் பணி நிறைவேற்றப்பட வேண்டியிருந்தது. 1990 ஜூன் திங்களுக்குள் இந்தக் குடியிருப்புப் பகுதிகளில் குடிநீர் வசதி ஏற்படுத்தப் பட்டது. இஃதன்னியில் வேறு சில குடியிருப்புப் பகுதிகளில், எந்தவொரு முறையிலும் குடிநீர் வழங்கப்பெறவில்லை என்று முறையீடுகள் வந்ததன் பேரில், இந்த அரசு விரிவான மறு ஆய்வு ஒன்றை நடப்பாண்டில் மேற்கொண்டது. 5,885 குடியிருப்புப் பகுதிகள் இன்னும் எவ்வித குடிநீர் வசதியையும் பெறாத நிலையிலுள்ளன என்று இந்த ஆய்விலிருந்து தெரியவந்துள்ளது. இந்த குடியிருப்புப் பகுதிகள் அனைத்துக்கும் 1991-க்குள் குடிநீர் வசதிகளைச் செய்து கொடுத்து விடுவோம்.

**17.** கைத்தறித் துணிகளுக்கு அளிக்கப்படும் தள்ளுபடி ஓர் ஆண்டில் 100 நாட்கள் என்று அதிகரிக்கப்பட்டுள்ளது. இவ்வாறு தள்ளுபடி அளிப்பது ஒவ்வொரு மாதமும் 6-ம் தேதியிலிருந்து 10-ம் தேதி முடிய கிடைக்குமாறு செய்யப்பட்டுள்ளது. இதனால் ஏழை எளிய மக்களுக்கு மலிவு விலையில் துணிகள் கிடைப்பதுடன் கைத்தறி நெசவாளர்களுக்குத் தொடர்ந்து வாழ்க்கை ஆதாரத்திற்கும் வழிவகுக்கும்.

**18.** அனைத்துத் தரப்பு மக்களுக்கும் வீட்டு வசதி செய்து கொடுக்க இந்த அரசு பல திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது. தமிழ்நாடு நகர்ப்பகுதி வளர்ச்சித் திட்டத்தின் கீழ், சென்னை மாநகரிலும் மேலும் 9 நகர்க்கூட்டுப் பகுதிகளிலும் வசதி வாய்ப்புகள் கொண்ட 70,000 வீட்டு மனைகளுக்கு வகை செய்ய திட்டமிடப்பட்டு இவற்றில், கடந்த இரண்டாண்டுகளில், 24,500 வீட்டு மனைகள் வழங்கப்பட்டுள்ளன. 500 நகரங்களில் வீடுகள் கட்டுவதற்குரிய புதிய திட்டம் தொடங்கப்பட்டுள்ளது. முதற்கட்டமாக 77 நகரங்களில் நிலங்கள் கண்டறியப் பட்டுள்ளன. குடிசைப்பகுதி மாற்று வாரியத்தின் சார்பில் குடிசைவாழ் மக்களுக்கு வீடுகளைச் சொந்தமாக ஆக்கிடும் புதிய திட்டமொன்று செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ், சுமார் 36,000 அடுக்குமாடி வீடுகள் எளிய தவணைத் தொகை செலுத்துவதன் பேரில் குடிசை வாழ் மக்களுக்கு உரிமையாகும். மூன்றாண்டுகளில் ரூ. 48 கோடி செலவில் குடிசை வாழ் மக்களுக்கு 12,000 அடுக்குமாடி வீடுகளைக் கட்டி முடிக்கும் நோக்கத்துடன் புதிய விரைவுத் திட்டமொன்று மேற்கொள்ளப்பட்டுள்ளது.

33 — ஆம் பக்கம் பார்க்க

"நியாய விலைக் கடைகளில் விற்பனையாளர்களது பணி, கடமை உணர்வுடனும், கண்ணியமாகவும் நடைபெற வேண்டும் என்ற நோக்கத்துடன் 1-2-1991 முதல் அவர்களது தொகுப்பு ஊதியம் ரூ.500 ஆக உயர்த்தப்படுகின்றது." (இது 1990 ஜூன் முதல் ரூ.350 ஆக இருந்தது)

# சிறுசேமிப்புத் துறை

முதலீடு செய்த அன்றே

## ஈடு இணையற்ற பலன்கள்

வங்கிகள் மற்றும்
பரஸ்பர நிதி
வழங்க இயலாத
சலுகைகள்



1.1.91 முதல்
31.3.91 வரை
ரூ.1000/- முதலீடு
செய்யும்
முதலீடுதாரர்களுக்கு
"விபத்துக் கால
இன்சூரன்ஸ்"
வசதி.

மூலதன சந்தையில் சிறுசேமிப்பு பிரத்யேக உரிமை வகிக்கிறது.

**சிறுசேமிப்பில் முதலீடு செய்த கோடிக்கணக்கான முதலீட்டாளர்கள் மற்றும் நிறுவனங்கள் அடையும் ஒப்பற்ற கூடுதல் சலுகைகளை பெறுங்கள்.**

முதலீட்டிற்கு அதிகபட்ச வட்டி

| திட்டம் | ஆண்டு | வட்டி விகிதம் |
|---|---|---|
| தேசிய சேமிப்புப் பத்திரம் 8ஆம் வெளியீடு | 5 | 15.82% |
| ,, | 6 | 16.91% |
| கிசான் விகாஸ் பத்திரம் | 5 | 17.6% |
| ,, | 5½ | 18.18% |
| இந்திரா விகாஸ் பத்திரம் | 5 | 20% |

**சிறப்பு அம்சங்கள்:**

- பாதுகாப்பான முதலீடு மற்றும் நம்பகமான வட்டி
- வங்கிகள், நிறுவனங்கள் அளித்திடாத உயர்ந்த வட்டி
- வருமானவரி மற்றும் சொத்து வரிவிலக்கு (பிரிவு 88ன்படி - NSC மற்றும் பிரிவு 5(1)ன்படி சொத்து வரிச்சலுகை)
- பிரிவு 88ன்படி வட்டிக்கு வருமான வரிவிலக்கு
- குழந்தைகளின் பெயரில் செய்யும் முதலீட்டிற்கு பிரிவு 88ன்படி வருமான வரிவிலக்கு
- வங்கிகளில் கடன்வசதி
- வாரிசுதாரர் நியமனவசதி
- ஒரு நபரிடமிருந்து மற்றொருவருக்கு எளிதில் மாற்றக் கூடிய வசதி
- எல்லா அஞ்சலகங்களிலும் காசோலை வசதி (சேமிப்பு கணக்கிற்கு)
- உங்கள் வீடு தேடி வரும் ஏஜென்டுகளின் வசதி.

**கூடுதல் சலுகைகள்:**

1.1.91 முதல் 31.3.91. வரை ஒவ்வொரு ரூ.500/- முதலீட்டிற்கும் ஒரு பரிசுக் கூப்பன் மூலம் 262 பரிசுகள்

★ ரூ.1000/-ம் அதற்கு மேலும் K.V.P., N.S.C. VIII Issue போன்ற சில குறிப்பிட்ட திட்டங்களில் செய்யும் முதலீட்டிற்கு 1% ஊக்கத்தொகை.

★ பங்கு மார்க்கட் தரகர்களுக்கு (Stock Brokers) 2% கமிஷன்

★ நிறுவனங்கள் இந்திரா விகாஸ் பத்திரத்தில் செய்யும் முதலீட்டிற்கு 10 ஆண்டுக்குப்பின் அதிகபட்ச வட்டியாக 54.66% பெறலாம்.

சேமிப்பு பத்திரம் அனைத்து அஞ்சலகங்களிலும் கிடைக்கும்

சிறுசேமிப்பின் அவசியம் பற்றிய இலவச விவரம் அறிய, தொடர்பு கொள்ளுங்கள்.


மாவட்டங்களில், மாவட்ட ஆட்சித்தலைவர் மற்றும்
இயக்குநர்
சிறுசேமிப்புத்துறை
143, அண்ணாசாலை,
சென்னை-600 002.
தொலைபேசி: 846209/840223

DIPR/30/SEMS/90DIARIES


பேரறிஞர் அண்ணா நினைவு நாள் பிப்ரவரி-3



# அண்ணா வரலாறானார்!




## புலவர் தமிழ்ப்பித்தன்

காஞ்சியில் பிறந்த அண்ணா
கருணையின் வடிவம் ஆகி
சாஞ்சியின் போதம் எல்லாம்
சாற்றினார் தமது சொல்லால்'
தீஞ்சுவைப் பனுவல் போலும்
தேன்பிழி சாற்றைப் போலும்
வாஞ்சையாய் அண்ணா தந்த
வாசகம் மறக்கப் போமோ!

"கனிவுடன் பணிவும் சேர
கடமையாய்த் துணிவும் ஓங்கி
பணியிலே சிறக்க வேண்டும்
பண்பினைக் காக்க வேண்டும்"
அணியென அண்ணா சொன்ன
அவ்வுரை பொன்னே ஆகும்;
பிணியினை நீக்கி மேன்மை
பெருக்கிடும் மருந்தும் ஆகும்!

ஏழையர் நலங்கள் பெற்றே
ஏற்றமாய் வாழ்வ தற்கும்
கோழையர் உரமே பெற்று,
குன்றென நிமிர்வ தற்கும்
ஊழையே மாற்று கின்ற
உயர்ந்ததோர் உள்ளம் கொண்டார்,
பேழையின் செல்வம் போன்ற
பெருமனம் படைத்த அண்ணா!

அண்ணலாம் காந்தி யைப்போல்
அன்பினைச் சொரிந்தார்; ஞானக்
கன்னலாம் வள்ள லார்போல்
அருள்நெறி பரப்பிச் சென்றார்;
கண்ணெலாம் சோதி மின்னும்
காவியத் தலைவர் அண்ணா
மண்ணெலாம் வணங்கி வாழ்த்த
மாபெரும் வரலா றானார்!





# திருவள்ளுவர் திருநாள்

**இரண்டாம் அட்டை சொல்லும் செய்தி :**

திருவள்ளுவர் திருநாள் 15.1.91 அன்று சென்னை வள்ளுவர் கோட்டத்தில் மிகச்சிறப்பாக நடைபெற்றது.

தமிழ் வளர்ச்சிப் பண்பாட்டுத் துறைச் செயலர் டாக்டர் ஔவை நடராசன் அவர்கள் அனைவரையும் வரவேற்றார்.

மாண்புமிகு கல்வியமைச்சர் பேராசிரியர் க.அன்பழகன் அவர்கள் விழாவிற்குத் தலைமை வகித்துப் பேசுகையில்—

"எந்த ஒரு சமயத்துக்கும் ஆட்படுத்திக் கொள்ளாமல், மக்களுக்காக மொழியைப் பயன்படுத்தியவர் திருவள்ளுவர்.

"கம்பராமாயணத்தை ஆங்கிலத்தில் மொழிபெயர்ப்பது இராமாயணத்தைப் பரப்புவதற்காக அல்ல. இலக்கியத்தைப் பரப்புவதற்காகவே" என்றார்.

திருச்சி, பாரதிதாசன் பல்கலைக் கழகப் பேராசிரியர் டாக்டர் க.செல்லப்பன் அவர்கள் பேசுகையில், 'திருக்குறளை தேசிய நூலாக ஆக்க வேண்டும்' என்று குறிப்பிட்டார்.

முறைசாரா-வயது வந்தோர் கல்வித் துறைத் தலைவர் பேராசிரியர் டாக்டர் மா.நன்னன் அவர்கள், குறள்வழி வாழ வேண்டும் என்றும், குறளை வாழ்க்கையில் கடைப்பிடிக்க வேண்டும் என்றும் வலியுறுத்தினார்.

பெரும்புலவர் புதுவை சுந்தர சண்முகனார் அவர்கள் பேசுகையில், 'திருக்குறளை உலகப் பொதுமறையாக ஆக்க வேண்டும்' என்றார்.

மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள், திருவள்ளுவர் விருதும், சிறந்த நூல்களுக்குப் பரிசுகளும், அகவை முதிர்ந்த தமிழறிஞர்களுக்கு நிதியுதவியும் வழங்கினார். தமிழக அரசு பதிப்பித்த பல்லவர், பாண்டியர் வரலாறு, கம்பராமாயண ஆங்கில மொழியாக்க நூல்களையும் வெளியிட்டார்.

இந்த நூல்களின் முதல் பிரதிகளை மாண்புமிகு கல்வியமைச்சர் பேராசிரியர் க.அன்பழகன் அவர்கள் பெற்றுக் கொண்டார்.

சிறந்த நூல்கள் எழுதிய 28 நூலாசிரியர்களுக்குப் பரிசுகளும், அவற்றை வெளியிட்ட பதிப்பாளர்களுக்குச் சான்றிதழ்களும் வழங்கப்பட்டன. அகவை முதிர்ந்த தமிழறிஞர்கள் 21 பேருக்கு நிதியுதவியும், பெரும்புலவர் புதுவை சுந்தர சண்முகனார் அவர்களுக்குத் திருவள்ளுவர் விருதும் வழங்கப்பட்டது.

**திருவள்ளுவர் திருநாளை முன்னிட்டு, வள்ளுவர் கோட்டத்தில் உள்ள திருவள்ளுவர் சிலைக்கு மாண்புமிகு முதல்வர் கலைஞர், மாண்புமிகு சட்டமன்றப் பேரவைத் தலைவர் மற்றும் மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் மாலை அணிவித்தார்கள் (15.1.91).**





**நூலாசிரியர்கள் பரிசு பெறுகிறார்கள்.**

விழாவில், மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் உரையாற்றுகையில் குறிப்பிட்டார்:

"தமிழர் திருநாளைத் தொடர்ந்து, வள்ளுவர் கோட்டத்தில் நடைபெறுகின்ற இந்த இனிய திருவள்ளுவர் திருநாள் விழாவில், பெரும் புலவர் புதுவை சுந்தர சண்முகனார் அவர்களுக்குத் திருவள்ளுவர் விருது வழங்கியும், பல்வேறு துறைகளில் சிறந்த நூல்களை எழுதிய பெருமக்களுக்கு முதல் பரிசு, இரண்டாவது பரிசு, மூன்றாவது பரிசு எனப் பரிசுகளை வழங்கியும், அகவை முதிர்ந்த தமிழறிஞர்களுக்குத் திங்கள் தோறும் உதவிப்பணம் பெறுவதற்கான தொடக்க நிகழ்ச்சியாக இருபதுக்கு மேற்பட்டவர்களுக்கு அடையாளமாக அந்த நிதியினை வழங்கியும் பல்லவர், பாண்டியர் வரலாறு அடங்கிய நூலை வெளியிட்டும் கம்பராமாயண ஆங்கில மொழியாக்க நூல்களை உலகுக்கு அறிமுகப்படுத்தியும் அந்த நிகழ்ச்சிகளையெல்லாம் ஆற்றுகின்ற பெரும் வாய்ப்புப் பெற்றமைக்காக நான் மிகுந்த மகிழ்ச்சியடைகின்றேன்.

"வள்ளுவர் கோட்டம் பல விழாக்களைக் கண்டிருக்கிறது. அதிலும் குறிப்பாக நான்கு, ஐந்து நாட்களாகப் பல்வேறு வகையான விழாக்களைக் கண்டிருக்கிறது. உலகத் திரைப்படத் திருவிழா நிகழ்ச்சிகளின் ஒரு பகுதியாக இந்தக் கோட்டத்து மண்டபத்தில் விருந்து நிகழ்ச்சிகள் நடைபெற்றன. ஆசிரியப் பெருமக்களுடைய மாநாடு ஒன்று நடைபெற்றது. இன்றைக்குத் திருவள்ளுவர் விழா நடைபெறுகிறது. நான் உள்ளபடியே எண்ணினேன். ஏன், ஐயுற்றேன்! நாள் தோறும் பல்லாயிரக்கணக்கான மக்கள் இந்த மண்டபத்தில் குழுமி, மண்டபம் நிரம்பி வழிகின்ற அளவிற்கு விழாக்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கும்பொழுது திருவள்ளுவர் திருநாளுக்கு கூட்டம் வருமா என்று சந்தேகத்தோடுதான் இந்த விழாவிற்கு வந்தேன். ஆனால், "இன்னும் தமிழன் உயிரோடு இருக்கிறான்; அவன் வள்ளுவன் கற்பித்த மானத்தோடு வாழ விரும்புகிறான்" என்பதற்கு அடையாளமாக இந்த மாமன்றத்தில் நீங்கள்- பெருந்திரளாகக் குழுமியிருக்கின்றீர்கள்.

"இன்று காலையில் நானும் நம்முடைய பேராசிரியர் அவர்களும், சட்டப்பேரவைத் தலைவர் அவர்களும், அமைச்சர் பெருமக்களும், மற்றும் தமிழ்ச் சான்றோர்களும் வள்ளுவர் கோட்டத்திலே காலை எட்டு மணி அளவில் திருவள்ளுவர் சிலைக்கு மாலை அணிவித்து வணங்கிச் சென்றோம்.

"இன்றைக்குக்கூட பல பேருக்கு வள்ளுவர் கோட்டம் என்றால் இந்த மேடையும், எதிரே பார்வையாளர்கள் அமர்ந்திருக்கின்ற இந்த இடமும் மாத்திரம்தான் தெரியும். இங்கே உள்ள படிக்கட்டிலே ஏறிச் சென்றால், மேல் தளத்திலிருந்து அழகுற அமைக்கப்பட்டிருக்கின்ற தேரின் கம்பீரமான காட்சியைக் காணலாம் என்று கூடத் தோன்றாது. அதையும் கூடக் காண நேரலாம். ஆனால், இந்தக் கோட்டத்தினுடைய தாழ்வாரத்தை ஒட்டியுள்ள மேல்பகுதியில் திருக்குறள் பல இடங்களிலே எழுதப்பட்டு அதற்கான ஓவியங்கள் தீட்டப்பட்டிருக்கின்றன. அந்தக் காட்சிகள் பல பேருக்குத் தெரியாது.

"இங்கே முன் வரிசையில் அமர்ந்திருக்கின்றவர்கள், இந்த மேடையில் நடைபெறுகின்ற ஒரு நிகழ்ச்சியைக் காண முயன்றால் மேடையில் இருப்பவர்களுடைய இடுப்புக்கு மேலேதான் உருவம் தெரியும். நடன நிகழ்ச்சியென்றால் இதிலே மிக முக்கியமாக நடனமாடுகின்றவர்களுடைய முகம், அவர்கள் தாளத்திற்கு ஏற்ப ஆடுகின்ற பாத லயம் இவைகள்தான் முக்கியம். இந்த மேடையிலிருந்து நடனம் ஆடும் போது, முன்வரிசையிலே அமர்ந்திருப்பவர்களுக்கு ஆடுகின்றவர்களுடைய கால் தெரியாது. அனுபவத்தால் அங்கே உட்கார்ந்து பார்த்த காரணத்தால சொல்லுகிறேன். எனவேதான், இந்தக் குறையையெல்லாம் போக்க வேண்டும் என்பதற்காக ஒரு மகிழ்ச்சிகரமான செய்தியை உங்களுக்குச் சொல்கிறேன்.

"இந்தக் குறைகளைப் போக்கி மீண்டும் இந்த வள்ளுவர் கோட்டம் அழகுற விளங்குவதற்கு அரசின் சார்பாக, ஏறத்தாழ 25 இலட்ச ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது என்பதை இந்த வள்ளுவர் நாளில் நான் மிகுந்த மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன். அந்தப் பணிகள் இன்னும் சில நாட்களில் தொடங்கும். அந்தப் பணிகள் தொடங்கி முடியும் வரை நிகழ்ச்சிகள் இங்கே நடத்துவதற்கு வாய்ப்பளிக்கப்பட மாட்டாது என்பதையும் நான் தெரிவிக்க வேண்டியவனாக இருக்கின்றேன். இந்த முயற்சிக்கு அனைவரும் ஒத்துழைப்புத்தர வேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறேன்.

"இன்று நடைபெறுகிற இந்த நிகழ்ச்சியில் திருவள்ளுவர் விருது ஒரு பெரும்புலவருக்கு வழங்கப்பட்டு 20 ஆயிரம் வெண் பொற்காசுகளும் அவருக்கு அளிக்கப்பட்டிருக்கிறது. இங்கே அவ்வை நடராசன் குறிப்பிட்டதைப்போல் ஏற்கெனவே பத்தாயிரம் ரூபாயாக இருந்ததை, இருபதாயிரம் ரூபாயாக உயர்த்தி இப்போது வழங்கப்பட்டிருக்கிறது.

"அதைப்போலவே பல்வேறு துறைகளிலே நூல்களை இயற்றிய இருபதுக்கு மேற்பட்டவர்கள் இன்றைக்குப் பரிசுகள் பெறுகிறார்கள், பாராட்டுகள் பெறுகிறார்கள். இந்தத் திட்டத்தைத் தொடங்கியவர்களை நாம் மறந்துவிடக் கூடாது. இது 1947-ஆம் ஆண்டிலேயே தொடங்கப்பட்ட திட்டமாகும். அன்றைக்கு இரண்டே பரிசுகள். 1971-இல் நாங்கள் முன்பு ஆட்சிப் பொறுப்பில் இருந்தபோது அந்த முதல் பரிசு ஆயிரம் ரூபாயை, இரண்டாயிரம் ரூபாய் என்றும், இரண்டாவது பரிசு ஆயிரம் ரூபாய் என்றும் மாற்றி அமைத்து வழங்கினோம். 1971-க்குப் பிறகு 1989 வரையில் எந்த மாறுதலும் இல்லை. ஆனால், வேறு எத்தனையோ மாறுதல்கள் செய்யப்பட்டன. பெயர்கள் எல்லாம் கூட மாற்றப்பட்டன. ஆனால், இவர்களுக்கு இந்தத் தொகையை உயர்த்தித் தரவேண்டும் என்கிற மாறுதல் யாருடைய மனதிலும் பிறந்ததில்லை.

"கடந்த ஆண்டு நானும் பேராசிரியரும் எண்ணிப்பார்த்து, மூன்று பரிசுகள் என்று ஆக்கி, முதல் பரிசாக ஐந்தாயிரம் ரூபாயும், இரண்டாவது பரிசாக மூவாயிரம் ரூபாயும், மூன்றாவது பரிசாக ஆயிரம் ரூபாயும் இன்று அளிக்கப்பட்டுள்ளது. ஏறத்தாழ ஒரு இலட்சம் ரூபாய் அளவிற்கு- இன்றைக்கு இந்த விருதுகளின் காரணமாக, பரிசுகளின் காரணமாக வழங்கப்பட்டிருக்கிறது. இந்தத் தொகை தொடர்ந்து மேலும் மேலும் உயரும் என்பதையும் நான் இங்கே தெரிவித்துக்கொள்கிறேன். இன்றே உயருமா என்று யாரும் கேட்க மாட்டார்கள். தொடர்ந்து உயரும். தொடர்ந்து நாங்களும் இருந்து உயர்த்துவோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**"வள்ளுவர் கோட்டம் அழகுற விளங்குவதற்கு அரசின் சார்பாக, ஏறத்தாழ 25 இலட்ச ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது என்பதை இந்த வள்ளுவர் நாளில் நான் மிகுந்த மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன்!**

- முதல்வர் கலைஞர்

"தமிழகத்தின் வரலாறு ஒன்று எழுதப்பட வேண்டும் என்கின்ற எண்ணம் எங்களுக்கு ஏற்பட்டதற்குக் காரணம், இங்கே நன்னன் குறிப்பிட்டதைப்போல் ஆலமரத்தின் விழுதுகளாக நாங்கள் இருக்கின்ற காரணத்தால், இந்த இனத்தின் ஆலமரமாக விளங்கிய பேரறிஞர் அண்ணா அவர்கள் தமிழகத்தின் தலைநகரமான சென்னையில் உலகத் தமிழ் இரண்டாவது மாநாடு நடைபெற்றபோது, ஒரு கருத்தைத் தெரிவித்தார்கள். தமிழர்களின் வரலாறு பழங்காலத்திலிருந்து எழுதப்பட வேண்டும். அந்த வரலாறு எளிய நடையில் எழுதப்படவேண்டும், எல்லோரும் படித்து உணரத்தக்க வகையில் வரலாறு, எழுதப்பட வேண்டும், தமிழகத்திற்கென்று வரலாறு இல்லை, தமிழர்களுடைய வரலாறு மறைக்கப்பட்டு விட்டது. எனவே, அந்த வரலாற்றை எழுதிட வேண்டும் என்ற கருத்தைக் குறிப்பாக அறிவித்தார்கள்.

"அறிவித்த அண்ணா அவர்கள் நம்மை விட்டுப் பிரிந்து விட்டார்கள் என்றாலும்கூட, அந்த எண்ணம் நிறைவேற்றப்பட வேண்டும் என்கின்ற அவாவுடன், 1970-ஆம் ஆண்டில் சரியாக 18.8.1970 அன்று மறைந்த டாக்டர் மு.வ. அவர்களுடைய தலைமையில் பேரறிஞர்கள் தமிழ்ப் புலவர்களுடைய குழு ஒன்று தமிழக அரசின் சார்பாக அமைக்கப்பட்டு, தமிழர்களுடைய வரலாற்றை எழுதுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டார்கள்.

"அந்தக் குழுவின் முதல் கூட்டத்தில் நான் சொன்னேன். சொன்னதை இங்கே திரும்பச் சொல்வது தவறாக இருக்காது என்பதால் தமிழ்ப் புலவர்களுக்கு மத்தியிலே கூறிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். அன்றைக்குச் சொன்னேன், எல்லோரும் ஒன்றாகச் சேர்ந்து ஒரு வரலாற்றைச் சொல்லுங்கள். இதிலே ஆளுக்கு ஆள் - ஒவ்வொருவரும் ஒரு ஆராய்ச்சி செய்து - தமிழ்நாட்டு மக்களைக் குழப்பாமல் எல்லோரும் சேர்ந்து ஒரு கருத்தைச் சொல்லுங்கள் என்று குறிப்பிட்டேன். இன்னும்கூடச் சொல்கிறேன். பொய்யைக் கூறுவதாக இருந்தாலும் எல்லோரும் சேர்ந்து சொல்லுங்கள் அதுவே வரலாறாக இருக்கட்டும் என்றுகூடச் சொன்னேன். ஏனென்றால், அவரவரும் ஒரு ஆராய்ச்சி செய்கின்ற காரணத்தால் எது சரியான வரலாறு, எது சரியான கருத்து என்று தெரியாமலேயே தமிழர்களுடைய வரலாறு சிதைந்து போய்விட்டது - வரலாறு சிதைந்தாலும் பரவாயில்லை. அந்த இனமே சிதைந்து விடக்கூடிய ஒரு சூழ்நிலை ஏற்பட்டு விட்டது. எனவே, அந்த இனம் சிதறாமல் இருக்க - அதனு



# அகவை முதிர்ந்த தமிழறிஞர்களுக்கு - விடுதலைப் போர்த் தியாகிகளுக்கு - மொழிக் காவலர்களுக்கு வழங்கப்படும் மாத உதவித்தொகை ரூ.400 ஆக உயர்ந்தது!

திருவள்ளுவர் பெயரால் நடைபெறுகின்ற இந்தத் திருவள்ளுவர் விழாவில், இன்னொரு மகிழ்ச்சிகரமான செய்தியையும் இங்கே தெரிவிக்க விரும்புகிறேன்.

இன்று அகவை முதிர்ந்த தமிழ் அறிஞர்களுக்கு மாதந்தோறும் 350 ரூபாய் வீதம் நிதி உதவி வழங்க மேலும் 21 பேர் இன்றைக்கு இணைக்கப்பட்டிருக்கின்ற செய்தி இங்கே அறிவிக்கப்பட்டது.

ஏற்கெனவே மொழிக் காவலர்கள் ஆயிரத்திற்கு மேற்பட்டவர்கள் இதுபோன்ற உதவிகளைப் பெறுகிறார்கள். அதற்கு முன்பிருந்தே விடுதலைப் போராட்டத் தியாகிகள் சுமார் ஐயாயிரம் பேருக்கு மேற்பட்டவர்கள் இந்த உதவியைப் பெறுகிறார்கள். அவர்களுக்கெல்லாம் 350 ரூபாய் உதவி வழங்கப்பட்டு வருகின்றது.

இன்று தமிழறிஞர்களுக்குச் சிறப்புச் செய்கின்ற வகையிலே தமிழறிஞர்கள் கலந்துகொண்டுள்ள விழாவாக இது இருப்பதால் - தமிழறிஞர்களுக்கு மிகவும் பிடித்தமான தமிழ் இலக்கியம் - அகநானூறு, புறநானூறு! எனவே, அந்த 350 ரூபாய் இன்று முதல், 400 ரூபாயாக மாறும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழறிஞர்களுக்கு மாத்திரம்தான் அகநானூறு, புறநானூறு என்றால் விடுதலைப் போராட்ட வீரர்களும் புறநானூறு படித்த காரணத்தால் அவர்கள் விடுதலைப் போராட்ட வீரர்களாக மாறினார்கள். அதைப்போல மொழிக் காவலர்களும் அகநானூறு படித்து அகம் காப்பாற்றப்பட வேண்டுமேயானால், புறம் காண வேண்டுமென்று புறநானூறு படித்து, அவர்களும் வீரர்களாக, மொழிக் காவலர்களாக இருக்கின்ற காரணத்தால், இந்த 400 ரூபாய் அவர்களுக்கும் பொருந்தும். இதன் காரணமாகப் பல இலட்ச ரூபாய் அரசுக்குக் கூடுதலாகச் செலவாகும் என்றாலுங்கூட, 350 ரூபாய் என்பது அகநானூறு, புறநானூறு என்பதன் அடையாளமாக, இன்று முதல் 400 ரூபாயாக உயர்த்தப்படும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

- திருவள்ளுவர் திருநாள் விழாவில் (15.1.91)
முதல்வர் கலைஞர்.

டைய மொழிப்பற்று சீர்குலையாமல் இருக்க - அதனுடைய ஒற்றுமை தழைக்க - ஒரே கருத்தைச் சொல்ல வேண்டும் என்று நான் அன்றைக்குச் சொன்னேன்.

"பொய்யாவது சொல்லுங்கள் என்று நான் அன்றைக்குச் சொன்னதற்குக் காரணம், எல்லோரும் ஒன்றாக ஒரே கருத்தைச் சொல்ல வேண்டும் என்பதற்காக - மிகைப்படுத்திச் சொன்ன கருத்தே தவிர - நாளைய தினம் பத்திரிகையாளர்கள், பொய் வரலாறு எழுதுங்கள் என்று கருணாநிதி புலவர்களைக் கேட்டுக் கொண்டான் 'என்று போட்டுவிடக் கூடாது என்பதற்காகச் சொல்கிறேன். ஒன்றுபட்டு ஒரே கருத்தைச் சொல்ல வேண்டும். அவரவர்கள் பல முனையிலே ஆராய்ச்சி செய்தாலுங்கூட, சரியானது தாங்கள் சொன்னதுதான் என்று பிடிவாதம் பிடிக்காமல், எது சரியென்று படுகிறதோ அதை ஒப்புக்கொள்கின்ற அளவிற்கு விட்டுக்கொடுத்து, தமிழர்களுடைய வரலாற்றை - தமிழ்நாட்டின் வரலாற்றை உருவாக்க வேண்டுமென்று அன்றைக்கு அமைச்சரவைக் கூட்டம் நடைபெறுகின்ற இடத்தில் நடைபெற்ற அந்தக் குழுக் கூட்டத்தில் நாவலரையும், பேராசிரியரையும் அருகே வைத்துக்கொண்டு அந்தப் புலவர் பெருமக்களை நான் கேட்டுக்கொண்டேன்.

"தொல் பழங்கால வரலாறு 1975-ஆம் ஆண்டு வெளியிடப்பட்டது. 1970-இல் எடுக்கப்பட்ட அந்த முயற்சி என்ற காரணத்தால் எப்போதும் - தொடங்குவதற்குச் சற்றுத் தாமதமாகும் என்ற வகையில், 75-ஆம் ஆண்டு வரையிலே அந்தப் பணி நீண்டு நடைபெற்று, தொல் பழங்கால வரலாறு 75-ஆம் ஆண்டு வெளியிட்டது. அதற்குப் பிறகு 1983-ஆம் ஆண்டு சங்க காலத்துத் தமிழர்களுடைய வரலாறு எழுதப்பட்டது - இரண்டு பகுதிகளாக; அதற்குப் பிறகு 91-இல் எட்டு ஆண்டுகளுக்குப் பிறகு பல்லவர், பாண்டியர் வரலாறு இன்றைக்கு வெளியிடப் பட்டிருக்கின்றது. தொடர்ந்து தமிழர்களுடைய வரலாறு- தமிழ் மன்னர்களுடைய வரலாறு

இவை அனைத்தும் வெளியிடப்பட வேண்டும் - எனக்குள்ள ஆசையை நான் கூற விரும்புகிறேன். இப்படித் தனித்தனியாகப் பல்லவர் வரலாறு, பாண்டியர் வரலாறு, சோழர் வரலாறு என்று எழுதப்பட்டாலுங்கூட, அவைகளும் பயன்படும் - வரலாற்றை உணர வேண்டுமென்று எண்ணுபவர்களுக்குப் பயன்படும் என்றாலுங்கூட, மொத்தத்தில் தமிழகத்தின் வரலாறு ஒரே புத்தகத்திலே வடித்துத் தரக்கூடிய ஒரு முயற்சியும் ஏற்பட வேண்டும் என்பதை நான் எடுத்துக்காட்ட விரும்புகிறேன்.

"அதிலே சோழர் வரலாம், பாண்டியர் வரலாம், சேரர் வரலாம், பல்லவர் வரலாம், அனைவரும் வரலாம். அப்படி மொத்தத்தில் அன்று முதல் இன்று வரை ஒரே புத்தகமாகத் தனித்தனிப் புத்தகங்களும் தேவை என்றாலுங்கூட, மொத்தமாக ஒரே வரலாறாக ஒரே நூலில் அடங்கத்தக்க வரலாறாக எழுதப்பட வேண்டுமென்ற என் ஆசையினைத் தெரிவித்துக் கொள்கிறேன். அதற்குப் புலவர் பெருமக்கள் முன்வரவேண்டும் அப்படி முன் வருகின்ற நேரத்திலே தங்களுடைய கருத்துக்களை இந்த அரசுக்குத் தெரிவிக்கவேண்டும்.

# திருவள்ளுவர் விருது பெற்ற புதுவை சுந்தர சண்முகனார்



தமிழ்நாடு அரசு ஆண்டுதோறும் திருக்குறள் நெறி பரப்பும் பெருந்தகையாளர் ஒருவரைத் தெரிவு செய்து, அரசு சார்பில் நடத்தப்பெறும் திருவள்ளுவர் திருநாள் விழாவில், அவருக்குத் திருவள்ளுவர் விருது வழங்கிச் சிறப்பிக்கின்றது.

இதுவரை திருவள்ளுவர் விருது பெற்றவர்கள்:

1. தவத்திரு குன்றக்குடி அடிகளார் (1986), 2. முத்தமிழ்க் காவலர் திரு. கி.ஆ.பெ. விசுவநாதம் (1987), 3. திரு. ச. தண்டபாணி தேசிகர் (1988), 4. திரு. வ. சுப. மாணிக்கம் (1989), 5. திரு. கு.ச. ஆனந்தன் (1990).

**1991 ஆம் ஆண்டிற்கு திருவள்ளுவர் விருது:**

பேராசிரியர் புதுவை சுந்தர சண்முகனார் அவர்கள், 1991- ஆம் ஆண்டிற்குத் திருவள்ளுவர் விருது வழங்கிப் பாராட்டப் பெறுதற்குரிய பெருமகனாராகத் தமிழக அரசால் தேர்ந்தெடுக்கப்பட்டு, 15.1.91 திருவள்ளுவர் திருநாள் விழாவில் அவருக்கு விருது வழங்கப்பெற்றது.

திரு. சுந்தர சண்முகனார், தென்னார்க்காடு மாவட்டம், புதுவண்டிப் பாளையத்தில் 13-7-1922-இல் பிறந்தார். பெற்றோர்: திரு. சுந்தரம், திருமதி அன்னபூரணி அம்மையார்.

திரு. சுந்தர சண்முகனார், திருப்பாதிரிப் புலியூர் ஞானியார் மடத்தில் தொடக்கக் கல்வியும், திருவையாறு அரசர் கல்லூரியில் செந்தமிழ்க் கல்வியும் பயின்றவர். தாமே வீட்டிலிருந்து கற்றே பி.ஏ., பட்டம் பெற்றவர்.

திருமயிலம் தமிழ்க் கல்லூரியில் தமிழ் விரிவுரையாளராகப் பணியைத் தொடங்கித் தொண்டுச் சிறப்பால் துணை முதல்வராக உயர்வு பெற்றவர். புதுவை அரசினர் ஆசிரியர் பயிற்சி மையத்தில் தமிழ்த் துறைத் தலைவராகவும், தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக் கழகத்தில் தொகுப்பியல் துறைத் தலைவராகவும் பணியாற்றியுள்ளார்.

இவர் எழுதிய நூல்கள் அறுபதுக்கு மேற்பட்டவை. திருக்குறள் நெறியில் ஈடுபாடு கொண்டு எழுதிய 'வள்ளுவர் கண்ட மனையறம்', 'வள்ளுவர் இல்லம்', 'திருக்குறள் தெளிவுரை', 'தெவிட்டாத திருக்குறள்' ஆகிய நூற்கள் இவரின் பெரும் புலமையின் விளைவுகள் ஆகும். திருக்குறள் நெறிபரப்புத் 'திருக்குறள் தெளிவு' என்னும் திங்களிருமுறை இதழ் ஒன்றையும் வெளியிட்டுள்ளார். உலகப் பல்கலைக் கழகம் இவருக்கு 'டாக்டர்' பட்டம் வழங்கியுள்ளது.

'பணக்காரர் ஆகும் வழி' என்னும் நூலை எழுதி நடுவணரசின் பரிசையும், 'தமிழ் அகராதிக் கலை' என்ற நூலை இயற்றித் தமிழக அரசின் பரிசையும், 'கவுதம புத்தர் காப்பியம்' யாத்து புதுவை அரசின் பரிசையும் இவர் பெற்றுள்ளார்.



அகவை முதிர்ந்த தமிழறிஞர் உதவித்தொகை பெறுகிறார்.

நானும் பேராசிரியரும் அதைப் பற்றிச் சிந்தித்து அதற்கு ஒரு குழுவை அமைத்தாவது, மொத்தத்தில் முழுமையான வரலாற்றைக் கொண்ட ஒரே நூல் வடிவத்தில் வரச் செய்வதற்கான வழிவகைகளை இந்த அரசின் சார்பில் செய்வதற்குச் சித்தமாக இருக்கிறோம் என்பதையும் இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

"ஏற்கெனவே ஒருமுறை அண்ணா அவர்களுடைய கரத்தாலும் அடுத்து என்னுடைய கரங்களாலும் விருதுகளைப் பெற்ற நம்முடைய புதுவைப் பெரும்புலவர் சுந்தர சண்முகனார் அவர்கள் இன்றைக்குத் திருவள்ளுவர் விருதினைப் பெற்றிருக்கிறார்கள்.

"இங்கே உரையாற்றும்போது பேராசிரியர் அவர்களும், மற்றவர்களும் சொன்னார்கள். திருவள்ளுவர் யாத்த திருக்குறள்தான் இந்தியாவின் தேசிய நூலாக ஆக வேண்டும் என்றெல்லாம் குறிப்பிட்டார்கள். பெரும்புலவர் சுந்தர சண்முகனார் அவர்கள் அது உலக நூலாகவே ஆக வேண்டுமென்று சொன்னார். என்னைப் பொறுத்தவரையில் திருக்குறளைத் தேசிய நூலாக ஆக்குவதென்பது, ஒரு பெரிய வட்டத்திற்குள்ளே இருக்கின்ற திருக்குறளை ஒரு சிறிய வட்டத்திற்குள்ளே கொண்டு வந்து அடைப்பது போலாகுமென்று நான் கருதுகிறேன். அது உலகப் பொதுமறையாக இன்றைக்கு விளங்கிக் கொண்டிருக்கிறது. அதனைத் தேசிய நூலாக ஆக்குவதன் மூலம் நாம் அதற்குப் பெரும் புகழை அளித்து விட்டோம் என்று கருத இயலாது."

விழா முடிவில் தமிழ் வளர்ச்சித் துறை இயக்குநர் திரு கு. சிவஞானம் அவர்கள் நன்றி நவின்றார்.

அன்று இரவு, மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்களின் 'தென்பாண்டிச் சிங்கம்' வரலாற்று நாடகம், கலைமாமணி ஹெரான் இராமசாமி நாடகக் குழுவினரால் நடத்தப்பட்டது.

— நமது செய்தியாளர்.



# மாநில கணக்காயர் அலுவலகம்
# (கணக்கு மற்றும் பணி வரவு)
# சென்னை-18

## "தமிழக அரசு ஊழியர்கள் கவனத்திற்கு"

தமிழக அரசின் ஊழியர்களின் பொது வருங்கால வைப்பு நிதியின் 1989-90-ஆம் ஆண்டிற்கான கணக்கு அறிக்கைகள் (GPF அக்கவுண்ட் ஸ்லிப்) அனுப்பப்பட்டு வருகின்றன என்பதையும், அவை 1991-ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 15-ஆம் தேதிக்குள் உங்களுக்கு அனுப்பப்பட்டுவிடும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறோம். இந்தக் கணக்கு அறிக்கைகள் 1990-ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் நீங்கள் பணி புரிந்த அலுவலகங்களுக்கு அனுப்பப்பட்டு வருகின்றன.

கணக்கு அறிக்கைகள் மிக்க கவனத்துடன் எந்தவிதக் குறைபாடும் இல்லாமல் தயாரிக்கத் தேவையான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. எனினும், தவிர்க்க இயலாத காரணங்களால் குறைகள் காணப்பட்டால், சம்பளப் பட்டியல் விவரங்களுடன் தங்கள் அலுவலக அதிகாரிகள் மூலமாகக் கீழ்க்கண்ட முகவரிக்கு எழுதவும்:

திரு. சி.வி. இராமன்,<br>
கணக்கு அலுவலர்,<br>
எப்.எம்.ஐ. பிரிவு, (F.M.I. Section)<br>
மாநில கணக்காயர் அலுவலகம்,<br>
261, அண்ணா சாலை, சென்னை-600 018.

என்றும் தங்களுக்காகப் பணிபுரியக் காத்திருக்கிறோம். தங்கள் பொது வருங்கால வைப்பு நிதியின் நியமனப் பத்திரம் (நாமினேஷன்) தாக்கல் செய்து விட்டீர்களா?

கணக்கு அலுவலர்

## மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவு திருமண உதவித் திட்டம்

மதுரை மாவட்டம், அலங்காநல்லூர் ஊராட்சி ஒன்றியத்தின் மூலம், திருமண உத்வி பெற்றவர் திருமதி க.பஞ்சவர்ணம்.

அவர் இந்தத் திட்டம் பற்றிக் கூறும்போது, 'தக்க சமயத்தில் கிடைத்த இந்த உதவி எனக்கு வாழ்க்கையை அமைத்துக் கொடுத்தது' என்று மகிழ்ச்சியுடன் கூறினார்.



திருமதி க. பஞ்சவர்ணம்

தனக்குக் கிடைத்த இந்த உதவி பற்றி அவர் மேலும் கூறுகையில்-

''எனது சொந்த ஊர் தனிச்சியம். எனக்கு 24 வயதாகிறது. நான் பி.ஏ. வரை படித்துள்ளேன். எனது தந்தை பெயர் கூழாச்சி. எங்களுக்கென்று குடியிருக்கும் சிறிய வீட்டைத் தவிர வேறு சொத்துக்கள் கிடையாது. எனக்கு ஒரு அண்ணனும் இருக்கிறார். என் அப்பாவும், அண்ணனும் கூலிவேலை செய்து என்னைப் படிக்க வைத்ததுடன், குடும்பத்தையும் காப்பாற்றி வந்தார்கள். எனக்கு வயது 24 ஆகியும் திருமணம் செய்துவைக்க நம்மிடம் வசதி வாய்ப்புகளில்லையே என எனது தந்தையும் அண்ணனும் கவலைப்பட்டுக் கொண்டிருந்தபோது, முதல்வர் கலைஞர் அவர்கள் அறிவித்துள்ள மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவு திருமண நிதியுதவித் திட்டத்தைப் பற்றி செய்தித் தாள்களில் அறிந்தேன். பிறகு இதுபற்றி அலங்காநல்லூர் வட்டார சமூகநல விரிவாக்க அலுவலர் திருமதி பாத்திமா பீவி அவர்கள் மூலம் விண்ணபித்தேன். எனக்கும் எனது உறவினர் திரு கண்ணனுக்கும் 12.2.1990-இல் திருமணம் எளிமையாக நடைபெற்றது. இந்தப் பண உதவி எங்களுக்குக் கிடைக்காவிட்டால், என் திருமணம் இன்னும் தள்ளிக்கொண்டேதான் போகும். இந்த உதவியை எங்களுக்கு வழங்கிய முதல்வர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்'' என்றார்.

வடுகப்பட்டியைச் சேர்ந்த திருமதி சூரியகலா கூறுகிறார்-

''நான் பத்தாம் வகுப்பு வரை படித்துள்ளேன். எனக்குத் தற்போது 23 வயது ஆகிறது. சிறு வயதிலேயே எனது தந்தையார் இறந்து விட்டார். எனக்கு உடன் பிறந்தவர்கள் இரண்டு தங்கைகள். எங்கள் அம்மா கூலிவேலை செய்து எங்களைக் காப்பாற்றி என்னையும் படிக்க வைத்தார். எனக்குத் திருமணம் செய்து



திருமதி சூரியகலா



திருமதி மகாலட்சுமி

வைக்க வசதி இல்லையே என்று என் அம்மா கவலையுற்றிருந்தபோது, முதல்வர் அவர்களின் இந்தத் திட்டம் பற்றி வட்டாரச் சமூகநல விரிவாக்க அலுவலர் மூலம் அறிந்து விண்ணபித்தேன்.

''எனக்கும், அலங்காநல்லூரைச் சேர்ந்த திரு கோவிந்தராஜ் அவர்களுக்கும் 3.6.1990 அன்று திருமணம் நடைபெற்றது. தமிழக அரசின் நிதியுதவி எங்கள் திருமணத்திற்குப் பேருதவியாக இருந்தது. ஏற்கெனவே கஷ்டத்தில் இருந்த எங்கள் குடும்பம், மேலும் கடன் சுமையில் மூழ்காமல் காப்பாற்றி என் திருமணத்திற்கு உதவி செய்த முதல்வர் அவர்களுக்கு எங்கள் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.''

அ. புதுப்பட்டியைச் சேர்ந்த திருமதி மகாலட்சுமி கூறுகிறார்-

''என் தந்தையும், தாயும் விவசாயக் கூலி வேலை செய்து என்னைப் படிக்க வைத்தார்கள். நான் பத்தாம் வகுப்பு வரை படித்துள்ளேன். எனக்கு இப்போது 24 வயதாகிறது. சாப்பாட்டுக்கே கஷ்டப்பட்டுக் கொண்டிருந்தோம். எனக்குத் திருமணம் செய்து வைக்க இயலாமல், பெற்றோர்கள் கவலைப்பட்டனர். அத்தருணத்தில் எங்கள் கிராமத்தில் மதுரை மாவட்டச் செய்தி மக்கள் தொடர்புத் துறையின் சார்பில் தமிழக அரசின் சாதனைகளையும், நலத்திட்ட உதவிகளையும் விளக்கி செய்திப் படங்கள் காண்பித்தார்கள். அதன்மூலம் 8-ஆம் வகுப்பு படி[...] ஏழைப்பெண்களுக்குத் [...] செய்து கொள்ள ரூ.5,000 நிதியுதவி செய்கிறார்கள் என அறிந்து வட்டாரச் சமூகநல விரிவாக்க அலுவலர் திருமதி பாத்திமா பீவி அவர்கள் மூலம் விண்ணப்பித்தேன்.

''எனக்கும் எங்கள் ஊரைச் சேர்ந்த சுப்பிரமணியம் அவர்களுக்கும் 8.11.1990 அன்று திருமணம் நடைபெற்றது. இந்தப் பண உதவி கிடைக்காவிட்டால் எனக்குத் திருமணம் செய்துவைக்க என் பெற்றோர்கள் மிகவும் கஷ்டப்பட்டிருப்பார்கள்''. ●



### அரசின் அறிவிப்புகள் ஆக்கப் பணிகள்

★ காட்பாடி அருகே தமிழ்நாடு தொழில் வளர்ச்சிக் கழகத்தின் சார்பில் 85 கோடி ரூபாய் செலவில் மோட்டார் பாகங்கள் மற்றும் இரும்புப் பவுண்டரி தொழிற்சாலை தொடங்கப்படுகிறதென்று மாவட்ட ஆட்சித் தலைவர் கூறினார் (21.12.90)

★ காவிரிப் படுகையிலே கிடைக்கும் பெட்ரோலிய எண்ணெய்யை மூலப்பொருளாகக் கொண்டு 5 இலட்சம் டன் திறன் கொண்ட சுத்திகரிப்பு ஆலை ஒன்று 120 கோடி ரூபாய் செலவில் நிறுவப்பட வுள்ளது என்று மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் தெரிவித்தார் (21.12.90).

## டாக்டர் முத்துலட்சுமிரெட்டி நினைவு மகப்பேறு உதவித் திட்டம்

மதுரை மாவட்டம், அலங்காநல்லூரைச் சேர்ந்த கீழ்க்காணும் மூவர், டாக்டர் முத்துலட்சுமிரெட்டி நினைவு மகப்பேறு உதவித் திட்டத்தின்கீழ் பயனடைந்தவர்கள். அவர்களைச் சந்தித்து இத்திட்டம் பற்றிக் கேட்டபோது அவர்கள் கூறினார்கள்:-



திருமதி சீதா

**திருமதி சீதா:**

''நான் 6-வது வார்டில் குடியிருக்கிறேன். என் கணவர் கூலி வேலை செய்கிறார். நான் கருவுற்றிருக்கும் போது, தமிழக அரசின் கர்ப்பிணிப் பெண்களுக்கு ரூ.200 நிதியுதவி செய்கிறது என கிராம நல செவிலியர் மூலம் அறிந்து விண்ணப்பம் செய்து நிதியுதவி பெற்றேன். அப்பணத்தின் மூலம் சத்தான வைட்டமின் மாத்திரைகளும், என் குழந்தைக்குத் தேவையான சொட்டு மருந்துகளும் வாங்கினேன். இப்பண உதவி, பேறுகாலத்தில் மிகவும் உதவியாக இருந்தது. இவ்வுதவி செய்த தமிழக அரசுக்கும், தமிழக முதல்வர் அவர்களுக்கும் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

**திருமதி பிச்சைக்கனி:**

''என் கணவர் கூலி வேலை செய்கிறார். அன்றாடச் சாப்பாட்டுக்கே மிகவும் கஷ்டமாக இருந்த நிலையில், எனக்குத் தேவையான சத்துணவு, வைட்டமின் மாத்திரை வகைகளை வாங்கிச் சாப்பிட இயலாத நிலை இருந்தது. அது சமயம், வட்டார சமூகநல விரிவாக்க அலுவலர் மூலம் நிதியுதவி பெற்றேன். எனது பேறு காலத்தில் இந்த உதவியைச் செய்த தமிழக அரசுக்கு நன்றி''.

திருமதி பிச்சைக்கனி



திருமதி மாரி



**திருமதி மாரி:**

''என் கணவர் கூலி வேலை செய்து வருகிறார். எனக்கு இரண்டாவது பெண் குழந்தை பிறந்துள்ளது. அரசாங்கத்தில் கர்ப்பிணிப் பெண்களுக்கு ரூ.200 உதவியாகக் கொடுக்கிறார்கள் என்பதை நர்ஸ் அம்மா மூலம் அறிந்து அவர் மூலம் விண்ணப்பித்தேன். இந்தத் தொகை கிடைத்ததால் பசி தெரியாமல் காய்கறி, மருந்து, மாத்திரை வாங்கிச் சாப்பிட்டுப் பயன் பெற்றேன். தமிழக அரசின் இந்த உதவி பேறுகாலத்தில் மிகவும் உதவியாக இருந்தது.''

- ச. பாண்டியன்
உதவி மக்கள் தொடர்பு அலுவலர்
மதுரை மாவட்டம்

சிறு சேமிப்பு:

# முத்தான மூன்று திட்டங்கள்

இந்தியாவிலேயே முதன் முதலாகச் சிறு சேமிப்புத் திட்டங்களில் முதலீடு செய்பவர்களுக்கு ''இன்ஸுரன்ஸ் திட்டம்'' ஒன்றைத் தமிழக அரசு அறிமுகப்படுத்தி உள்ளது.

இந்தச் சிறப்புத் திட்டத்தைத் தமிழக அரசு மத்திய அரசுக்குச் சொந்தமான ''யுனைடெட் இந்தியா இன்ஸுரன்ஸ் நிறுவனத்துடன்'' இணைந்து செயல்படுத்துகிறது. இத்திட்டத்தின் நோக்கம், தேசிய சேமிப்புத் திட்டங்களின் மூலம் மக்களிடையே சேமிக்கும் பழக்கத்தை வளர்ப்பதும், முதலீடுதாரர்களுக்கு ''விபத்துக்கான இன்ஸுரன்ஸ்'' சலுகைகளை அளிப்பதுமாகும்.

**திட்டத்தின் காலம்**

1.1.1991 முதல் 31.3.1991 வரை சிறு சேமிப்பில் தமிழ்நாட்டில் முதலீடு செய்தவர்களுக்கு, முதலீடு செய்த நாளிலிருந்து ஓராண்டுக் காலத்திற்கு இந்த ''இன்ஸுரன்ஸ் வசதி'' விபத்திற்குக் கிடைக்கும்.

**இன்ஸுரன்ஸ் கட்டணம் (Premium) செலுத்துதல்**

யுனைடெட் இந்தியா இன்ஸுரன்ஸ் நிறுவனத்திற்குச் செலுத்த வேண்டிய இன்ஸுரன்ஸ் கட்டணத்தைச் சிறுசேமிப்பு முதலீடுதாரர்களின் சார்பாகத் தமிழ்நாடு அரசே செலுத்தி விடுகிறது.

**தகுதி பெறும் திட்டங்கள்**

கீழ்க்கண்ட சிறுசேமிப்புத் திட்டங்களில் முதலீடு செய்பவர்களுக்கு, ஒரு சதவிகிதம் ஊக்கத் தொகையுடன் ''விபத்திற்கான இன்ஸுரன்ஸ் வசதியும்'' தமிழக அரசு அளிக்கிறது.

1. கிஸான் விகாஸ் பத்திரம், 2. தேசிய சேமிப்புப் பத்திரம் 8- வது வெளியீடு, 3. தேசிய சேமிப்புத் திட்டம் 1987, 4. 15 ஆண்டு பொது சேம நலநிதித் திட்டம், 5. அஞ்சலக மாதாந்திர வருவாய்த் திட்டம், 6. அஞ்சலக கால வைப்புத் திட்டம், 7. ஓய்வு பெறும் அரசு ஊழியர்களுக்கான சேமிப்புத் திட்டம் 1989.

**திட்டத்தின் பயன்கள்**

சிறுசேமிப்பு முதலீடுதாரர்களுக்கு ''விபத்திற்கான இன்ஸுரன்ஸ் திட்டம்'' மூலம் கீழ்க்கண்ட சலுகைகள் கிடைக்கும்:

முதலீடு தொகை ரூ.1,000 முதல் ரூ.10,000 வரை தனிநபர் விபத்திற்கான இன்ஸுரன்ஸ் தொகை ரூ.20,000, தமிழக அரசால் இன்ஸுரன்ஸ் நிறுவனத்திற்குச் செலுத்தப்படும் தொகை (ஆண்டிற்கு) ரூ.6.

முதலீடு தொகை ரூ.10,001 முதல் ரூ.20,000 வரை தனிநபர் இன்ஸுரன்ஸ்ரூ.30,000, தமிழக அரசால் இன்ஸுரன்ஸ் நிறுவனத்திற்குச் செலுத்தப்படும் தொகை (ஆண்டிற்கு) ரூ.9.

**அ·ரகுமான்கான்** எம்.எல்.ஏ.,
**துணைத் தலைவர்**
**மாநில தேசிய சிறுசேமிப்பு**
**ஆலோசனைக் குழு,**

முதலீடு தொகை ரூ.20,001 ம் அதற்கு மேலும் தனிநபர் விபத்திற்கான இன்ஸுரன்ஸ் தொகை ரூ.50,000, தமிழக அரசால் இன்ஸுரன்ஸ் நிறுவனத்திற்குச் செலுத்தப்படும் தொகை (ஆண்டிற்கு) ரூ.15.

**விபத்துச் சலுகைகள்**

அ. மரணம் மட்டும் - 100 சதவிகிதம்.

ஆ. இரண்டு கால்களையோ/கைகளையோ, இரண்டு கண்களையோ (அ) ஒரு கை/கால் மற்றும் ஒரு கண்ணை இழத்தல் - 100 சதவிகிதம்

இ. ஒரு கால்/கையோ (அ) ஒரு கண்ணை இழத்தல் - 50 சதவிகிதம்

ஈ. மேற்குறிப்பிட்ட வகைகளில் இல்லாமல் நிரந்தர முழுமையான தகுதியற்றவராக ஆக்கப்படும் காயங்களுக்கு - 100 சதவிகிதம்.

உ. நிரந்தர, பகுதி தகுதியற்றவராக ஆக்கப்படுவதற்கு, தகுதியற்ற நிலையைப் பொறுத்து.

**பாலிஸி சான்றிதழ்களை வழங்குதல்**

யுனைடெட் இந்தியா இன்ஸுரன்ஸ் நிறுவனம் அளிக்கும் பாலிஸி சான்றிதழ்களை முதலீடுகளுக்கான ஒரு சதவிதிகித ஊக்கத் தொகையுடன் சிறுசேமிப்பு இயக்குநர் அலுவலகத்திலும், மாவட்டங்களில் மாவட்ட ஆட்சித் தலைவரின் நேர்முக உதவியாளர் (சிறுசேமிப்பு) அலுவலகத்திலும் முதலீடுதாரகளுக்கும்/முகவர்களுக்கும் வழங்கத் திட்டமிடப்பட்டு வருகிறது.



1.1.1991 முதல் 31.3.1991 முடிய சிறு சேமிப்புத் திட்டங்கள் மூலம் ரூ.400 கோடி திரட்டப்படலாமென்றும், ஏறக்குறைய 3 இலட்சம் முதலீடுதாரர்கள் ஜனவரி மாதம் மட்டும் இன்ஸுரன்ஸ் திட்டத்தால் பயன் பெறலாமென்றும், சிறுசேமிப்புத் துறையால் எதிர்பார்க்கப்படுகிறது.

**மார்ச் 31, 1990 வரை சிறுசேமிப்பு இலவசப் பரிசுக் கூப்பன் திட்டம் விரிவுபடுத்தப்பட்டுள்ளது**

1.6.90 முதல் 31.12.90 முடிய சிறுசேமிப்பு முதலீடுகளுக்குச் செயல்படுத்தப்பட்டு வந்த ''இலவசப் பரிசுக் கூப்பன் திட்டம் '' 1.1.91 முதல் 31.3.91 வரையிலும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

**சென்னை நகரில் இலவசப் பரிசுக் கூப்பன் வழங்குதல்**

சென்னை நகரில் இதுவரை வெளியிடப்பட்ட 4 வரிசைகளில் ((A)) மற்றும் ((B)) வரிசைகளுக்கு ஏற்கெனவே குலுக்கல் நடத்தப்பட்டுவிட்டது, ((C)) மற்றும் ((D)) வரிசைக்கான குலுக்கல் சென்னையில் நடத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. மார்ச் 91 முடிய ஒவ்வொரு ரூ.5 கோடி முதலீட்டிற்கும், ஒரு இலட்சம் கூப்பன்கள் கொண்ட ஒரு வரிசை வெளியிடவும், ஏற்கெனவே ரூ.500 முதலீட்டிற்கு ஒரு கூப்பன் வழங்கி வந்தது போல், தொடர்ந்து முதலீடுதாரர்களுக்கு வழங்கிடவும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**மாவட்டங்களில் இலவசப் பரிசுக் கூப்பன் வழங்குதல்**

கீழ்க்கண்ட மாவட்டங்களில் (A) வரிசைக்கான குலுக்கல் எற்கெனவே நடத்தப்பட்டுவிட்டது.

பெரியார் மாவட்டம், சேலம் மாவட்டம், கோவை மாவட்டம், திருச்சி மாவட்டம்..

கீழ்க்கண்ட மாவட்டங்களில் (A) வரிசைக்கான குலுக்கல் விரைவில் நடத்தப்பட இருக்கிறது.

செங்கை — அண்ணா மாவட்டம், தென் ஆர்க்காடு மாவட்டம், நெல்லை-கட்டபொம்மன் மாவட்டம், திருவண்ணாமலை- சம்புவராயர் மாவட்டம்.

இதர அனைத்து மாவட்டங்களிலும், உடனடியாக (A) வரிசைக்கான குலுக்கல் நடத்த மாவட்ட ஆட்சியர்களுக்கு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது.

**மார்ச் 91 முடிய ஊக்கத்தொகை முதலீடுதாரர்களுக்கு வழங்கும் திட்டம் நீடிக்கப்பட்டுள்ளது.**

1.6.90 முதல் 31.12.90 வரை சிறுசேமிப்பு முதலீடுதாரர்களுக்குத் தமிழக அரசால் வழங்கப்பட்டு வந்த ஒரு சதவிகித ஊக்கத்தொகை வழங்கும் திட்டம், 1.1.91 முதல் 31.3.91 முடிய நீட்டிக்கப்பட்டுள்ளது.




தேசிய சேமிப்புப் பத்திரம் 8-வது வெளியீட்டிலும் 15 ஆண்டு பொது சேம நல நிதி கணக்கிலும் செய்யும் முதலீடுகளுக்கும், தேசிய சேமிப்புத் திட்டம் 1987-இல் செய்யும் முதலீடுகளுக்கும் வருமான வரிச் சட்டம் பிரிவு முறையே 88 மற்றும் 80 - சிசிஏ பிரிவின்படி வருமான வரிச் சலுகை அளிக்கிறது.

**சிறுசேமிப்பு வசூல்**

கடந்த நவம்பர் 90 முடிய தமிழ்நாட்டில் சிறுசேமிப்புத் திட்டங்கள் மூலம் ரூ.372.54 கோடி திரட்டப்பட்டுள்ளது.

**சமூக நலத் திட்டங்கள்**

அந்தந்த மாநிலத்தில் சிறுசேமிப்புத் திட்டங்கள் மூலம் வசூலாகும் தொகையில் 4-இல் 3 பங்கை அந்தந்த மாநில அரசுகளுக்கு நீண்ட காலக் கடனாக அளிக்கிறது. மாநில அரசு வளர்ச்சிப் பணிகளை நிறைவேற்றுவதற்கும், சமூக நலத் திட்டங்களைச் செயல்படுத்துவதற்கும் பயன்படுத்துகிறது.

**முத்தான மூன்று திட்டங்களின் மூலம் 3 தவணைகள்**

தமிழ்நாட்டில் 1.1.91 முதல் 31.3.91 முடிய சிறுசேமிப்பில் முதலீடு செய்யும் முதலீடுதாரர்களுக்கு, 1. இலவசப் பரிசுக் கூப்பன் திட்டம், 2. ஒரு சதவிகிதம் ஊக்கத்தொகை வழங்கும் திட்டம், 3. விபத்திற்கான தனிநபர் இன்ஸுரன்ஸ் திட்டம் ஆகிய மூன்று திட்டங்களின் மூலம் மகத்தான சலுகைகளைத் தமிழக அரசு முதலீடுதரார்களுக்கு அளிக்கிறது.

பொதுமக்களும்/முகவர்களும்/முதலீடுதாரர்களும், 31.3.91 முடிய சிறுசேமிப்புத் திட்டங்களில் முதலீடு செய்து மேற்குறிப்பிடப்பட்ட அனைத்துச் சலுகைகளையும் பெற்றுப் பயனடையுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

### வட ஆர்க்காடு அம்பேத்கர் மாவட்டத்தில்:

# மாநில அறிவியல் கண்காட்சி

வட ஆர்க்காடு - அம்பேத்கர் மாவட்டம் வேலூரில், 1991 ஜனவரித் திங்கள் 3-ஆம் நாள் மாநில 17-வது அறிவியல் கண் காட்சி சிறப்புற நடந்தது. மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் திரு துரை முருகன் அவர்கள் கண்காட்சியைத் துவக்கிவைத்தார். தேசிய கல்வி ஆராய்ச்சிப் பயிற்சி நிறுவனமும், தமிழ்நாடு அரசும் இணைந்து இக் கண்காட்சியை நடத்தின.

16 மாவட்டங்களிலிருந்து 58 அரசு உயர் நிலைப்பள்ளிகள், 70 தனியார் பள்ளிகளைச் சேர்ந்த மாணவ மாணவிகள் 250 பேர் இந்தக் கண்காட்சியில் கலந்து கொண்டு, 525 அறிவியல் படைப்புகளைக் காட்சிக்கு வைத்திருந்தனர். ''கிராமமும் அறிவியலும்'' என்னும் கருத்தில் காட்சிப் பொருட்கள் தயாரித்து வைக்கப்பட்டிருந்தன.

கிராமமக்களின் அறிவை வளரச் செய்யும் வகையிலும், அவர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கும் வகையிலும் பல புதிய கருவிகளை மாணவர்கள் கண்டுபிடித்து, கண்காட்சியில் இடம் பெறச் செய்திருந்தனர்.

**தண்ணீர் மற்றும் மின்சாரம்**

தண்ணீர் மற்றும் மின்சாரப் பிரச்சினைகளைச் சமாளித்து, அவற்றைச் சிக்கனமாகப் பயன்படுத்தும் முறையும், நீர் நிறைந்த சப்பாத்தி, எலுமிச்சம்பழம் ஆகிய பொருட்களிலிருந்து மின்சாரம் தயாரித்துப் பயன்படுத்த முடியும் என்பதையும் விளக்கும் மாணவர்களின் கண்டுபிடிப்புகள் அனைவரையும் கவர்ந்தன.



**விவசாயம்**

புதிய நீர்ப்பாசன முறை, டிராக்டரைக் கொண்டு நிலம் உழுதல் , சமப்படுத்துதல், பளுதூக்குதல் (கிரேன்), ஆழக்குழி தோண்டுதல், வரப்பு அமைத்தல், பொருட்களை எடுத்துச் செல்லுதல், பாத்தி கட்டுதல், பொருட்களை வரிசையாக அடுக்குதல், மண் உடைத்தல் , தானே வைக்கோல் எடுத்து வைத்தல் போன்ற வேலைகளைச் செய்யும் ஒரு நவீன வாகனம் - ஒரு பள்ளி மாணவனின் சிறந்த படைப்பு ஆகும்.

ஆகாயத் தாமரையின் தண்டை வைத்து காகித அட்டை, சோப்பு, பை, மை, முகப்பவுடர் ஆகிய தயாரிப்புக் காட்சிகள் கண்காட்சியில் இடம் பெற்றிருந்தன. மாதிரிக் கிராமம் ஒன்று காட்சியில் இடம் பெற்றிருந்தது குறிப்பிடத்தக்கது.

மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் திரு.துரைமுருகன் அவர்கள் பேசும்போது, ''நான் படிக்கும் காலத்தில் போதிய உபகரணங்கள் இல்லாமல், செய்முறைப் பயிற்சி பெறுவதற்கு வாய்ப்பு இல்லாமல் போய்விட்டது. ஆனால், இன்று அவ்வாறில்லை, மாணவர்களின் புதிய புதிய கண்டு பிடிப்புகளைப் பார்வையிட்டேன். மாணவர்களிடையே ஆற்றல்கள் மண்டிக் கிடக்கின்றன. அவை அனைத்தையும் வெளிக் கொணர்வது இக்கண்காட்சியின் முயற்சியாகும். மாணவர்களின் படைப்பாற்றல்கள், கண்டுபிடிப்புகள் நமக்கு வியப்பூட்டுபவை மட்டுமல்ல, நம்மை மகிழ வைப்பவை. சிந்திக்க வைப்பவை ஆகும். வருங்கால அறிவியல் அறிஞர்களை உருவாக்குவதே இக்கண்காட்சியின் நோக்கமாகும்'' என்றார்.



மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. மா. சத்தியமூர்த்தி இ.ஆ.ப. அவர்கள் தமது தலைமை உரையில் ''பங்கு பெறும் மாணவ மாணவியர்களில் சிலரேனும் புவியீர்ப்புச் சக்தியைக் கண்டுபிடித்த - ஐசக் நியூட்டனாகவோ, வானொலியைக் கண்டு பிடித்த - மார்க்கோனியாகவோ, ஆகாய விமானத்தைக் கண்டுபிடித்த ரைட் சகோதரர்களாகவோ, மின் விளக்கைக் கண்டுபிடித்த - தாமஸ் ஆல்வா எடிசனாகவோ, ரயில் எஞ்சினைக் கண்டுபிடித்த - ஜார்ஜ் ஸ்டீபனாகவோ, டெலஸ்கோப்பைக் கண்டுபிடித்த - கலீலியோவாகவோ, நம் நாட்டில் அணுசக்தியை உருவாக்கிய ஹோமி ஜகாங்கிர் பாபாவாகவோ உருவானால், நம் நாடு பெருமை பெறும்'' என்றார்.


தமிழரசு
சந்தா விவரம்
தமிழ் ......... ஓராண்டு - ரூ.24
அரையாண்டு - ரூ.12
ஆங்கிலம் ... ஓராண்டு - ரூ. 12
(அரையாண்டு சந்தா கிடையாது)
விவரங்களுக்கு
உதவி இயக்குநர் தமிழரசு,
(விற்பனை மற்றும் விநியோகம்)
அரசினர் தோட்டம், சென்னை-600 002.


தமிழகப் பள்ளிக் கல்வி இயக்குநர் திரு. தி. நாச்சிமுத்து அவர்கள் பேசும்போது, ''நம் நாட்டின் முன்னேற்றம் அறிவியல் வளர்ச்சியின் சிறப்பைப் பொறுத்தே அமையும் என்பதைக் கருத்தில் கொண்டே, கல்வித்துறை இக்கண்காட்சியை அமைத்து மாணவர்களின் அறிவுத்திறத்தையும், ஆற்றலையும் வெளிப்படுத்த உதவியது. சிற்றூர்ப் புறங்களில் அறிவியல் எழுச்சி தோன்றிட, பரவிட இக்கண்காட்சி தூண்டுகோலாக அமையும் . நாளும் புதுமையைத் தேடும் நாட்டத்தையும், மேலும் முன்னேறும் வேட்கையினையும் நாம் பெற, இவ்வறிவியல் கண்காட்சி நமக்கு வழி காட்டும், வழி நடத்தும், வாழ்வில் ஒளிபரப்பும்'' என்றார்.

எஸ்.டி. ராஜேந்திரன்
செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,
வட ஆர்க்காடு-அம்பேத்கர் மாவட்டம்.

# பெரியார் மாவட்ட வளர்ச்சிப் பணிகள்

**- வி. கே. சுப்புராஜ், இ.ஆ.ப.,**
**ஆட்சித் தலைவர்,**
**பெரியார் மாவட்டம்.**

பெரியார் மாவட்டம், பல் வேறு துறைகளில் பாங்காய் வளர்ந்து வருகின்றது. நலிந்தோர் நலம், குடும்பநலம், கல்வி, வேளாண்மை, சிறுசேமிப்பு, கூட்டுறவு இப்படிப் பல வகைகளில் அதன் வளர்ச்சிப் பணிகள் செவ்வனே நடைபெற்று வருகின்றன.

மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவு திருமண உதவித் திட்டத்தின் கீழ், 840 மகளிருக்குத் திருமண நிதியுதவி யாகத் தலா ரூ.5 ஆயிரம் வீதம், ரூ.42 இலட்சம் வழங்கப்பட்டுள் ளது. இம்மாவட்டத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள தொகை முழுமை யாகச் செலவிடப்பட்டுள்ளது.

விதவை மகள் திருமண நிதி யுதவித் திட்டத்தின் கீழ், 50 மகளிர் களுக்குத் தலா ரூ.2 ஆயிரம் வீதம் ரூ.1 இலட்சம் நிதியுதவியாக வழங் கப்பட்டுள்ளது. கூடுதல் நிதி ஒதுக்கீடு ரூ.44 ஆயிரம் அரசிடம் கோரப்பட்டுள்ளது.

உடல் ஊனமுற்ற நபர்களுக்குக் கல்வி உதவித் தொகை வழங்கும் திட்டத்தின் கீழ், 509 நபர்களுக்கு ரூ.24,274 வழங்கப்பட்டுள்ளது. மேலும் 42 நபர்களுக்கு வழங்கப் படும்.

**கல்வி உதவித்தொகை**

பிற்படுத்தப்பட்ட வகுப்பின ருக்கு போஸ்ட்மெட்ரிக் கல்வி உதவித் தொகையாக வழங்குவதற்கு ரூ.13.68 இலட்சம் ஒதுக்கீடு பெறப் பட்டதில், இதுவரை 1174 மாணவ மாணவியர்களுக்கு ரூ.11.87 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப் பினருக்கு இலவசக் கல்வித் திட்டத் தின் கீழ்-அனைத்துக் கட்டணங் களும் ஈடு செய்யும் திட்டத்தின் கீழ் ஒதுக்கீடான ரூ.7.85 இலட்சம் பெறப்பட்டதில், இதுவரை 724 மாணவ மாணவியர்களுக்கு ரூ.5.30 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

இலவச தொழிற்கருவிகள் வழங்குதல் திட்டத்தின் கீழ், இது வரை 188 நபர்களுக்குச் சலவைப் பெட்டிகளும், 37 நபர்களுக்குச் சவரக் கருவிகளும், 36 கல்லுடைக்கும் தொழிலாளர்களுக்குத் தொழிற் கருவிகளும் வழங்கப்பட்டுள்ளன.

இம்மாவட்டத்தில் ரூ.12.54 இலட்சம் மதிப்புள்ள 14.485 எக்டர் பரப்பில் 729 நபர்களுக்குப் பட்டாக்கள் வழங்க அரசிடம் கோரப்பட்டுள்ளது.



ஆதிதிராவிடர்களுக்கு 1,900 இலவசத் தொகுப்பு வீடுகள் ரூ.193.80 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டு வருகின்றன. இதில் இதுவரை 1,500 தொகுப்பு வீடுகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன.

சொந்தக் கட்டடம் இல்லாத ஊராட்சி மற்றும் பேரூராட்சி மன்றங்களுக்கு ரூ.54.80 இலட்சம் மதிப்பீட்டில் 80 சொந்தக் கட்டடங்கள் கட்டப்பட்டு வரு கின்றன. இதில் இதுவரை 68 கட்டடங்கள் கட்டி முடிக்கப் பட்டுள்ளன.

பள்ளிக் கட்டடமே இல்லாத 21 இடங்களில் புதிய பள்ளிக் கட்டடங்கள் ரூ.26.25 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டு வருகின்றன. இதில் இதுவரை 16 பள்ளிக் கட்டடங்கள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. ஊராட்சி மற்றும் பேரூராட்சிகளில் ரூ.94.115 இலட்சம் மதிப்பீட்டில் 552 பணிகள் எடுக்கப்பட்டதில் இது வரை 379 பணிகள் முடிக்கப் பட்டுள்ளன. இதுவரை இத்திட்டத் தின் கீழ் ரூ.573.176 இலட்சம் செலவிடப்பட்டுள்ளதோடு, 23.650 இலட்ச மனித சக்தி நாட்கள் உருவாக்கப்பட்டுள்ளன.

சாண எரிவாயுத் திட்டத்தின் கீழ், நியமனக் குறியீடான 1,075 கலன்களுக்கெதிராக, இதுவரை 401 கலன்கள் நிறுவப்பட்டுள்ள தோடு 332 கலன்கள் நிறுவும் பணி நடைபெற்று வருகிறது.

டாக்டர் முத்துலட்சுமிரெட்டி நினைவு மகப்பேறு உதவித் திட்டத் தின் கீழ், கர்ப்பிணிப் பெண்களுக் குத் தலா ரூ.200 வீதம் 8,500 நபர்களுக்கு வழங்கத் திட்டமிடப் பட்டதில், இதுவரை 7,922 நபர் களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

சிறுசேமிப்புத் திட்டத்தின் கீழ், குறியீடான ரூ.20 கோடிக்கு இது வரை ரூ.8.75 கோடி வசூலிக்கப் பட்டுள்ளது.

**குடும்ப நலம்**

கடந்த ஆண்டு நவம்பர் திங்களில் 1,395 தகுதி வாய்ந்த தம்பதியர் களுக்குக் குடும்ப நல அறுவைச் சிகிச்சை செய்யப்பட்டுள்ளது. இம் மாவட்டத்திற்கு நியமிக்கப்பட்ட இலக்கு 15.000. இதில் இதுவரை 9,399 குடும்ப நல அறுவைச் சிகிச்சைகள் செய்யப்பட்டு, 62.6 சதவீத சாதனை எய்தப்பட்டுள்ளது.

நவம்பர் திங்கள் வரை குடும்ப நல அறுவைச் சிகிச்சைச் சாதனை யில் இம்மாவட்டம் 5-வது இடத்தை வகிக்கிறது. இதுவரை 58 லேப்ராஸ் கோபிக் முகாம்கள் நடைபெற்றுள்ளன.

**வேளாண்மை**

பெரியார் மாவட்டம், பவானி சாகரில் உள்ள அரசு விதைப் பண்ணையில் நெற்பயிருக்கு உயிர் உரமாகப் பயன்படும் நீலப்பச்சைப் பாசிக்கு உற்பத்தி மையம் அமைக்கப் படுகிறது. தமிழகத்தில் இதுவரை ஒரே ஒரு மையம் செங்கை அண்ணா மாவட்டத்தில் திருவூரில் இயங்கி வந்தது. இந்த மையம் இப்போது பவானிசாகருக்கு மாற்றப்பட்டுள் ளது. இதில் நீலப்பச்சைப் பாசி தவிர அசோலா எனப்படும் மற் றொரு உயிர் உரத்தின் வித்துக் களும் செய்யப்பட உள்ளன.

**ஆதிதிராவிட நலச் சிறப்புத் திட்டம்**

பெரியார் மாவட்ட ஆதிதிரா விட விவசாயிகளின் நலனுக்கென 50 சத மானிய விலையில் பயறு வகை விதைகள், பசுந்தாளுர விதைகள், நுண்ணுயிர் மற்றும் நுண்ணூட்டகங்கள் மற்றும் தெளிப் பான்கள் ஆகியவை வழங்கப்பட்டு வருகின்றன. ஆதிதிராவிட விவசாயி ஒருவருக்கு அதிகபட்சம் ரூ.750 வரை இத்திட்டத்தின் கீழ் வழங்கப் படுகிறது. இதுவரை 807 விவ சாயிகள் மொத்தம் சுமார் ரூ.48,000 மானியமாகப் பெற்றுப் பயனடைந் துள்ளார்கள். இப்பணிக்கென இன்னும் சுமார் ரூ.2.39 இலட்சம் மானிய உதவியாக வழங்கப்பட வுள்ளது.

தமிழகத்தில் மொத்தம் 100 புதிய வேளாண் விரிவாக்கத் துணை மையங்கள் துவக்கப்படவுள்ளன. இதில் பெரியார் மாவட்டத்தில் மட்டும் 5 இடங்களில் இத்துணை மையங்கள் அமைகின்றன. கொடு முடி வட்டாரம் கருமாண்டாம் பாளையத்திலும், மொடக்குறிச்சி வட்டாரம் பூந்துறையிலும், ஈரோடு வட்டாரத்திலும் நசியனூரிலும், ஆக 3 துணை மையங்கள் இதுவரை துவங்கப்பட்டுள்ளன. தாராபுரம் வட்டாரத்தில் சத்திரம் பகுதியில் ஒன்றும், ஈரோடு வட்டாரம் பி.பி. அக்ரகாரத்திலுமாக இரு மையங்கள் விரைவில் துவங்கப்படவுள்ளன.


> **தனி உடைமைக்கும் பொது உடைமைக்கும் இடையே அமைக்கப்பட்ட பாலம்தான் கூட்டுறவு.**
>
> **— அறிஞர் அண்ணா**

துணை மையங்கள் துவங்கப் பட்ட நாள் முதல் தினசரி ரூபாய் ஆயிரத்திற்கும் குறைவில்லாமல் விற்பனையாகி வருவதிலிருந்து, இந்தத் துணை மையங்களின் அவசியத்தை உணரலாம். நீண்ட தொலைவு சென்று பெரும் பொருட் செலவில் இடுபொருட்களை விவ சாயிகள் சிரமத்துடன் வாங்கி வரும் குறைபாடு இத்தகைய துணைக் கிடங்குகளால் நிவர்த்தி செய்யப் பட்டுள்ளது.

பெரியார் மாவட்டம் தாராபுரம் கோட்டம் நாராயணபுரம் கிராமத் தில் ஒருமித்த பரப்பாக 25 ஏக்கரில் மரப்பண்ணை அமைக்கப்படுகிறது.

"சிடா" எனப்படும் ஸ்வீடன் நாட்டினரின் அகில உலக மேம் பாட்டுக் கழகம் இந்த மரப்பண் ணையை அமைப்பதற்கென ரூ.86,750 நிதியை வழங்கியுள்ளது. மரப் பண்ணை அமைக்கும் பணி ஏற் கெனவே துவங்கப்பட்டு, நிலச்சீர் திருத்தம் மற்றும் மண் வள மேம் பாட்டுப் பணிகள் முடிவடைந்து, மரக்கன்றுகள் நடும் பணியும் ஆழ் துழாய்க் கிணறு அமைக்கும் பணி யும் துவங்கியுள்ளது.

"நவப்ரா" திட்டத்தின் கீழ் "மித்ர கிசான்"கள் எனப்படும் முன்னோடி விவசாயிகள் கிராமத்திற்கு மூவர் வீதம் தேர்ந்தெடுக்கப்பட்டு, பயிர் சாகுபடி மற்றும் கலப்புப் பண்ணை பற்றிய பயிற்சி அனைத்துத் துறை களின் உதவியுடன் வழங்கப் பட்டுள்ளது.



கடந்த ஆண்டு நவம்பர் திங்கள் முடிய குறுகிய காலக் கடன் ரூ.109.10 இலட்சமும், மத்திய காலக் கடன் ரூ.70.56 இலட்சமும் வழங்கப்பட்டுள்ளன. 12 கூட்டுறவு நில வள வங்கிகள் மூலம் நவம்பர் திங்கள் முடிய ரூ.82.30 இலட்சம் கடன் வழங்கப்பட்டுள்ளது. நவம்பர் திங்கள் முடிய 266 கூட்டுறவு வங்கியின் மூலம் ரூ.2444.56 இலட்சம் நகைக்கடன் வழங்கப் பட்டுள்ளது.

சத்தியமங்கலம் வனக்கோட்டத் தில் பருவ மழையைப் பயன்படுத்தி சுமார் 2,000 எக்டர் நிலப்பரப்பில் விமானம் மூலம் விதை தூவும் பணி செய்யப்பட்டது. இப்பணிக்காக இதுவரை ரூ.3.50 இலட்சம் செல விடப்பட்டுள்ளது.

தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகத்தின் மூலம், 15 தொழில் நிறுவனங்களுக்குச் சிறுதொழில் துவங்க ரூ.22.61 இலட்சமும், 3 மருத்துவர்களுக்கு ரூ.6.45 இலட்சமும் ஒரு நபருக்கு மகிளா உதய நிதித் திட்டத்தின் கீழ் ரூ.1.75 இலட்சமும் மற்றும் சுலபக் கடன் திட்டத்தின் கீழ் ரூ.0.25 இலட்சமும் கடன் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இந்த நிதி யாண்டில் 188 நிறுவனங்களுக்குப் பல்வேறு திட்டங்களின் கீழ் ரூ.215.46 இலட்சம் கடன் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

கீழ்பவானித் திட்ட பிரதான வாய்க்காலின் 1990-91-ஆம் ஆண்டு முதல் முறைப் பாசனத் திற்குச் சுமார் 1.00 இலட்சம் ஏக்கர் நிலங்களுக்கு 31.8.90 முதல் தண்ணீர் திறந்து விடப்பட்டு ஆயக் கட்டுப் பகுதிகளில் விவசாயப் பணிகள் நடந்தேறி வருகின்றன.

**(31.12.90 அன்று செய்தியாளர்கள் கூட்டத்தில் தெரிவித்த தகவல் களிலிருந்து)**

தந்தி:''அண்ணா சில்க்''

போன்:2148

கண்கவர் வண்ணங்கள்! நெஞ்சை அள்ளும் ரகங்கள்!!

தரமான காஞ்சிபுரம் பட்டாடைகள் வாங்கச்சிறந்த கூட்டுறவு நிறுவனம்

## அறிஞர் அண்ணா பட்டு கைத்தறி நெசவாளர் கூட்டுறவு உற்பத்தி & விற்பனைச் சங்கம் லிட். நெ. கே.எச்.1

498-499, காந்தி ரோடு, காஞ்சிபுரம்-631 501.

(விற்பனைக்கூடம் குளிர்பதனம் செய்யப்பட்டது)

### கிளைகள்

1. 26/118, ராச வீதி, கோயம்புத்தூர்
2. 207, இரண்டாவது அக்ரஹாரம், சேலம்
3. 141, கீழவெளி வீதி, மதுரை
4. 15-3-421, மெயின் பஜார், இந்துப்பூர்
5. 16, போலீஸ் வெல்போர் காம்ப்ளக்ஸ், நியூடவுன், அனந்தப்பூர்
6. 8, கிருட்டினா ஆங்காடி மையம், சிக்பெட், பெங்களூர்
7. 12, சர்வீஸ்லேன், கே.ஆர்.சர்க்கிள், மைசூர்
8. 13, அசோகா ரோடு, தும்கூர்
9. காஞ்சி கோவாப்பரேடிவ் சில்க்ஸ், உம்மிடியார்ஸ் ஷாப்பிங் சென்டர், அண்ணாசாலை, சென்னை-2

தி.பொ.இலட்சுமணன், பி.காம்.
துணை இயக்குநர்/தனி அலுவலர்

## காஞ்சிபுரம் பட்டுச் சேலைகளுக்குச் சிறந்த இடம்

### காஞ்சிபுரம் காமாட்சியம்மன் பட்டு கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கம் லிமிடெட் நெ.ஜி.1612

(குளிர்பதனம் செய்யப்பட்டது)

168-எ, காந்திரோடு, காஞ்சிபுரம்-631 501 போன்:3002

### கிளை விற்பனை நிலையங்கள்


1. 28-12-10/5 & 6 மகுதி வீதி, அருண்டேல்பேட், விஜயவாடா-520 002 போன்:77375
2. 231/13, கிருஷ்ணா மார்க்கெட், சிக்பெட், பெங்களூர்-560 053
3. 139 கீழவெளி வீதி, மதுரை-625 001, போன்:36988
4. 27. இரண்டாவது அக்ரஹாரம், சேலம்-636 001, போன்:68740
5. 15-3-423, பிரகாசம் பந்துலு ரோடு, இந்துப்பூர்-515 201, போன்:21061
6. 19, திருவேங்கடசாமி தெரு, ஈரோடு-638 001, போன்:78905
7. காஞ்சி கோஆப்ரேடிவ், சென்னை-600 002

இரா.விஜேந்திரன்,பி.ஏ.,
துணை இயக்குநர்/தனி அலுவலர்

★★ எங்கள் சங்கம் மாநிலத்திலேயே சிறந்த கூட்டுறவுச் சங்கமாகத்தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறோம்.



15 — ஆம் பக்கத் தொடர்ச்சி



**19.** கிராமப்புற வீட்டு வசதித் திட்டம் முற்றிலும் மாற்றியமைக்கப்பட்டுள்ளது. இத் திட்டப் பயனீட்டாளர்கள் பெற்ற கடன் தொகையில் 25 சதவீதத்தை 1991ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 31ஆம் நாளுக்கு முன்னர் செலுத்தி விட்டால், நிலுவையாகவுள்ள கடன் மற்றும் வட்டித் தொகையான ரூ. 102 கோடியை தள்ளுபடி செய்யக் கருதப்பட்டுள்ளது. மேலும் அரசு வழங்கும் உதவித் தொகையின் அளவு ரூ. 1,500-லிருந்து ரூ. 5,000-மாக உயர்த்தப் பட்டுள்ளது. பயனீட்டாளர்கள் பணமாகவோ, உழைப்பாகவோ ரூ. 1,500 செலுத்த வேண்டும். கடனாக ரூ. 3,500 வழங்கப்படும். இந்தக் கடனுக்குச் செலுத்த வேண்டிய மாதத் தவணைத் தொகை ரூ. 60-லிருந்து ரூ. 30 ஆகக் குறைக்கப் பட்டுள்ளது. இத்திட்டம் நடப்பாண்டில் 30,000 கிராமப்புற ஏழை மக்களுக்குப் பயனளிக்கும்.

1991ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 1ஆம் நாள் முதல் ஊராட்சி உதவியாளர்களாகப் பணியில் மீண்டும் சேர்த்துக் கொள்ளப்பட்ட முன்னாள் கிராம அதிகாரிகளும் கிராமப்புற வீட்டு வசதித் திட்டத்தைத் திறம்படச் செயல் படுத்த உதவுவர்.

**20.** 1974ஆம் ஆண்டு மாநில அரசால் தொடங்கப்பட்ட ஆதிதிராவிடர்களுக்கு கான்கிரீட் கூரையுடன் கூடிய வீடுகளை இலவசமாக அளிக்கும் திட்டம் கடந்த ஆண்டு மீண்டும் தொடரப்பட்டு மக்களிடையே பெரும் வரவேற்பைப் பெற்றுள்ளது. ஒரு வீட்டிற்கு ஆகும் செலவு ரூ. 14,200 இதில் ரூ. 8,160 மத்திய அரசின் பங்காகவும், ரூ. 6,040 மாநில அரசின் பங்காகவும் அமையும். 1989–90-ல் 42,000 வீடுகள் கட்டவும், 1990–91-ல் 47,000 வீடுகள் கட்டவும் ஏற்கனவே அனுமதி வழங்கப்பட்டிருந்தது. மேலும், 11,000 வீடுகள் கட்ட அண்மையில் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மொத்தத்தில் ஓர் இலட்சம் வீடுகள் 1991 ஏப்ரலுக்குள் கட்டி முடிக்கப்படும்.

மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், சீர் மரபினர் ஆகியோருக்கும் வீடுகள் கட்டித்தரும் இது போன்றதொரு திட்டம் தீவிர பரிசீலனையில் உள்ளது.


**21.** சமுதாயத்தில் மகளிர் நிலையை உயர்த்த நாம் உறுதி பூண்டுள்ளோம். அரசுத் துறைகள், உள்ளாட்சி மன்றங்கள், பொதுத்துறை நிறுவனங்கள் ஆகியவற்றில் உள்ள பணி இடங்களில் 30 சதவீத இடங்கள் பெண்களுக்காக ஒதுக்கப்பட் டுள்ளன. ஊராட்சி, நகராட்சி மற்றும் மாநகராட்சி

களில் உறுப்பினர் பதவிகளில் 30 சதவீதம் பெண்களுக்காக ஒதுக்கப்பட்டுள்ளது. பள்ளிக்கூடங்களில் 1-ம் வகுப்பு முதல் 3-ம் வகுப்பு வரையிலான பணிக் காலியிடங்கள் பெண் ஆசிரியர்களைக் கொண்டே நிரப்பப்படுகின்றன. ஏழை, நடுத்தரக் குடும்பங்களைச் சேர்ந்த பெண்களுக்கு, பட்டப் படிப்பு வரை இலவசக் கல்வி அளிக்கப்படுகிறது. 1989-ல் அறிமுகப்படுத்தப்பட்ட மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவு திருமண உதவித் திட்டத்தின்கீழ் இதுவரை ரூ. 17.30 கோடி செலவில் 34,595 பெண்களுக்கு உதவியளிக்கப்பட்டுள்ளது. அதே போல் டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி நினைவு மகப்பேறு உதவித் திட்டத்தின் கீழ், ஒருவருக்கு ரூ. 200 என்ற வீதத்தில் இதுவரை 3,71,805 கர்ப்பவதிகளுக்கு ரூ. 7.44 கோடி உதவியளிக்கப்பட்டுள்ளது.


பெண்ணின் பெருமை - உரிமை - இவை பற்றி சொல்லளவில் இருந்த நிலை மாற்றி செயல்வடிவம் தர, இந்த அரசு ஆற்றியுள்ள சாதனைகளில் அருஞ்சாதனையாக — இந்து வாரிசுரிமைச் சட்டத்தை திருத்தியதன் மூலம் ஆண் வாரிசுகளுக்குச் சமமாக பெண் வாரிசுகளுக்கும் சொத்துரிமை வழங்கியுள்ளது.

**22.** சத்துணவுத் திட்டத்தை தொடர்ந்து நடத்துவதுடன், மேலும் உலக வங்கி உதவியுடன் ரூ. 350 கோடி செலவிலான புதிய ஊட்டச் சத்து திட்டமொன்று இந்த மாதத்தில் தொடங்கப்படும். இத் திட்டம் படிப்படியாகச் செயல்படுத்தப்படும். இத் திட்டம், 500-க்கும் மேற்பட்ட மக்கள் தொகை கொண்ட ஒவ்வொரு குடியிருப்புப் பகுதியிலும் தாய்-சேய் நலம் பாதுகாக்கவும், ஊட்டச் சத்து வழங்கும் புதிய நிலையங்களை ஏற்படுத்தவும் வகை செய்யும். கருவுற்ற மகளிருக்கும், ஆறு மாதத்திலிருந்து மூன்றாண்டுகள் வரையுள்ள சிறு குழந்தைகளுக்கும் முழு மருத்துவப் பாதுகாப்பும், ஊட்டச் சத்தும் அளிக்க இத் திட்டம் வகை செய்யும். நமது சமுதாயத்தில், நோயால் எளிதில் பாதிக்கப்படக்கூடிய கருவுற்ற மகளிருக்கும் சிறு குழந்தைகளுக்கும் இப்புதிய நிலையங்கள் மிகச் சிறந்த உடல் நலப் பாதுகாப்பை அளிக்கும்.

**23.** இந்த ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட ஊரக அடிப்படை வசதிகள் பணித் திட்டத்தின்கீழ் ஒவ்வொரு தொடக்கப் பள்ளிக்கும் ஒரு நிலையான கட்டிடம் கட்டி முடிக்கப்பட்டுள்ளது. நடப்பாண்டில் 2,000 ஊராட்சிக் கட்டிடங்கள் கட்டி முடிக்கப்படும். 500 முதல் 1,000 பேர் வரை மக்கள் தொகை கொண்ட கிராமப்புறப் பகுதிகளுக்கு மொத்தம் ரூ. 44.25 கோடி செலவில் நிலையான சாலைகளை நடப்பாண்டில் அமைக்கும் பெருந்திட்டமொன்று மேற்கொள்ளப்பட்டுள்ளது.







**24.** ஐந்து ஆண்டுகளுக்குப் பிறகு முதல் முறையாக 1990 ஜூலைத் திங்கள் முதற்கொண்டு மின்வெட்டு முழுமையாக நீக்கப்பட்டுள்ளது. வடமாநிலங்களிலுள்ள நிலக்கரிச் சுரங்கங்களிலிருந்து வரப்பெறும் நிலக்கரி முழுமையாகத் தட்டுப்பாடின்றி கிடைத்திருக்குமேயாயின், இந்த மகிழ்ச்சிகரமான நிலையை நாம் தொடர்ந்து நீட்டிக்க இயன்றிருக்கும். நிலக்கரி கிடைப்பதில் ஏற்பட்டுள்ள சிறிதளவு முன்னேற்றத்தின் பயனாக, 1990 அக்டோபர் திங்கள் முதல் உயரழுத்த மின் சக்தியைப் பயன்படுத்தும் சில தொழில்களுக்கு விதிக்கப்பட்டு வந்த 30 சதவீத மின்வெட்டு, 1990 டிசம்பர் திங்கள் முதற்கொண்டு 10 சதவீதமாகக் குறைக்கப்பட்டது. இம்மாநிலத்திற்கு, வடக்கு, கிழக்கு மாநிலங்களிலுள்ள நிலக்கரிச் சுரங்கங்களிலிருந்து நிலக்கரியைப் பெறுவதில் பிரச்சினைகள் ஏற்பட்டுள்ளதால், நெய்வேலியில் புதிதாக ஏற்படுத்தப்பட உள்ள அனல் மின் நிலையங்களில் உற்பத்தி செய்யப்படும் மின்சக்தி முழுவதையும் தமிழ் நாட்டிற்கே ஒதுக்கீடு செய்ய வேண்டுமென்ற செயற்குறிப்பு ஒன்றை இவ்வரசு மத்திய அரசிடம் அளித்துள்ளது.

இம்மாநிலத்திலுள்ள எரிவாயு ஆதாரங்களை மின்சக்தி உற்பத்தி செய்வதற்காக விரைந்து பயன்படுத்திக் கொள்ளும் வகையில் திட்டங்கள் இறுதி செய்யப்பட்டு வருகின்றன. ஜெயங்கொண்டான் பகுதியில் உள்ள பழுப்பு நிலக்கரிச் சுரங்கங்களைக் கண்டறிய அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மேற்சொன்ன பழுப்பு நிலக்கரி ஆதாரங்களைப் பயன்படுத்திக் கூட்டுத் துறையில் அல்லது தனியார் துறையில் 1,500 மெகாவாட் அளவிற்கு மின்சக்தி உற்பத்தி செய்யும் நிலையத்தை ஏற்படுத்தும் பணியை இவ்வரசு மேற்கொள்ளும்.


**25.** தமிழ்நாட்டில் தொழில்கள் தொடங்குவதற்கான சூழ்நிலையை மேம்படுத்துவதற்கு இவ்வரசு முன்னுரிமை அளித்துள்ளது. மணலியில், ரூ. 1,380 கோடி செலவில் 'எம்.ஆர்.எல்.' மற்றும் 'ஸ்பிக்' நிறுவனங்களின் கூட்டு முயற்சியுடன் 'தேசிய அரோமேட்டிக்' தொழிற்சாலையை அமைக்கும் திட்டத்திற்காக மத்திய அரசிடமிருந்து அனுமதியைப் பெற நமது அரசு மேற்கொண்ட தீவிர முயற்சிகள் குறித்து உறுப்பினர்கள் அனைவரும் நன்கு அறிவர். இத்திட்டத்திற்கு, மத்தியில் முன்பிருந்த அரசு ஒப்புதலளித்துள்ளது. ஏற்கனவே அளிக்கப்பட்டுள்ள அனுமதியை உறுதி செய்ய வேண்டுமென்று முதலமைச்சர் அவர்கள் பிரதமரை வலியுறுத்திக் கேட்டுள்ளார். தாய்த்தொழிலாக அமையும் இத்திட்டம், பெருவாரியான கிளைத் தொழிற்பிரிவுகள் ஏற்படுவதற்கும், அதன்

தமிழ்நாட்டின நலனைப் பாதிக்கும் வகையில் 'காட்கில்' கோட்பாட்டில் எவ்வித மாற்றமும் மேற்கொள்ளப்படமாட்டாது என்று நாம் நம்புகிறோம்.

33. ஊராட்சி ஒன்றியங்கள், ஊராட்சிகள் ஆகியவற்றின் நிதிநிலை குறித்து ஆராய திரு. ஏ. ஆர். தாமோதரன் அவர்களின் தலைமையில் திரு. பி. மாணிக்கம், திரு. என். வரதராஜன், திரு. வி. சுவாமிநாதன், திரு. எஸ். அக்னிராஜ் ஆகியோரை உறுப்பினர்களாகக் கொண்டு சட்டப்படி அமைக்கப்பட்ட நிபுணர் குழு தன்னுடைய அறிக்கையை அண்மையில் அரசுக்கு அளித்துள்ளது. அந்த அறிக்கை பரிசீலிக்கப்பட்டு அரசின் முடிவுகள், வரும் வரவு-செலவுத் திட்டக் கூட்டத் தொடரில் அறிவிக்கப்படும்.

34. நிர்வாகத்தில், அதிகாரத்தை மக்களாட்சி அமைப்பு முறைக்கேற்ப பரவலாக்குவதில் இவ்வரசு ஆர்வம் கொண்டுள்ளது. கடந்த ஆண்டு அளித்த உறுதிமொழியைத் தொடர்ந்து, 17,753 தொடக்கக் கூட்டுறவுச் சங்கங்களுக்குத் தேர்தல்கள் நடத்தி முடிக்கப்பட்டுள்ளன. இத்தேர்தல்கள் 15 ஆண்டு இடைவெளிக்குப் பின்னர் நடத்தப்பட்டுள்ளன.

35. 1990ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 30ஆம் நாளுக்கு முன்னதாக, சென்னை, மதுரை, கோயம்புத்தூர் ஆகிய மாநகராட்சிகளுக்குத் தேர்தல்களை நடத்த நாம் கருதினோம். உயர்நீதிமன்றம் தடை ஆணை பிறப்பித்ததால் மேற்சொன்ன தேர்தல்களைத் தள்ளிப்போட வேண்டிய நிலை ஏற்பட்டது. 5 ஆண்டுகள் முடிவடைந்தவுடன், உரிய முறையில் தேர்தல்களை நடத்த உறுதிசெய்ய, தமிழ்நாடு 1958 ஆம் ஆண்டு ஊராட்சிகள் சட்டத்தில் தேவையான திருத்தங்களை இவ்வரசு கடந்த ஆண்டு செய்துள்ளது. எனினும், மக்கள் தொகை



கணக்கெடுப்பின் காரணமாக ஊராட்சிகள், பேரூராட்சிகள், நகராட்சிகள், மாநகராட்சிகள் ஆகிய அனைத்திற்கும் ஒரு மாதம் தள்ளி தேர்தல்கள் நடத்தப்பெற்று, புதிதாகத் தேர்ந்தெடுக்கப்படும் பிரதிநிதிகள், 1991ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 3ஆம் நாள் பதவியேற்பர் என்பதற்குப் பதிலாக ஏப்ரல் திங்கள் 10ஆம் நாள் பதவியேற்பர். இதற்கு வகை செய்யும் சட்ட முன்வடிவுகள் சட்டமன்றப் பேரவையின் இக்கூட்டத் தொடரில் கொண்டு வரப்படும்.

36. இந்தக் கூட்டத் தொடரில் மதிப்பிற்குரிய உறுப்பினர்கள் அனைவரின் விவாதங்களும் ஆக்கபூர்வமானவையாகவும் மக்களாட்சி தத்துவத்தின் மாட்சிமைக்கு மாசு நேராவண்ணம் உயர்ந்த மரபுகளைக் கட்டிக் காத்திடக்கூடியவைகளாகவும் அமைந்து, வழிகாட்டத்தக்க ஜனநாயகக் கலங்கரை விளக்கமாகத் திகழும் என்ற நம்பிக்கையுடன் என் உரையை நிறைவு செய்கிறேன்.

வணக்கம்.





# பட்டு உற்பத்தியில் டான்சில்க்

தமிழ்நாட்டில் உற்பத்தியாகும் பட்டு நூலை நியாயமான விலையில் கொள்முதல் செய்யவும், பட்டு கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்குத் தேவைப்படும் பட்டு நூலைக் கட்டுப்பாடான விலையில் விற்பனை செய்யவும், ஒரு பொது நிறுவனம் தேவையெனக் கருதப் பட்டது. அதன் விளைவாக, தமிழ் நாடு கூட்டுறவுப் பட்டு உற்பத்தி யாளர் இணையம் (டான்சில்க்) 9.9.1978 அன்று காஞ்சிபுரத்தைத் தலைமையிடமாகக் கொண்டு தொடங்கப் பட்டுச் செவ்வனே செயல்பட்டு வருகிறது.

**கிளைகளும், பார்வை நிலையங்களும்:**

பட்டு வளர்ச்சித் துறையின் கீழ் செயல்படும் இவ்விணையம், பட்டுத் தொழிலில் ஈடுபட்டுள்ள அனைத்துத் தரப்பினரையும் தன்னகத்தே உறுப் பினராகக் கொண்டுள்ளது.

தமிழகம் முழுவதையும் தனது விவகார எல்லையாகக் கொண்டுள்ள இவ்விணையத்தில் இப்போது மொத்த உறுப்பினர்கள் 566. அவர்களில் 'எ' வகுப்பு உறுப்பினர்கள் 203, அசோசியேட் உறுப்பினர்கள் 363 ஆவர். அவ்விணையத்தின் உறுப் பினர்களுக்குச் சிறந்த சேவை செய்யும் பொருட்டு இணையம் 6 கிளைகளை யும், 5 பார்வை நிலையங்களையும் தமிழகம் முழுவதும் அமைத்துச் செயல்படுத்தி வருகிறது.

பட்டு நூற்பாளர்கள் மற்றும் பட்டு நூற்பு செய்யும் கூட்டுறவுச் சங்கங்கள் நூற்பு செய்த பட்டு நூலை, அதன் தரத்திற்கு ஏற்ற விலையில் இவ்விணையம் கொள் முதல் செய்து, அதற்கான தொகையை அன்றே பட்டுவாடா செய்கிறது.

இவ்வகைப் பட்டுநூலை, இணை யத்தில் பட்டு முறுக்கேற்றும் அசோ சியேட் உறுப்பினர்கள் கொள்முதல் செய்து, அதனை நெசவுக்கேற்ற வகையில் முறுக்கேற்றி, மீண்டும் இணையத்தில் விற்பனை செய் கின்றனர்.

பட்டு கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களின் பட்டுத் தேவையினை முன் கூட்டியே கணக் கிட்டு, இணையம் சங்கங்களுக்கு விற்பனை செய்து வருகிறது.

பட்டு நூற்பு செய்யும் பிரி வினரிடமிருந்து அதனை நெசவுக் கேற்ற வகையில் சங்கங்கள் பெற்றுச் செல்லும் வரை, இடைத் தரகர் தலையீடு ஏதுமில்லாத வகையில் ஒரு உறவுப் பாலமாக இவ்விணையம் திகழ்கிறது.

**பழ. சண்முகம்**
**மாவட்ட வருவாய் அலுவலர்/ நிர்வாகப் பொறுப்பு**
**'டான்சில்க்' தலைமையகம் காஞ்சிபுரம்.**

# பெரியார் மாவட்டத்தில் பட்டு வளர்ச்சி

பெரியார் மாவட்டத்தில், தாளவாடி வட்டாரம் நீங்கலாகப் பிறபகுதிகளில் பட்டு வளர்ச்சிப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. நடப் பாண்டில் இருந்து உலக வங்கி நிதியுதவியுடன் கூடிய தேசிய பட்டு வளர்ப்பு அபிவிருத்தித் திட்டம் அமல்படுத்தப்பட்டு வருகிறது. குண்டடம், காங்கேயம், தாராபுரம், மூலனூர், பவானி, அந்தியூர், நம்பியூர், கோபி ஆகிய வட்டார வளர்ச்சிப் பகுதிகளில் மல்பரி அதிக அளவில் பயிரிடப்பட்டு, பட்டு வளர்ப்புத் தொழில் மேற் கொள்ளப்பட்டு வருகிறது.

1989-90-ஆம் ஆண்டிற்கு 250 ஏக்கர்கள் குறியீடாக நிர்ணயம் செய்யப்பட்டதில், 387.30 ஏக்கர்களில் மல்பரி நடவு மேற்கொள்ளப்பட்டது.

1989-90-ஆம் ஆண்டிற்கு 50 பட்டு விவசாயி களுக்குப் பயிற்சியளிக்க நிர்ணயிக்கப்பட்டதில், 50 பட்டு விவசாயிகளுக்குப் பயிற்சி அளிக்கப் பட்டு விட்டது. பயிற்சி அளித்தலுக்கு ரூ.15,000 நிதிக் குறியீடாக நிர்ணயிக்கப்பட்டதில், ரூ.14,983 பயிற்சிக்காகச் செலவிடப்பட்டது. ஒவ்வொரு பயிற்சியாளருக்கும் ரூ.150 பயிற்சி உதவித் தொகையும் ரூ.150 பெறுமான பட்டுப்புழுத் தளவாடங்களும் வழங்கப்பட்டன.

1989-90-ஆம் ஆண்டிற்கு மல்பரி பயிர்க் கடனாக 45 நபர்களுக்கும், புழு வளர்ப்பு மனை அமைக்க 50 நபர்களுக்கும், புழு வளர்ப்புத் தளவாடங்கள் வாங்க 90 நபர்களுக்கும் குறியீடு நிர்ணயிக்கப்பட்டது. இவற்றில் சாதனையாக மல்பரி பயிர்க் கடனுக்கு 84 நபர்களுக்கும், புழு வளர்ப்புத் தளவாடங்கள் வாங்க 90 நபர்களுக் கும், புழு வளர்ப்பு மனை அமைக்க 96 நபர் களுக்கும் கடன் வசதிகள் மற்றும் மானியத் தொகை வசதிகள் கிடைக்க வழிவகை செய்யப் பட்டது.

இம்மாவட்டத்தில் 2,110 பட்டு விவசாயிகள் மல்பரி பயிரிட்டு பட்டு வளர்ப்புத் தொழிலில் ஈடுபட்டு வருகின்றனர். நடப்பு ஆண்டில் 1989 ஏப்ரல் முதல் மார்ச் '90 முடிய 2.56 இலட்சம் கிலோ கிராம் பட்டுக் கூடுகள் உற்பத்தி செய்யப் பட்டுள்ளது. இதன் மதிப்பு ரூ.1.80 கோடியாகும். பட்டுத் தொழிலில் 2,110 விவசாயிகள் நேரிடை யாகப் பயன் பெறுவதோடு 10,550 நிலமற்ற விவசாயப் பணியாளர்களும் வேலைவாய்ப்புப் பெற்று வருகின்றனர்.

—எஸ். நாகராசன்,
உதவி மக்கள் தொடர்பு அலுவலர்
பெரியார் மாவட்டம்

**இணையத்தின் சாதனை:**

காஞ்சிபுரம் மத்திய கூட்டுறவு வங்கியில் காசுக்கடன் வசதி பெற்று, இவ்விணையம் ஒரு ஆண்டுக்குச் சுமார் 22 கோடி ரூபாய் மதிப் புள்ள பட்டு கொள்முதல் செய்து விற்பனை செய்து வருகிறது. தமிழ் நாட்டில் செயல்படும் விற்பனைச் சேவை அங்காடிகளிலேயே, 'டான் சில்க்' விற்பனை அங்காடிதான் அதன் ஆண்டுச் சாதனைக் குறி யீட்டை மிஞ்சிய அளவில் செயல் படும் நிறுவனமாக மிளிர்கிறது.

1989-90-ஆம் ஆண்டுக்கு நிர்ணயிக்கப்பட்ட சாதனைக் குறி யீடு 1 இலட்சத்து 65 ஆயிரம் கிலோ பட்டு நூலாகும். இவ்விணையம், 31.3.1990 முடிய 2 இலட்சத்து 58 ஆயிரம் கிலோ பட்டு நூல் செலாவணி செய்து, சாதனை படைத்தது.

1990-91-ஆம் ஆண்டுக்கு 2.50 இலட்சம் கிலோ பட்டு கொள்முதல் செய்து விற்பனை செய்ய அரசு இலக்கு நிர்ணயித்துள்ளது. இந்த இலக்கினை இணையம் எட்டே மாதங்களில் நிறைவு செய்துள்ளது. மேலும், 31.12.90 வரை கொள் முதலில் 116.69 சதவீதமும், விற் பனையில் 118.74 சதவீதமும் இதுகாறும் இல்லாத அளவில் கொள் முதல் மற்றும் விற்பனையில் சாதனை புரிந்துள்ளது.

தமிழக அரசின் முழு ஒத்துழைப் பினால் மட்டுமே அவ்விணையம் குறிப்பிடத்தக்க அளவில் தனது விற்பனையில் சாதனை படைத் துள்ளது என்பதைப் பெருமையுடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

பட்டு வளர்ச்சித் துறையின் கீழ் செயல்பட்டு வரும் அரசு பட்டு நூற்பு நிலையங்களில் 5 பட்டு நூற்பு நிலையங்களை இந்த எட்டா வது ஐந்தாண்டுத் திட்டத்தில் இவ்விணையமே ஏற்று நடத்துவது என முடிவு செய்யப்பட்டுள்ளது.

9.1.91 அன்று காஞ்சிபுரத்தில் அண்ணா பட்டு பரிமாற்றகம் துவங்கிய பின் இணையத்தின் பங்கு மிக அதிக அளவில் இருக்கும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரி வித்துக் கொள்கிறோம். அன்றாடம் பட்டு பரிமாற்றகத்தில் வரப் பெறும் மொத்த கச்சாப்பட்டில் 10-இல் ஒரு பங்கினை இணையம் கொள்முதல் செய்யத் தீர்மானித்துள்ளது.

மேலும், தமிழ்நாடு அரசு இணை யத்திற்குத் தேசிய கூட்டுறவு வளர்ச் நிறுவனத்திடமிருந்து ரூ.100 இலட்சம நிதி உதவி பெற்று வழங்கத் தக்க பரிந்துரைகள் செய்துள்ளது. அத் தொகையை விரைவில் பெறுவதற்கான முயற்சிகளையும் இணையம் மேற் கொண்டுள்ளது. எனவே, தமிழ் நாட்டில் பட்டு வளர்ச்சி முன்னேற, இணையம் தன்னலமற்ற சேவை செய்து வருகிறது என்று சொன்னால் அது மிகையல்ல.

இந்த இணையத்தின் அபரிமித மான சாதனைக்குப் பட்டுக் கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கம், பட்டு நூற்புச் சேவை தொழில் கூட்டுறவுச் சங்கம், சர்வோதய சங்கம் ஆகியவைகளின் முழு ஒத் துழைப்பும், இயக்குநர் கைத்தறி மற்றும் துணிநூல், இயக்குநர், பட்டு வளர்ச்சித்துறை, தலைமைச் செயல் அலுவலர், தமிழ்நாடு காதி மற்றும் கிராமத் தொழில் வாரியம், அரசுச் செயலர் கைத்தறி, கைவினை, துணி நூல் மற்றும் காதித் துறை ஆகி யோருடைய ஆதரவும் இருந்ததால் தான் இந்த வளர்ச்சியினை அடைய முடிந்தது என்பதை மகிழ்வுடன் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.



3 — ஆம் பக்கத் தொடர்ச்சி



திரு. க. சுந்தரம் ஆகியவர்களும் - அந்தந்த வட்டாரத்தைச் சேர்ந்த நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களும் - ஊராட்சி ஒன்றியத் தலைவர் களும், பேரூராட்சி, ஊராட்சித் தலைவர்களும் கலந்து கொண்டு வாழ்த்துரை வழங்கினார்கள்.

*மாவட்ட வாரியாக...*

செங்கை-அண்ணா மாவட்டத்தில், 7.1.91 அன்று மேற்கொண்ட நற்பணிப் பயணத்தின் போது 96 கிராமங்களில் கட்டப்பட்டிருந்த 1,630 இலவசக் காங்கிரீட் வீடுகள், 75 ஊராட்சிமன்ற அலுவலகக் கட்டடங்கள், 22 பள்ளிக்கூடக் கட்டடங்கள் மற்றும் மேனிலைக் குடிநீர்த் தொட்டி களை மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் திறந்து வைத்தார்.

வட ஆர்க்காடு-அம்பேத்கர் மாவட்டத்தில், 8.1.91 அன்று மேற்கொண்ட நற்பணிப் பயணத் தின்போது - 115 கிராமங்களில் கட்டப்பட்டுள்ள 1,910 இலவசக் காங்கிரீட் வீடுகளும், 82 ஊராட்சி அலுவலகக் கட்டடங்களும் 24 பள்ளிக் கூடக் கட்டடங்களும் மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டன.

அதே நாளில், திருவண்ணாமலை-சம்புவராயர் மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட நற்பணிப் பயணத்தின்போது - 61 கிராமங்களில் கட்டி முடிக்கப்பட்டிருந்த 1,095 இலவசக் காங்கிரீட் வீடுகளும், 65 ஊராட்சி அலுவலகக் கட்டடங் களும், 20 பாடசாலைக் கட்டடங்களும் மாண்புமிகு முதல்வர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டன.

ஏழை எளிய ஆதிதிராவிட மக்களுக்கான இலவசக் காங்கிரீட் வீடுகளை மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள், அந்தந்த வீடுகளில் 'ரிப்பன்' வெட்டித் திறந்து வைத்ததோடு நின்று விடாமல் - வீடுகளுக்குள்ளே சென்று குத்துவிளக்கேற்றி வைத்தார். கட்டுமானப் பணிகளைப் பார்வை யிட்டார்.

இந்த இரண்டு நாட்களிலும் ஏழை எளிய மக்களுக்குத் தமிழக அரசால் வழங்கப்பட்ட அரசு நல்வாழ்வுத் திட்ட உதவிகளின் மதிப்பு மட்டும் 18 கோடி ரூபாய் ஆகும்.


குறிப்பாக அந்த இரண்டு நாட்களிலும் அந்த மூன்று மாவட்டத்து ஏழை எளிய மக்களும் மகிழ்ச்சி வெள்ளத்தில் மிதந்தார்கள்; அந்த வெள்ளத்தில், இலவசக் காங்கிரீட் வீடுபோன்ற அமைப்பில் மாண்புமிகு முதல்வர் அவர்கள் பயணம் செய்த 'வேன்' அன்னம்போல உலாவந்த அழகே அழகு!

- நிகழ்ச்சித் தொகுப்பு:
பி.எல். ராஜேந்திரன்.



*வாயைத் திறக்கவும் சக்தி - இன்றி*
*வயிற்றைப் பிசைந்திடும் ஏழைகட்கே நீ*
*தாயென்ற பாவனை யோடும் - உன்*
*சதையையும் ஈந்திட ஒப்புதல் வேண்டும்!*

— புரட்சிக் கவிஞர்



# “இரண்டே ஆண்டுகள் - ஒரு லட்சம் வீடுகள்!”

“நான் இந்தப் பயணத்தை, தொடர்ந்து 15 அல்லது 20 நாட்கள் நடத்தத்தான் எண்ணியிருந்தேன். ஆனால் இடையிலே தமிழகச் சட்டமன்றம் கூட்டப்படவேண்டிய சூழ்நிலை இருப்பதாலும், அதன் தொடர்பாக அலுவல்கள் பல இருப்பதாலும் இடையிடையே இந்தப் பயணத்தை ஆங்காங்கு, மேற்கொண்டு, மக்களுக்குத் தேவையான நல்வாழ்வுத் திட்டங்களை வழங்கலாமென்று முடிவு செய்யப்பட்டிருக்கிறது.

இன்றைக்கு இந்தப் பகுதியிலே இந்த செம்பரம் பாக்கம் பூந்தமல்லி, குன்றத்தூர் ஆகிய ஒன்றியங்கள் பங்குபெறும் நிகழ்ச்சியிலே மாத்திரம், ஆதி திராவிடர் பழங்குடியினர்க்கான இலவசத் தொகுப்பு வீடுகள் 445, பள்ளிக் கட்டடம் ஒன்று, ஊராட்சி மன்றக் கட்டடங்கள் 13, சாலை வசதிகள் 20, பஞ்சாயத்து வேலைகள் 169, குடிநீர்த் திட்டம் 136, ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம் 721, மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவு திருமண உதவித்திட்டத்தின் கீழ் - எட்டாவது வரை படித்த ஏழைப் பெண்கட்குத் திருமண உதவியாக ரூ.5,000 வழங்குவது என்று கடந்த ஆண்டிலே இந்த அரசு அறிவித்து, இதுவரையிலே 30,000- க்கும் மேற்பட்ட பெண்கட்கு அந்த நிதி உதவி வழங்கப்பட்டிருக்கிறது.

அதைப் போல முத்துலட்சுமி ரெட்டி நினைவு மகப்பேறு உதவித்திட்டம், கர்ப்பிணிகட்குப் பிரசவத்திற்கு முன்பு இரண்டு மாதங்கள் - பிரசவம் முடிந்து இரண்டு மாதங்கள் — அவர்களுடைய சத்துணவுச் செலவுகட்காக மாதம் ரூ.50 வீதம் நான்கு மாதத்திற்கு மொத்தம் ரூ.200 வழங்கப்படுகிற திட்டம், ஏறத்தாழ இரண்டாண்டுக் காலத்திலே இரண்டு இலட்சம் கர்ப்பிணிகட்குத் தரப்பட்டிருக்கிறது என்கிற எண்ணிக்கையினைத் தொடக்கூடிய அளவிற்கு அந்தத் திட்டம் நிறைவேற்றப்பட்டிருக்கிறது, அதனையொட்டி இன்றைக்கு மாத்திரம் 1,250 பேருக்கு அந்த உதவி வழங்கப்பட்டிருக்கிறது.

தாட்கோ திட்டம் 3, தொலைக்காட்சிப் பெட்டி 1, சமூக நல உதவித் திட்டம் 1, முதியோர் உதவித் திட்டத்தின் சார்பில் 275 பேர் ஆக, 3,146 திட்டங்களுக்கு ரூ.258 இலட்சம் - ஏறத்தாழ இரண்டரைக் கோடிக்கு மேல் இந்த ஒரு நிகழ்ச்சியிலே மாத்திரம் வழங்கப்படுகிறது.

ஆதிதிராவிடர்களுக்கான வீடுகளைத் திறப்பதற்காக மாத்திரம் அல்ல, நான் இங்கே குறிப்பிட்ட பொதுத் தலைப்பிட்ட பல்வேறு நல்வாழ்வுத் திட்டங்களுக்காகவும் இந்தப் பயணம் மேற்கொள்ளப்பட்டிருக்கிறது.

1974-ஆம் ஆண்டு இறுதியிலேதான் இப்படிப்பட்ட ஒரு திட்டத்தை - ஆதிதிராவிட மக்களுக்கு இலவசமாகக் காங்கிரீட் வீடுகள் கட்டித் தரும் ஒரு திட்டத்தை இந்தியாவிலேயே முதன் முதலாக நான் முன்பு முதலமைச்சராக இருந்தபோது அறிவித்தேன்.

அப்படி அறிவித்தது மட்டுமல்ல; அந்த வீடுகளை இந்த செங்கை- அண்ணா மாவட்டத்தில், நம்முடைய பூந்தமல்லித் தொகுதியில் நண்பர் டி. ராஜரத்தினம் அவர்கள் சட்டமன்ற உறுப்பினராக இருந்தபோது, பாபு ஜெகஜீவன்ராம் அவர்களை அழைத்து வந்து காட்டுப்பாக்கத்தில் இந்த வீடுகளுடைய தொடக்க விழா - இதனைத் திறந்த வைக்கின்ற விழா 1974-ஆம் ஆண்டில் நடைபெற்றதை இந்தப் பகுதி மக்கள் மறந்திருக்க மாட்டார்கள்.

எனவே, நாம்தான் இந்தியாவிலேயே முதன் முதலாக, ஆதிதிராவிடர்கட்கு இலவசமாக, அதுவும் காங்கிரீட் வீடுகளைக் கட்டித் தர வேண்டும் என்று அறிவித்து அதைச் செயல்படுத்தியவர்கள்.

74-ன் இறுதியிலே தொடங்கி, 75-இன் இறுதிக்குள்ளாக நாம் ஏறத்தாழ 30,000 வீடுகளை ஆதி திராவிடர் மக்களுக்காகக் கட்டி முடித்திருக்கின்றோம்.

மீண்டும் ஆட்சிப் பொறுப்பினை ஏற்ற பிறகு கடந்த ஓராண்டில் 42,000 வீடுகளை ஆதி திராவிடர் மக்களுக்காக நாம் இலவசமாகக் கட்டித் தந்திருக்கின்றோம். இதிலே மத்திய அரசும் பங்கு கொள்கிறது.

நாம் முதலிலே தொடங்கிய பிறகு மத்திய அரசு அதிலே பங்கு கொள்ள முன்வந்தது. அவர்கள் மைய அரசின் பங்காக ரூ.8,160 தருகிறார்கள். மாநில அரசின் பங்காக ரூ.2,400 போடப்பட்டு ஏறத்தாழ ரூ.10,000 விலையில் வீடுகள் ஒட்டுவில்லை வீடுகளாகக் கட்டப்பட்டன.



நாங்கள் மீண்டும் ஆட்சிக்கு வந்தவுடன் அந்த மாநில அரசின் மானியமாகத் தரும் ரூ.2,400-ஐ ரூ.6,000 ஆக உயர்த்தி ரூ.14,200 செலவிலே இந்த வீடுகள் - காங்கிரீட் வீடுகள் அமைக்கப்பட்டிருக்கின்றன.

மிக நேர்த்தியாகவும், அழுத்தந் திருத்தமாகவும், விரைவிலே பழுதடையாது என்கிற உத்திரவாதத்தோடும் இந்த இல்லங்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன. உள்ளே இருக்கிற அடுக்களையிலேகூட அங்கே இருந்து கிளம்புகின்ற புகை அந்த வீட்டிற்குள்ளே பரவாமல் தனியாகக் குழாய்கள் அமைக்கப்பட்டு, அந்தப் புகை வெளியே செல்வதற்கான வசதிகள் செய்யப்பட்டிருக்கின்றன.

ஆதிதிராவிடர் மக்களுக்கு இதுபோன்ற வீடுகள் கட்டுகின்ற பணியிலே ஊராட்சி மன்றங்கள், ஒன்றியங்கள் ஒத்துழைக்கின்றன.

இங்கே உரையாற்றிய ஊராட்சி மன்றத் தலைவர், ஆளுங்கட்சியைச் சார்ந்தவர் அல்ல; என்றாலும்கூட இதை வரவேற்கிறார். இப்படிப்பட்ட நாகரிகம் தான் அரசியலிலே வரவேண்டும் என்று நான் எதிர்பார்க்கின்றேன்.

அவர், “இன்னும் கூட எங்களுக்கு, அதிகம் செலவாகிறது” என்று சொன்னார். நீங்கள் எண்ணிப் பார்க்க வேண்டும்; மத்திய அரசு ஒரு பங்கு தருகிறது. மாநில அரசு ஒரு பங்கு தருகிறது; இதில் அதிகம் செலவானால் அது பஞ்சாயத்துப் பங்காக இருக்க வேண்டும். உங்களுக்கும் அதிலே பங்கிருக்க வேண்டும். அந்தப் பங்கினை நீங்கள் செலத்திட வேண்டும்.

பல்வேறு மக்கள் நல்வாழ்வுத் திட்டங்களை வழங்கிட நான் மேற்கொண்டிருக்கின்ற இந்தப் பயணம் இன்றைக்குச் செம்பரம்பாக்கத்திலே தொடங்குகிறது.


இன்றும் நாளையும் மாத்திரம் ஏறத்தாழ 4,000-க்கும் மேற்பட்ட ஆதிதிராவிட இல்லங்கள் திறக்கப்படுகின்றன. இவைகளன்னியில் மொத்தத்திலே ரூ.18 கோடி, இன்றைக்கும் நாளைக்கும் இந்தத் திட்டங்களின் மூலமாக வழங்கப்பட இருக்கிறது.

நான் முதலிலே குறிப்பிட்டதுபோலக் கடந்த ஆண்டு இந்த ஆட்சியிலே 42,000 வீடுகள், இந்த ஆண்டு 47,000 வீடுகள் மொத்தம் 89,000 வீடுகள்; நான் உங்களுக்கு உறுதி அளிக்கின்றேன் - ஏப்ரல் மாதத்திற்குள்ளாக மேலும் 10,000 வீடுகள் கட்டப்பட்டு, இந்த ஆண்டினுடைய - இந்த இரண்டு ஆண்டினுடைய இலக்காக ஒரு இலட்சம் வீடுகள் ஆதிதிராவிடர் மக்களுக்காகக் கட்டி முடிக்கப்பட்டன என்ற நல்ல செய்தி உங்களுக்கு வழங்கப்படும்!”

- மாண்புமிகு முதல்வர் கலைஞர்

**(7.1.91 அன்று, ஆதிதிராவிட மக்களுக்கான இலவச வீடுகளைத் திறந்துவைத்து, செங்கை-அண்ணா மாவட்டம் செம்பரம்பாக்கத்தில் ஆற்றிய உரையிலிருந்து.)**





# நற்பணிப் பயண நிகழ்ச்சியில் அமைச்சர்கள்

மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் 7.1.91 - 8.1.91 ஆகிய இருநாட்களும் மேற்கொண்ட நற்பணிப் பயணத்தில் கலந்து கொண்ட அமைச்சர்கள் ஆற்றிய உரைச் சுருக்கம் வருமாறு-

''நற்பணிப் பயணம் மேற்கொண்டு, மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் இந்தத் தொகுப்பு வீடுகளைத் திறந்து வைக்கிறார். இங்கே இன்று இந்தப் பணி துவக்கி வைக்கப்படுகிறது என்றால், தமிழகமெங்கும் பரவலாக இந்தப் பணி நிறைவேற்றப்படவிருக்கிறது என்றே பொருள்.

ஏழை எளிய மக்களின் அடிப்படைத் தேவைகளை உணர்ந்த இந்த அரசு, ஆட்சிப்பொறுப்பேற்ற இந்த இரண்டாண்டுக் காலத்தில் பல நற்பணிகளை அவர்களுக்காக ஆற்றியிருக்கிறது. அதன் தொடர்பாகவே மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்களால் தொகுப்பு வீடுகள் வழங்கும் இந்த நற்பணிப் பயணம் மேற்கொள்ளப்பட்டிருக்கிறது.

இந்த வகையில் தாழ்த்தப்பட்ட மக்களின் - பிற்படுத்தப்பட்ட மக்களின் ஒரே நம்பிக்கை நட்சத்திரமாக விளங்குகிறார் நம்முடைய முதல்வர் அவர்கள். தாழ்த்தப்பட்ட சமுதாயத்திற்கு - பிற்படுத்தப்பட்ட - மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு மாண்புமிகு முதல்வர் கலைஞரை விட்டால் வேறு நாதியில்லை என்பதற்கு இன்று திறந்து வைக்கப்படும் இந்த வீடுகளே சாட்சி!''

**- கோ.சி. மணி**
**(மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர்)**

### கோயில்கள்-யாத்திரைத் தலங்கள்

***ரதத்திலே நான் வரவில்லை; அலங்காரமான ரதத்திலோ- குதிரை பூட்டிய ரதத்திலோ-யானை பூட்டிய ரதத்திலோ வரவில்லை; கையிலே வில், அம்பை வைத்துக் கொண்டு வரவில்லை.***

***இந்த ரதம் அயோத்திக்குப் போகிற ரதமல்ல; அநாதையாக வாழுகிற மக்கட்கு, ஆதரவற்ற மக்கட்கு, ஒரு காலத்திலே ஆதிக்கச் சக்தியால் அடிமைகளாக்கப்பட்ட மக்கட்காக வருகிற 'வேன்'; சாதாரண வேன்தான். அந்த 'வேன்' உங்களுக்காகக் கட்டித் தரப்படும் வீட்டின் அடையாளச் சின்னமாக இருக்கிறது.***

***நான் இங்கே இருபுறமும் ஆதிதிராவிடர்களுக்காகக் கட்டப்பட்டிருக்கிற இந்த அழகான வீடுகளைப் பார்க்கிறேன்.***

***இவைகள்தான் நான் சென்று வணங்குகின்ற ஆலயங்கள். எனக்கு இவைகள்தான் கோயில்கள். எனக்கு இப்படிப்பட்ட பகுதிகள்தான் யாத்திரைத் தலங்கள்!***

***—மாண்புமிகு முதல்வர் கலைஞர்***
***(7.1.91-இல், செங்கை அண்ணா மாவட்டம் ஏனாத்தூரில் பேசியதிலிருந்து)***



''தமிழகத்தின் வரலாற்றில் இந்தநாள் ஒரு முக்கியமான நாள். கிராமங்களிலெல்லாம் விழாக்களை கட்டியிருக்கக் காண்கிறோம்.

இந்தியாவின் எந்தப் பகுதியிலும் ஆதிதிராவிடர்களுக்கு இப்படிப்பட்ட இலவசக் காங்கிரீட் வீடுகள் கட்டித் தரப்படவில்லை; இங்கேதான் கட்டித் தரப்படுகின்றன. இது தேர்தல் நோக்கமல்ல; தாழ்த்தப்பட்ட மக்களைக் கைதூக்கி விடவேண்டும் என்கிற அரசின் உன்னத நோக்கத்தில் இதுவும் ஒன்று. இந்தியாவிலே அரிசனப் பெண்ணை மருமகளாக ஏற்ற ஒரே முதல்வர் நம்முடைய கலைஞர் அவர்கள்தான்.

கருவினுள்ளிருக்கும் குழந்தைக்கும் கருணை காட்டி வருபவர் கடவுள் என்பார்கள் பக்தர்கள்; கருவுற்றிருக்கும் மகளிர்க்கும் நிதியுதவி செய்து வருபவர் டாக்டர் கலைஞர். எட்டாம் வகுப்பு வரை படித்தால்கூட போதும்; நிதியுதவி, ஏழைப்பெண் திருமணத்திற்கு நிதியுதவி; சொத்தில் பெண்களுக்கும் பங்கு என்பது போன்ற நல்லபல திட்டங்களையெல்லாம் நிறைவேற்றி - தாயினும் சாலப் பரிந்து ஏழை எளிய மக்களைக் காக்கும் கருணையுள்ளம் கொண்டவர் மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள்.

நாடு இந்த நல்லரசைப் புரிந்து கொண்டுவிட்டது என்பதற்கு உதாரணம் தான் - இன்று காணும் மக்கள் வெள்ளம்!''

**- எஸ். துரைமுருகன்**
**(மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர்)**

''இன்றைக்குத்தான் என்பதல்ல; என்றைக்கு நம்முடைய தலைவர் அவர்கள் இந்த நாட்டின் ஆட்சிப் பொறுப்பை ஏற்றாரோ, அன்றைக்கே இந்த நற்பணிப் பயணம் தொடங்கி விட்டது.

கோட்டையிலே இருந்து சட்ட திட்டங்களை நிறைவேற்றுவது மட்டுமல்ல; அவற்றால் மக்கள் எந்த அளவுக்கு மனநிறைவு பெற்றார்கள் என்பதை நேரிலேயே போய்ப் பார்க்க வேண்டும் என்று நினைப்பவர்தான் நம்து மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள். அதுதான் இந்த நற்பணிப் பயணம்.

- தாழ்த்தப்பட்ட மக்கள் மீது மிகுந்த அக்கறையுள்ள ஒரே தலைவர் நம் கலைஞர் அவர்களேயாவர்ர்.

சுயவிளம்பரத்திற்காகவே சில திட்டங்களை அறிவித்துவிட்டு, வெறுமனே அடிக்கல் நாட்டிய முதல்வர்கள்-தலைவர்களையெல்லாம் இந்த நாடு கண்டிருக்கிறது. கழகத் தலைவர் கலைஞர் அவர்கள்தான், சொன்னதைச் செய்வோம்; செய்வதைச் சொல்வோம் என்ற வகையில் செயல்பட்டு வருகிறார். இந்த அரசில்தான் விளம்பரத்திற்காக அல்லாமல் ஏழை எளிய மக்களுக்காகவே திட்டங்கள் தீட்டப்படுகின்றன; முறைப்படி அதற்கான ஆணைகள் பிறப்பிக்கப்பட்டு, தேவையான நிதியும் ஒதுக்கப்படுகிறது.

இன்றைக்கு வழங்கப்படும் இலவசக் காங்கிரீட் வீடுகளே அதற்கு உதாரணம்.''

**- க. பொன்முடி**
**(மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்)**

''தாழ்த்தப்பட்ட மக்கள் நலனுக்காகவே தன்னை அர்ப்பணித்துக் கொண்டிருக்கிற ஒரே முதலமைச்சர், இந்தியாவிலேயே நம்முடைய தலைவர் கலைஞராகத்தான் இருக்க முடியும். 1974-இல் தாட்கோ என்றொரு அமைப்பை உருவாக்கி, சமுதாயத்தில் கேட்பாரற்றுக் கிடந்த ஆதிதிராவிட மக்களுக்கு அதன்மூலம் இலவசக் காங்கிரீட் வீடுகளைக் கட்டிக் கொடுத்த பெருமை அவருடையதாகும்.

இடையில் ஒரு பதின்மூன்று ஆண்டுக்காலம் தலைவர் அவர்கள் ஆட்சியில் இல்லை; அதனாலேயே அந்தப் பணி நின்றுபோயிருந்தது. இப்போது அவர்கள் மீண்டும் ஆட்சிப் பொறுப்பேற்ற 24 மணி நேரத்திற்குள்ளாகவே, இந்த வீடுகட்டும் பணியை - அதுவும் ஓட்டு வீடுகளையெல்லாம் ஓட்டு வீடுகளாக மாற்றும் பணியைத் தொடருவதாக அறிவித்து, அதற்கான பெரும் நிதியையும் அதற்கு அடுத்த வாரமே ஒதுக்கீடு செய்தார்கள். அதுமட்டுமல்ல; இந்தப் பணி எப்படியெல்லாம் விரைவாக நிறைவேற்றப்பட வேண்டும் என்றும் தெரிவித்து, கண்காணித்து வந்தார்கள். இந்தத் திட்டம் இன்னும் தொடர விருக்கிறது.

இலவச வீடுகள் வழங்கப்படும் இது ஒரு வரலாற்றுச் சிறப்புமிக்க நிகழ்ச்சி. தாழ்த்தப்பட்ட மக்களின், மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்களின், அடக்கப்பட்ட மக்களின், ஒடுக்கப்பட்ட மக்களின் பாதுகாவலராக விளங்கி வருபவர் மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள்.''

**- க. சுந்தரம்**
**(மாண்புமிகு ஆதிதிரவிட நலத்துறை அமைச்சர்)**

### ஏழைகட்கெல்லாம் வீட்டுவசதி

***''தாழ்த்தப்பட்டவர்களுக்கு, ஆதி திராவிடர்களுக்கு வீடுகள் கட்டப்படுகின்ற இந்தப் பணி ஓரளவு முன்னேறிய பிறகு-இன்னும் சில இலட்சம் வீடுகள் கட்டப்பட்ட பிறகு, தொடர்ந்து என்னுடைய ஆசை ஏழை எளியவர்களாக இருக்கின்ற- மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்கள், அவர்கள் முக்குலத்தவர்களாக, வன்னியர்களாக இப்படிப் பல்வேறு பிரிவு மக்களாக இருக்கின்றார்கள்; அந்த மக்களுக்கெல்லாம்- அவர்கள் ஏழைகளாக இருந்தால், வருமான அடிப்படையில் கணக்கைப் பார்த்து, அவர்களுக்கும் இது போன்ற இலவச வீட்டுத் திட்டத்தை இந்த அரசு விரைவிலேயே அறிமுகப்படுத்தும்.''***

***—மாண்புமிகு முதல்வர் கலைஞர்***
***(செங்கை அண்ணா மாவட்டம் கூரத்தில், 7.1.91-இல் நடைபெற்ற கூட்டத்தில் பேசியதிலிருந்து)***

### அட்டைப்பட விளக்கம்:

**தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில், 18.1.91 அன்று மேதகு தமிழ்நாடு ஆளுநர் திரு. சுர்ஜித்சிங் பர்னாலா அவர்கள் உரை ஆற்றிய காட்சி,**



சோம சீலா அணைக்கட்டிலிருந்து பூண்டி நீர்த்தேக்கம் வரை அமைக்கப்பட்டு வரும் கால்வாயின் தோற்றம்.

## சென்னைக்கு விரைந்து வரும்

# தெலுங்கு கங்கை

சென்னை மாநகர மக்களின் குடிநீர்த் தேவையை நிறைவுசெய்யும் பொருட்டு, கிருஷ்ணா ஆற்றிலிருந்து கால்வாய் மூலம் சென்னைக்குக் குடிநீர் கொண்டுவரும் திட்டம் தான் ''தெலுங்கு கங்கைத் திட்டம்''. இத்திட்டத்தின் மூலம் மகாராஷ்டிரம், கர்நாடகம், ஆந்திரம் ஆகிய மூன்று மாநிலங்களும் கிருஷ்ணா ஆற்றிலிருந்து தமது பங்காகத் தலா 5 டி.எம்.சி. தண்ணீர் வீதம் மொத்தம் 15 டி.எம்.சி. தண்ணீரைச் சென்னைக்கு வழங்குகின்றன.

கிருஷ்ணா ஆற்று நீர் ஸ்ரீசைலம் நீர்த்தேக்கத்திலிருந்து அணுகுக் கால்வாய் மூலம் பொத்திரெட்டி பாடு தலை மதகுக்குக் கொண்டு வரப்படுகிறது. அங்கிருந்து 16.3 கி.மீ. நீளமுள்ள கால்வாய் மூலம் பனகசர்லா மதகுகளில் கொண்டு விடப்படுகிறது. இப்பணிகள் யாவும் முடிக்கப்பெற்று விட்டன. பனகசர்லாவிலிருந்து மற்றொரு கால்வாய் மூலம் வேலுகோடு நீர்த் தேக்கத்திற்கத் தண்ணீர் வந்தடைகிறது. இங்கிருந்து கிருஷ்ணா ஆற்று நீர் 154 கி.மீ. நீளமுள்ள கால்வாய்

மூலம் பெண்ணாற்றில் விடப்படுகிறது. பெண்ணாற்றில் விடப்படும் கிருஷ்ணா ஆற்று நீர் சோமசீலா

**சென்னை மாநகர மக்களின் தாகம் தீர்ப்பதற்காகக் கிருஷ்ணா ஆற்றிலிருந்து குடிதண்ணீர் கொண்டு வருவதற்காகத் தெலுங்கு கங்கைத் திட்டம் தொடங்கப்பட்டது. மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் காட்டிவரும் முனைப்பின் காரணமாகத் திட்டப் பணிகள் முடுக்கிவிடப் பட்டுள்ளன. 1993-ல் பணி நிறைவேற உள்ளது.**

**இத்திட்டப் பணிகளை நேரிற் கண்டறிய மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் திரு துரைமுருகன் அவர்களும், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு பொன்முடி அவர்களும், ஜனவரி-10, 11, 12 ஆகிய தேதிகளில் ஆந்திர மாநிலம் நெல்லூர் மாவட்டத்திலுள்ள சோமசீலா அணைக்கட்டுப் பகுதி வரை சென்று பணிகளின் முன்னேற்றத்தைப் பார்வையிட்டனர். சென்னையிலிருந்து செய்தியாளர்கள் அழைத்துச் செல்லப்பட்டனர். அந்த விவரங்களை நமது செய்தியாளர் இங்கே தருகிறார்.**

என்னுமிடத்தில் கட்டப்பட்டுள்ள அணையிலிருந்து மிகப்பெரிய கான்கிரீட் கால்வாய் வழியாகக்

கண்டலேறு நீர்த் தேக்கத்திற் கொண்டு வரப்படுகிறது. இந் கால்வாய் 45 கி.மீ. நீளத்திற

மலைகளைக் குடைந்தும் பாஎ களை வெட்டியும் பாலங்க அமைத்தும் உருவாக்கப்பட்டுள்ள



**ஆந்திர மாநிலம் சோமசீலா அணைக்கட்டிலிருந்து சென்னைக்குத் தண்ணீர் திறந்து விடுவதற்காக அமைக்கப்பட்டுள்ள தலை மதகை, மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் திரு துரைமுருகன் அவர்களும், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு பொன்முடி அவர்களும் பார்வையிடுகின்றனர்.**

கண்டலேறு நீர்த் தேக்கம் மிகப் பெரிய அளவில் புதிதாக அமைக்கப் பட்டு வருகிறது. கண்டலேறு நீர்த் தேக்கத்திலிருந்து 152 கி.மீ. நீளமுள்ள கால்வாய் மூலம் தமிழ்நாட்டு எல்லைக்குத் தண்ணீர் கொண்டு வந்து விடப்படுகிறது. தமிழ்நாட்டு எல்லையிலிருந்து பூண்டி நீர்த் தேக்கத்திற்குக் கிருஷ்ணா ஆற்றுத் தண்ணீர் வந்து சேருகிறது. பூண்டியிலிருந்து இணைப்புக் கால்வாய்கள் மூலம் புழல் மற்றும் செம்பரம் பாக்கம் ஏரிகளுக்குத் தண்ணீர் கொண்டு செல்லப்பட்டு அங்கே சுத்திகரிக்கப்பட்டு பின்பு சென்னை மாநகருக்குக் கொண்டு வரப்பட்டு, குழாய்களின் மூலம் வழங்கப் படுகிறது.

தெலுங்கு கங்கைத் திட்டத்தில் ஆந்திர மாநிலப் பணிகளின் மொத்த மதிப்பீடு 984.40 கோடி ரூபாயாகும். இதில் தமிழ்நாட்டின் பங்கு 252 கோடி ரூபாய். இது வரை தமிழ்நாடு அரசு தன் பங்காக 107 கோடி ரூபாய் ஆந்திர மாநில அரசுக்குக் கொடுத்துள்ளது. இத் திட்டத்திற்காகத் தமிழ்நாடு அரசு இந்த ஆண்டு (1990-91) ஒதுக்கியுள்ள 45 கோடி ரூபாயில் ஏற்கெனவே 15 கோடி ரூபாய் ஆந்திர மாநில அரசுக்கு வழங்கப்பட்டு விட்டது. மீதமுள்ள 30 கோடி ரூபாயையும் தேவைப்பட்டால், உடனடியாக வழங்குவது பற்றி தமிழ்நாடு- ஆந்திர மாநிலங்களின் உயர் அதிகாரிகள் ஒருங்கிணைப்பு ஆலோசனைக் கூட்டம் முடிவு செய்யும்.



சென்னைக்குக் கொண்டு வரப் படும் கிருஷ்ணா ஆற்று நீரைச் சேமிதது வைக்கும் பொருட்டு பூண்டி, செங்குன்றம் மற்றும் செம்பரம்பாக்கம் ஆகிய ஏரிகளின் கரைகளை உயர்த்தவும் குடிநீரைச் சுத்தப்படுத்தும் நிலையங்கள் அமைக்கவும், குழாய்கள் பதிக்கவும் உலக வங்கி உதவியுடன் தமிழ்நாடு அரசு 500 கோடி ரூபாய்த் திட்டம் ஒன்றையும் செயல்படுத்தி வருகிறது.

**- தொகுப்பு: தே. மணி.**

நவனக்கரப்பக ... சென்னை-600 008.

# சின்கோனா ஒரு கண்ணோட்டம்

தமிழ்நாடு அரசு சின்கோனாத் துறை, 1-4-90 முதல் தமிழ்நாடு தேயிலைத் தோட்டக் கழகத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. இத்துறையின் பரந்த நிலப்பரப்பையும், உடைமைகளையும் பயனுள்ள வகையில் பயன்படுத்துவதே இதன் நோக்கமாகும்.

தேயிலை போன்ற மாற்றுப் பொருட்களின் விற்பனையில் கிடைக்கும் வருவாயைப் போல் இல்லாமல், கொய்னாப் பொருட்களின் விற்பனை, உலக அரங்கில் ஒரு குறிப்பிட்ட வரம்பிற்குள்ளேயே உள்ளது. தேயிலை பயிரிடத் தகுதியற்ற நிலங்கள் காடு வளர்க்க வனத்துறைக்கு ஒப்படைக்கப்படுகின்றன. மருந்துச் செடிகளில் கிடைக்கும் உற்பத்திப் பொருட்கள் குறைந்துள்ளதாலும், மாற்று மருந்துகளின் உபயோகம் அறியப்பட்டதாலும் இத்துறைக்குப் போதிய வருவாய் கிட்டவில்லை. இச்சூழ்நிலையின் காரணமாக, இத்துறையைத் தேயிலைத் தோட்டக் கழகத்துடன் இணைத்து, இத்துறை நிலங்களில் தேயிலை பயிரிட முடிவு செய்யப்பட்டது.

சின்கோனாத் துறை நிலங்களை— தமிழ்நாடு தேயிலைத் தோட்டக் கழகத்திற்கு உகந்த நிலங்களை-ஆராய்ந்து அறிய அரசு தனிக்குழு ஒன்று அமைத்துள்ளது. இக்குழு வனத்துறைக்கும் தேயிலைக் கழகத்திற்கும் பொருத்தமான நிலங்களை ஆராய்ந்து அரசுக்குக் கருத்துரு வழங்கியது.

சின்கோனாத் துறையைச் சார்ந்த 256 அரசு அலுவலர்களும் பணியாளர்களும், 1,650 தொழிலாளர்களும் தமிழ்நாடு தேயிலை தோட்டக் கழகப் பொறுப்பில் உள்ளனர். மேற்கண்ட அரசுப் பணியாளர்களுக்கு வனத்துறை தாய்த்துறையாகவும் தேயிலைத் தோட்டக்கழக்கத்திற்கு 'அயற்பணி' என்ற நிபந்தனையுடனும் பணிக்காலம் நிர்ணயிக்கப்பட்டு ஆணை வழங்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு தேயிலைத் தோட்டக் கழகம் 1990-91-ஆம் ஆண்டு முதல், ஒவ்வொரு ஆண்டும் குறிப்பிட்ட பரப்பில் தேயிலை பயிரிடுவதென்றும் 1998-99-ஆம் ஆண்டிற்குள் மொத்தம் 3000 எக்டேர் பரப்பில் தேயிலை பயிரிடப்படவேண்டும் என்றும் உத்தேசிக்கப்பட்டுள்ளது.

இவ்வாண்டில் இதுவரை 12.50 எக்டேர் தேயிலை பயிரிடப்பட்டுள்ளது. 1991-92-ஆம் ஆண்டிற்கு 255 எக்டேர் தேயிலை பயிரிட உத்தேசிக்கப்பட்டுள்ளது. தமிழ்நாடு தேயிலைத்தோட்டக் கழகத்திடமிருந்து தேயிலை நாற்றுக்கள் பெற்று இப்பிரிவில் தேயிலை நாற்றங்கால்கள் அமைக்கப்பட்டுள்ளன.

தேயிலை முழு அளவில் பயிரிட்டு முடிந்தவுடன் சுமார் 7,000 தொழிலாளர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்க வாய்ப்புள்ளது. இத்திட்டத்திற்கு மொத்தம் 9 ஆண்டுகளுக்கு ரூபாய் 8,800 இலட்சங்கள் தேவைப்படுமென்று எதிர்பார்க்கப்படுகிறது.

நீலகிரியில் படிப்படியாக மொத்தம் 600 எக்டேர் நிலப்பரப்பில் தேயிலை பயிரிட இக்கழகம் முடிவு செய்துள்ளது. இதனால், சின்கோனாத் துறை நிரந்தரத் தொழிலாளர்களுக்கு வேலை வாய்ப்பளிப்பதுடன் அவர்களின் வாரிசுதாரர்களுக்கும் தற்காலிகப் பணி வழங்கவும் வாய்ப்புள்ளது. இத்தொழிலாளர்களுக்கு ரூ.14 இலட்சம் மதிப்பீட்டில் 35 தரமான புதிய வீடுகள் கட்டித்தரவும் இக்கழகம் முடிவு செய்துள்ளது. தொழிலாளர் குடியிருப்புக்கு மின் இணைப்பு வழங்க இவ்வாண்டில் ரூ.3.5 இலட்சம் ஒதுக்கீடு செய்துள்ளது.

சின்கோனாத் துறையைத் தேயிலைத் தோட்டக் கழகத்துடன் இணைத்த பிறகு தொழிற்சங்கங்களுடன் ஆலோசனை நடத்தி, தீர்மானம் செய்து, இத்தொழிலாளர்களுக்குத் தின ஊதியத்தை ரூ15.95-லிருந்து ரூ.20 ஆக உயர்த்தி 1.10.90 முதல் வழங்கி வருகிறது இத்தொழிலாளர்களுக்கு ரூ.400 வீதம் சென்ற தீபாவளிப் பண்டிகைக்கு (1990) வழங்கப்பட்டுள்ளது.

மு.நா. கிருஷ்ணசாமி,
உதவி மக்கள் தொடர்பு அலுவலர்
உதகமண்டலம்,
நீலகிரி மாவட்டம்.

## அம்பேத்கர் நூற்றாண்டு



★ ஆயிரமாயிரம் ஆண்டு அடிமைகளாகத் தன்மானத்தை இழந்து இருப்பதைக் காட்டிலும், அரை நிமிடம் வாழ்வாங்கு வாழ்ந்து அமரராவது சாலச் சிறந்ததாகும்!

ஆசிரியரும் வெளியிடுபவரும் தமிழ்நாடு அரசு செய்தி மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை. அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
முகவரி : தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-600 002. தொலைபேசி எண் : 568926, 568927

அதி நவீன பட்டு வகைகள்



100% உன்னதமான பட்டு
உத்தரவாதமான ஜரிகை

உங்கள் உலகில் முக்கிய பங்கு பெறுவது வண்ணங்கள்... அவைகளின் அழகு ஜாலங்களை பொலிவும் நேர்த்தியும் மிக்க பட்டு வகைகளில் உங்களுக்குக் கோ-ஆப்டெக்ஸ் அளிக்கிறது.

கோ-ஆப்டெக்ஸ் பங்கு பெறட்டும் — உங்கள் இனிய நேரங்களில்!

கோ-ஆப்டெக்ஸ்
தமிழ்நாடு கைத்தறி
இந்தியாவின் உயர் விற்பனை கைத்தறி வகைகள்.

• புடவைகள் — பருத்தி, பாலியெஸ்டர், பட்டு • ஷர்ட்டிங் • சூட்டிங் • ஃபர்னிஷிங் • பெட்ஷீட்கள் • டவல்கள் • வேட்டிகள் • லுங்கிகள். இணையிலா புதுமைகள். எண்ணிலா வகைகள்.

DIPR/1766/MS88/HTA


59890




மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள்
7.1.91 - 8.1.91 ஆகிய நாட்களில்,
செங்கை- அண்ணா, வட ஆர்க்காடு-
அம்பேத்கர், திருவண்ணாமலை-சம்புவராயர்
மாவட்டங்களில் மேற்கொண்ட
நற்பணிப் பயணக் காட்சி.


தமிழரசு

## தமிழகத்திற்குப் பெருமை சேர்த்த தேசிய மாணவர் படையினர்!




திரு கெவின் கோமால்




செல்வி அஸ்வினி நாராயணன்



# இந்த இதழில்...




| | |
|---|---|
| தமிழ்நாட்டில் குடியரசுத் தலைவர் ஆட்சி அரசு அறிவிப்பு ... | 2 |
| மேதகு ஆளுநரின் ஆலோசகர்கள் வாழ்க்கைக் குறிப்பு ... | 4 |
| காவிரி நீர்: மேதகு ஆளுநர் கடிதங்கள் ... | 6 |
| தமிழகத்திற்குப் பெருமை சேர்த்த தேசிய மாணவர் படை ... | 9 |
| தருமபுரி மாவட்டத்தில் தோட்டக்கலை வளர்ச்சி ... | 10 |
| தமிழ் வளர்த்த பெரியார்: கவிவேந்தர் செகவீர பாண்டியனார் ... | 11 |
| நேதாஜி ஒரு பார்வை ... | 12 |
| எண்ணெய்வித்துச் சாகுபடியில் சாதனை ... | 14 |
| தமிழக செஸ் வீரர் ஆனந்த் ... | 16 |
| பெண் சிசுக்கள் கொலைக்கு முற்றுப்புள்ளி ... | 17 |
| குழாய்க் கிணற்றில் மின்னியல் ஆய்வின் அவசியம் ... | 19 |
| பெரியார் மாவட்டத்தில் பட்டுத்தொழில் வளர்ச்சி ... | 21 |
| மாணவர் பக்கம் ... | 23 |
| மாமல்லபுரத்தில் வசந்த விழா ... | 25 |
| சென்னை மாநகராட்சிச் செய்திகள் ... | 27 |
| படமும் செய்தியும் ... | 30 |


**தமிழரசு**

திருவள்ளுவர் ஆண்டு 2022

மாசித் திங்கள் - 4

மலர்: 21 இதழ்: 16

16-2-1991

# தமிழ்நாட்டில்
# குடியரசுத் தலைவர் ஆட்சி
## அரசு அறிவிப்பு

**ஆணை:**

புது டில்லி, நாள் 30.1.1991-

G.S.R. 55(E) — குடியரசுத் தலைவர் பிறப்பித்துள்ள பின்வரும் ஆணை, பொதுமக்களின் தகவலுக்காக இதன்கீழ் வெளியிடப்படுகிறது:-

''இந்திய அரசமைப்புச் சட்டத்தின் 356-ஆம் பிரிவின் கீழ், 30.1.1991 அன்று அதிகார முறையில் என்னால் வெளியிடப்பட்ட அறிவிப்பின் (சி) பகுதியைச் சேர்ந்த (1) உட்பகுதிக்கிணங்க, தமிழக அரசின் அனைத்து அலுவல்களையும், அரசமைப்புச் சட்டத்தின் மூலம் அல்லது அந்த மாநிலத்தில் தற்போது செயலிலிருக்கும் எந்தவொரு சட்டத்தின் மூலம், அம்மாநில ஆளுநரிடம் நிலைபெற்றுள்ள அல்லது அவர் செலுத்தத்தக்க அனைத்து அதிகாரங்களையும், அதிகார முறையில் அறிவிக்கப்பட்ட மேற்சொன்ன அறிவிப்பின் பகுதியின் மூலம், குடியரசுத் தலைவர் ஏற்றுக் கொண்டுள்ளதாகக் கருதி, அவருடைய (குடியரசுத் தலைவருடைய) மேற்பார்வை, உத்தரவு, கட்டுப்பாடு ஆகியவற்றிற்கு உட்பட்டு, மேற்சொன்ன மாநிலத்தின் ஆளுநர் செலுத்தத்தக்கவையாகும் என்று நான் இதனால் கட்டளையிடுகிறேன்.

| | |
|---|---|
| புது டில்லி,<br>30.1.1991 | ஆர். வெங்கட்ராமன்<br>குடியரசுத் தலைவர் |
| புது டில்லி,<br>30.1.1991 | ஆர். கே. பார்கவா<br>மத்திய உள்துறைச் செயலாளர் |
| சென்னை-9<br>30.1.1991 | டி.வி. அந்தோணி<br>தலைமைச் செயலாளர் |

பாகம் II - பிரிவு I

தலைமைச் செயலகத் துறைகள் வெளியிட்ட சிறப்புத் தன்மை வாய்ந்த அல்லது பொது மக்களின் குறிப்பிட்ட நலனின் பேரிலான அறிவிக்கைகள் அல்லது ஆணைகள்

**அரசின் அறிவிக்கைகள்.**

**பொதுத்துறை**
**(மிகு மறைபொருள்)**

**தமிழ்நாட்டில் குடியரசுத் தலைவர் ஆட்சியை அதிகார முறையில் அறிவித்தல்.**

(கடித எண். SS-I/145-1/91 பொது (மிமபொ), 30.1.1991





புகைப்படம் உதவி: 'தி இந்து'

எண். II (1)PUSC/22(a)/91

புது டில்லி, இந்திய அரசின் உள் விவகாரங்கள் அமைச்சகத்தின், 30.1.1991-ஆம் நாளிட்ட கீழ்க்காணும் அறிவிக்கையும் ஆணையும் மீண்டும் வெளியிடப்படுகின்றன.

**அறிவிக்கை**

G.S.R. 54(E) – குடியரசுத் தலைவரின் கீழ்க்காணும் பொது அறிவிப்பு, பொதுமக்களின் தகவலுக்காக வெளியிடப்படுகிறது:

**இந்திய அரசமைப்புச் சட்டத்தின் (இதன் பிறகு ''அரசமைப்புச் சட்டம்'' எனக் குறிப்பிடப்படும்) விதித்துறைகளுக்கு இணங்க, தமிழ்நாடு அரசு செயல்பட இயலாத நிலை தோன்றியுள்ளது என்று இந்தியக் குடியரசுத் தலைவராகிய, ஆர்.வெங்கட்ராமன் என்கிற நான் ஐயமறத் தெளிவதால்,**

**அரசமைப்புச் சட்டத்தின் 356-ஆம் பிரிவில் வழங்கியுள்ள அதிகாரங்களைக் கொண்டும், அதன் சார்பில் எனக்கு அளிக்கப்பட்டுள்ள பிற அதிகாரங்களைக் கொண்டும், நான் இதனால் பின்வருவனவற்றைச் செய்கிறேன்:-**

(a) இந்த மாநில அரசின் அலுவல்கள் அனைத்தையும், மாநில ஆளுநரிடம் நிலைபெற்றுள்ள, அல்லது அவர் செயல்படுத்தக்கூடிய அதிகாரங்கள் அனைத்தையும் இந்தியக் குடியரசுத் தலைவர் என்ற முறையில் நான் ஏற்கிறேன்;

(b) இந்த மாநிலச் சட்டமன்றத்தின் அதிகாரங்கள், நாடாளுமன்றத்தால் அல்லது அதன் அதிகாரத்தின்கீழ் செயல்படுத்தப்படத் தக்கதாகும் என்று அறிவிக்கிறேன்;

(c) இந்த அறிவிப்பின் நோக்கங்களுக்குச் செயல்வடிவம் அளிப்பதற்குத் தேவையானதாக, அல்லது, விரும்பத்தக்கதாக எனக்குத் தோன்றுகிற பின்வரும் இடைநிகழ்வான செயல்விளைவான விதித்துறைகளை ஏற்படுத்துகிறேன்; அவையாவன:-

(I) மேற்சொன்னபடி, இந்த அறிவிப்பின் (a) பகுதி காரணமாக நான் ஏற்றுக் கொண்டுள்ள அலுவல்களையும், அதிகாரங்களையும் செலுத்துகின்ற வகையில், இம்மாநில ஆளுநரின் மூலம் நான் பொருத்தமெனக் கருதுகிற அளவிற்கு இந்தியக் குடியரசுத் தலைவர் என்ற முறையில் செயல்படுவது சட்டபூர்வமானதாகும்;

(II) இந்த மாநிலம் தொடர்பான அரசமைப்புச் சட்டத்தின் பின்வரும் விதித்துறைகளின் செயல்பாடுகள் இதனால் தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்படுகின்றன; அவையாவன:-

இந்திய அரசமைப்புச் சட்டத்தின் 3-ஆம் பிரிவைச் சேர்ந்த வரம்பு நிபந்தனை மாநிலச் சட்டமன்றத்திற்குக் குடியரசுத் தலைவர் குறிப்பிட்டனுப்புவது தொடர்புடைய அளவிற்குச் செயல்பாடு;

இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவர் ஆளுநரிடம் சமர்ப்பிக்கும் அறிக்கைகளை மாநிலச் சட்டமன்றத்தில் வைப்பது தொடர்புடைய அளவிற்கு 151-ஆம் பிரிவின் (2) ஆம் பகுதி;

163, 164 ஆகிய பிரிவுகள்:-

மாநில அரசின் அலுவல்களை, அமைச்சர்களிடையே ஒதுக்கீடு செய்வது தொடர்புள்ள அளவிற்கு 166-ஆம் பிரிவைச் சேர்ந்த (3) ஆம் பகுதி.

167-ஆம் பிரிவும் ஒரு மாநிலச் சட்டப் பேரவை நிறைவேற்றும் தீர்மானம் தொடர்புள்ள அளவிற்கு, 169-ஆம் பிரிவின் (1) பத்தியும்

174-ஆம் பிரிவின் (1) பகுதி (2) பகுதியின் (a) துணைப்பகுதி, 175- ஆம் பிரிவிலிருந்து 178-ஆம் பிரிவுவரை (இருபிரிவுகளும் உட்பட) 179-ஆம் பிரிவின் (b) (c) பகுதிகள் 179-ஆம் பிரிவின் முதல் வரம்பு நிபந்தனை 180, 181 ஆகிய பிரிவுகள்.

சட்டப் பேரவைத் துணைத் தலைவரின் சம்பளங்கள், படிகள் தொடர்புள்ள அளவிற்கு 186-ஆம் பிரிவு; 188, 189, 193, 194, 195, 196 ஆகிய பிரிவுகள். 199-ஆம் பிரிவின் (3) (4) பகுதிகள்.

சட்டப்பேரவைத் துணைத் தலைவரின் சம்பளங்கள், படிகள் தொடர்புள்ள அளவிற்கு 202-ஆம் பிரிவின் (3) பகுதி; 208 முதல் 211 வரையிலான பிரிவுகள் (இரு பிரிவுகளும் உட்பட) 213-ஆம் பிரிவின் (1) பகுதியின் வரம்பு நிபந்தனையும் (3) பகுதியின் வரம்பு நிபந்தனையும்.

மாநிலச் சட்டமன்றத்தில் குறிப்புகளுடன் அறிக்கை வைப்பது தொடர்புள்ள 323-ஆம் பிரிவின் (2) பகுதி.

**(III) மேற்சொன்ன மாநிலச் சட்டப் பேரவை இதனால் கலைக்கப்படுகிறது;**

**(IV) மேற்சொன்ன மாநிலம் தொடர்பாக ஆளுநர் என்று அரசமைப்புச் சட்டத்தில் குறிப்பிடும் இடங்களிலெல்லாம், குடியரசுத் தலைவர் என்று பொருள் கொள்ள வேண்டும்; மாநிலச் சட்டமன்றத்தின் பணிகள் அதிகாரங்கள் தொடர்பாக, மாநிலச் சட்டமன்றம் என்று குறிப்பிடும் இடங்களிலெல்லாம், சந்தர்ப்பம் வேறு பொருள் குறித்தாலன்றி மற்றபடி குறிப்பாக மாநிலச் சட்டமன்றம், ஆளுநர் என்று 213- ஆம் பிரிவில் வருமிடங்களிளெல்லாம் நாடாளுமன்றம், குடியரசுத் தலைவர் என்று பொருள் கொள்ள வேண்டும்.**

அதனால், இங்குக் குறிப்பிட்டவை 153, 155, முதல் 159 வரையிலான பிரிவுகள் (இரு பிரிவுகளும் உட்பட) 299-ஆம் பிரிவு, 361-ஆம் பிரிவு ஆகியவற்றின் விதித்துறையையும் இரண்டாம் விவர அட்டவணையின் 1 முதல் 4 வரையிலான பத்திகளையும் (இரு பத்திகளும் உட்பட) பாதிக்காது அல்லது இப்பகுதியின் (I) துணைப் பகுதியின் கீழ் மேற்சொன்ன மாநிலத்தின் ஆளுநர் மூலமாகத்தான் பொருத்தமெனக் கருதும் அளவுக்கு இந்தியக் குடியரசுத் தலைவர் செயல்படுவதிலிருந்து அவரைப் பாதிக்காது;

(V) மேற்சொன்ன மாநிலத்தின் சட்டமன்றம் இயற்றிய சட்டங்களும் அல்லது சட்டவிதிகளும், அல்லது, அச்சட்டமன்றத்தின் சட்டங்களும் சட்டவிதிகளும் என்று அரசமைப்புச் சட்டத்தில் வருமிடங்களிலெல்லாம், அதிகாரபூர்வமான இந்த அறிவிப்பு மூலம், நாடாளுமன்றம் அல்லது அரசமைப்புச் சட்டத்தின் 357-ஆம் பிரிவின் (1) பகுதியின் (a) துணைப் பகுதியில் குறிப்பிட்ட குடியரசுத் தலைவர், அல்லது, வேறு ஓர் அதிகாரி மேற்சொன்ன மாநிலச் சட்டமன்றத்தின் அதிகாரங்களைச் செலுத்தி இயற்றிய சட்டங்கள் அல்லது சட்டவிதிகளெனப் பொருள் கொள்ளப்பட வேண்டும். தமிழ்நாடு மாநிலத்தின் செயலிலுள்ள தமிழ்நாடு 1891-ஆம் ஆண்டு பொதுப் பகுதிகள் சட்டமும் (த.நா.சட்டம் 1/189) மாநிலச் சட்டங்களுக்குப் பொருந்துகிறவாறு, 1897-ஆம் ஆண்டு பொதுப்பகுதிகள் சட்டம் (10/1897) மேற்சொன்ன மாநிலச் சட்டமன்றத்தின் சட்டத்தைப்போன்று, யாதொரு சட்டம் அல்லது சட்டவிதிகள் தொடர்பாகச் செயலிலிருக்கும்.

(எண்.V/11013/2/91. சிஎஸ்-ஆர்)

| | |
|---|---|
| புதுடில்லி,<br>30.1.1991 | ஆர். வெங்கட்ராமன்<br>குடியரசுத் தலைவர் |
| புதுடில்லி,<br>30.1.1991 | ஆர். கே. பார்கவா<br>உள்துறைச் செயலாளர் |
| சென்னை-9<br>30.1.1991 | டி.வி. அந்தோணி<br>தலைமைச் செயலாளர் |

# காவிரிநீர்:

## ஆளுநர் கடிதம்



**மேதகு தமிழக ஆளுநர் திரு எஸ்.எஸ். பர்னாலா அவர்கள், தமிழகத்திற்குக் காவிரி நீர் விட ஆவன செய்யுமாறு மாண்புமிகு இந்தியப் பிரதமர் அவர்களுக்கு 1.2.91 அன்று கடிதம் எழுதினார். அதன் விவரம் வருமாறு:**

தமிழ்நாடு, உணவு உற்பத்தியில் காவிரி ஆற்றுப் பகுதியைத்தான் அதிகமாக நம்பி இருக்கிறது என்று உங்களுக்கு நன்றாகத் தெரியும்.

1974-ஆம் ஆண்டில் இருந்து இந்தப் பகுதியில் நீர்ப்பாசனம் அபாயகரமான நிலையில் இருக்கிறது. இதுபற்றி மாநிலங்களுக்கு இடையே உள்ள பிரச்னை சமீபத்தில் அமைக்கப்பட்ட நடுவர் மன்றத்தில் இருக்கிறது.

இந்த ஆண்டு கர்நாடக மாநில அரசு 1924-ஆம் ஆண்டு ஒப்பந்தத்தைத் தொடர்ந்து நடைமுறைப் படுத்தாததால் மேட்டூர் அணைக்குத் தண்ணீர் வரத்து மிகவும் குறைவாக இருந்தது. சாகுபடிக்காக மேட்டூர் அணையில் இருந்து 9 வாரங்களுக்குப் பின்பு, அதாவது கடந்த ஆண்டு ஆகஸ்டு மாதம் 22- ஆம் தேதிதான் திறக்க முடிந்தது. இதனால் ஒரு போகச் சாகுபடிதான் செய்ய முடிந்தது.

51 இலட்சம் ஏக்கர் நிலத்தில் குறுவைச் சாகுபடி செய்ய முடியவில்லை.

கடந்த ஆண்டு அக்டோபர் மாதத்தில் இருந்தே, தமிழ்நாடு கர்நாடக அரசைத் தண்ணீர் திறந்து விடும்படி கேட்டுக்கொண்டு இருக்கிறது.

கடந்த ஜனவரி மாதம் 6-ஆம் தேதி முன்னாள் முதல்-அமைச்சர் உங்களுக்கு ஒரு டெலக்ஸ் செய்தி அனுப்பினார். அதில் பயிர்களைக் காப்பாற்றத் தண்ணீர்த் தேவையைக் கூறி உங்கள் செல்வாக்கைப் பயன்படுத்தி, கர்நாடக அரசு 20 டி.எம்.சி (ஒரு டி.எம்.சி என்பது 100 கோடி கன அடி) தண்ணீர் திறந்துவிட ஏற்பாடு செய்யும்படி கேட்டிருந்தார்.

இதுகுறித்து, டெல்லியில் நடந்த நீர்ப்பாசனத் துறை அமைச்சர்கள் மாநாட்டிலும் நீங்கள் இது குறித்து கர்நாடக முதல்- அமைச்சரிடம் விவாதித்ததாக அறிகிறேன்.

தொடர்ந்து, கடந்த ஜனவரி மாதம் 19-ஆம் தேதி, முன்னாள் முதல்-அமைச்சர் கர்நாடக முதல்-அமைச்சருக்குக் கடிதம் எழுதி இருந்தார். ஆனால் எந்தப் பதிலும் இன்னும் வரவில்லை.

இப்போது மேட்டூர் அணையில் 5.7 டி.எம்.சி தண்ணீர்தான் இருக்கிறது. இதில் 7 டி.எம்.சி. தண்ணீரைத்தான் பயன்படுத்த முடியும். இப்போது பயிர்களைக் காப்பாற்ற, குறைந்தது 10 டி.எம்.சி தண்ணீராவது வேண்டும்.

எனவே, தாங்கள் உங்கள் செல்வாக்கைப் பயன்படுத்தி உடனடியாக 10 டி.எம்.சி தண்ணீரைக் காவிரியில்விட ஏற்பாடு செய்யும்படிக் கேட்டுக் கொள்கிறேன்.

இந்த விஷயத்தில் உடனடித் தலையீடும், உதவியும் பயிர்களைக் காப்பாற்ற மிகவும் அவசியம். இல்லையென்றால் விவசாயிகளுக்குப் பெரிய இழப்பு ஏற்படுவதோடு, அரிசி உற்பத்தியில் கணிசமான பற்றாக்குறையும் ஏற்படும்.

மேற்கண்டவாறு பிரதமருக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் மேதகு ஆளுநர் அவர்கள் எழுதியுள்ளார்.

**இதுபோல மாண்புமிகு கர்நாடக முதல்-அமைச்சர் பங்காரப்பாவுக்கும் அதே நாளில் மேதகு தமிழக ஆளுநர் அவர்கள், ஒரு கடிதம் எழுதி இருக்கிறார். அந்தக் கடிதத்தில் அவர் கூறி இருப்பதாவது:**

'புதுச்சேரி யூனியன் பிரதேசத்தில் உள்ள காரைக்கால் பகுதி உள்படத் தமிழ்நாட்டில் உள்ள பயிர்களைக் காப்பாற்ற உடனடியாகக் கர்நாடக அணைகளில் இருந்து குறைந்தபட்சம் 15 டி.எம்.சி தண்ணீர் விட வேண்டும் என்று கோரி, முன்னாள் முதல்- அமைச்சர் கடந்த மாதம் 19-ஆம் தேதி எழுதிய கடிதத்தைப் பார்க்கும்படிக் கேட்டுக்கொள்கிறேன். இதுகுறித்து எங்களுக்குப் பதில் இன்னும் வரவில்லை.

காவிரிப் படுகைப் பகுதியில் ஒரு கணிசமான அளவு பயிர்களுக்கு இன்னும் ஒன்று அல்லது இரண்டு முறை தண்ணீர் விடாவிட்டால் இந்த மாநிலத்தில் உணவு உற்பத்தியில் பெரும் இழப்பு ஏற்படும்.

மேட்டூர் அணையில் உள்ள தண்ணீரை பெரும் பகுதி பயன்படுத்தி விட்டோம். நீர்ப்பாசனத்துக்குத் தண்ணீர் எடுக்க மிகக் குறைவான அளவு தண்ணீரே இருக்கிறது. மேலும் நீர்ப்பாசனமின்றி வாடிக்கொண்டு இருக்கும் பயிர்களைக் காப்பாற்ற மேட்டூரில் 15 டி.எம்.சி. தண்ணீர் இல்லாவிட்டாலும், உடனடியாக - 10 டி.எம்.சி. தண்ணீர் எங்களுக்குத் தேவைப்படுகிறது.

எனவே, நிலைமையைச் சமாளிக்க உடனடியாகக் குறைந்தபட்சம் 10 டி.எம்.சி தண்ணீர் கர்நாடக அணைகளில் இருந்து விடவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இந்த நேரத்தில் உங்கள் உதவி மிகவும் பாராட்டப்படும்.

மேற்கண்டவாறு அந்தக் கடிதத்தில் குறிப்பிடப் பட்டிருந்தது.

**இவ்விரு கடிதங்களுக்கும் தகுந்த பலன் காணாத நிலையில், மேதகு தமிழக ஆளுநர் அவர்கள், மாண்புமிகு இந்தியப் பிரதமர் அவர்களுக்கு 11.2.1991 அன்று மீண்டும் ஒரு கடிதம் எழுதினார். அதில் குறிப்பிடப்பட்டிருந்ததாவது:**

அன்புள்ள பிரதமர் அவர்களுக்கு,

எனது 1.2.1991 நாளிட்ட முந்தைய கடிதத்தை அன்புகூர்ந்து பார்க்கவும்; அக்கடிதத்தில், காவிரிப் படுகையில், வளர்ந்த நிலையிலுள்ள பயிர்களைக் காப்பாற்றுவதற்காகக் கர்நாடக நீர்த்தேக்கங்களிலிருந்து உடனடியாகத் தண்ணீர் விடுவதற்கான அவசியம் குறித்து விளக்கி, குறைந்தது 10 டி.எம்.சி. தண்ணீராவது விடுமாறு கர்நாடக அரசைத் தாங்கள் வலியுறுத்த வேண்டியிருந்தேன். அன்றே, இதுகுறித்து மாண்புமிகு கர்நாடக முதல்வர் அவர்களுக்கும் ஒரு கடிதம் எழுதினேன். அவரிடமிருந்து பெறப்பட்ட பதில் கடிதத்தின் நகலை இத்துடன் இணைத்துள்ளேன்.

மாண்புமிகு கர்நாடக முதல்வர் அவர்கள் தனது கடிதத்தில், ''5 டி.எம்.சி. அளவுக்கு மிகாமல்'' தண்ணீர் விடுவது குறித்துப் பரிசீலிக்கப் பின்வரும் நிபந்தனைகளை மீண்டும் வலியுறுத்தியுள்ளார்:

அ) நடுவர் மன்றத்திலும், உச்ச நீதிமன்றத்திலும் இடைக்கால ஆணை வேண்டி அளித்துள்ள மனுக்களைத் தமிழ்நாடு அரசு திரும்பப் பெற வேண்டும்;

ஆ) மின்பற்றாக்குறை மிக அதிகமாக உள்ளதால், தண்ணீருக்குப் பதிலாகத் தமிழ்நாடு மின்சாரம் அளிக்க வேண்டும்;

இ) எந்த நிலையில் தண்ணீர் அளித்தாலும், அதனை வழங்கப்பட்ட உரிமையாகவோ, முன்மொழியாகவோ எடுத்துக் கொள்ளக் கூடாது.

புதுடெல்லியில் 16.1.1991 அன்று நடைபெற்ற நீர்ப்பாசன அமைச்சர்கள் மாநாட்டில் தமிழ்நாடு அரசு பொதுப்பணித்துறை முன்னாள் அமைச்சரின் வேண்டுகோளுக்குப் பதிலாக, மாண்புமிகு கர்நாடக முதல்வர் அவர்கள் மேற்கூறிய நிபந்தனைகளை விதித்தபோது, தண்ணீர் விடுவதை எந்தவித நிபந்தனைகளுடனும் இணைக்காமல், விளைந்துள்ள பயிர்களைக் காப்பாற்ற உடனடியாகத் தண்ணீர் விடுவதற்கான நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமெனத் தாங்கள் அவரைக் கேட்டுக்கொண்டதாக அறிகிறேன். இம்மாதிரியான வேண்டுகோளைப் பரிவுடனும் காரணங்களை உணர்ந்தும் கவனிப்பதை விடுத்து, மாண்புமிகு கர்நாடக முதல்வர் அவர்கள் காரணமில்லாத, ஏற்றுக்கொள்ளவியலாத நிபந்தனைகளை வலியுறுத்த முனைவது துரதிருஷ்டவசமானது.

கடந்த இருபது ஆண்டுகளாகப் பேச்சுவார்த்தைகளின் மூலம் தீர்வுகாண அனைத்து வழிகளிலும் முயன்றது வீணாகிய பின்னரே, இறுதி வழியாக, மாநிலங்களுக்கிடையேயான தண்ணீர் தகராறு குறித்து 1956- சட்டத்தின்படி இப்பிரச்

---

### முதலாவது அட்டை சொல்லும் செய்தி:

## யானைக்குப் புரிந்த மொழி!

யானைக்கு அறிவும், நினைவாற்றலும் உண்டு. பாகனின் சொற்களையும் செய்கைகளையும் மிக எளிதில் புரிந்து கொள்ளும் சக்தி அதற்கு இருக்கிறது.

யானைகளைப் பழக்கவும், நடத்தி வரவும் இந்திய மாவுத்தர்கள் பயன்படுத்தும் மொழிதான் மிகவும் தொன்மையானது என்று கருதப்படுகிறது. இவர்கள் இந்தியையோ, பாரசீகத்தையோ, அராபியையோ அதற்குப் பயன்படுத்தவில்லை; ஆதிகாலத்தில், சுமார் ஐம்பதாயிரம் ஆண்டுகளுக்கு முன்னால் குகைகளிலே வாழ்ந்துவந்த கற்கால மனிதர்கள் பயன்படுத்தி வந்த மொழியையே அவர்கள் அதற்குப் பயன்படுத்துகிறார்கள்!

ஐம்பதாயிரம் ஆண்டுகளுக்கு முந்திய அம்மொழியே யானைக்குப் புரிகிறது என்றால், யானையின் நினைவாற்றலுக்கு இது ஓர் சான்றாகும். அதைத் தவிர வேறெந்த மொழியையும் புதிதாகப் புரிந்து கொள்ள மறுக்கிறதாம் யானை!

### நான்காவது பக்க அட்டைப் படம்:

மஞ்சள் வெயில் மாலையில் தஞ்சைப் பெரிய கோயில்.

# ஆலோசகர்கள் பொறுப்பு வகிக்கும் அரசுத் துறைகள்

மேதகு தமிழக ஆளுநரின் ஆலோசகர்களான திரு.வி.கார்த்திகேயன் — திரு. வி.இராமச்சந்திரன் இருவருக்கும் உரிய துறைகள் ஒதுக்கீடு பற்றி 6.2.91 அன்று அரசு அறிவித்தது. அதன் விவரம் வருமாறு:

### திரு.வி.கார்த்திகேயன் இ.ஆ.ப. (ஓய்வு)

பொதுத்துறை
ஆதிதிராவிடர் நலம்
வேளாண்மை
பிற்படுத்தப்பட்டோர் நலம்
கல்வி
உள்துறை-மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை
வீட்டுவசதி மற்றும் புறநகர் வளர்ச்சி
செய்தி-சுற்றுலாத்துறை
சட்டம்
சட்டமன்றம்
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்குதுறை
நடைமுறை நிர்வாகச் சீர்திருத்தம்
வருவாய்த்துறை
சமூக நலத்துறை - சத்துணவு
தமிழ் வளர்ச்சி மற்றும் பண்பாட்டுத் துறை

### திரு.வி.இராமச்சந்திரன் இ.ஆ.ப. (ஓய்வு)

கால்நடை மற்றும் மீன்வளம்
வணிகவரி-இந்துசமய அறநிலையத்துறை
கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் நலம்
சுற்றுப்புறச் சுகாதாரம் மற்றும் வனவளம்
நிதி
மக்கள் நல்வாழ்வு
தொழில்
தொழிலாளர் நலன் மற்றும் வேலைவாய்ப்பு
திட்டவளர்ச்சி
பொதுப்பணித்துறை
ஊரக வளர்ச்சி
போக்குவரத்து

---

சினைக்குத் தீர்வு காணுவதற்காகத் தமிழ்நாடு அரசு நடுவர் மன்றம் அமைக்க வேண்டுமெனக் கோர நேர்ந்தது. இம்மாநிலத்தில் உரிமைகள் நடுவர் மன்றத்தின் விசாரணைகளின்போது ஏற் பட்ட ஒப்பந்தங்களைத் தொடர்ந்து மீறுவதனால் பாதிக்கப்படக்கூடாது என்பதை நிலைநிறுத்தவே, நடுவர் மன்றத்திலும் அதன்பின் உச்ச நீதிமன்றத் திலும் இடைக்கால ஆணைக்காகத் தமிழ்நாடு மனுச் செய்ய நேர்ந்தது. தற்போதுள்ள மிக அவசரத் தேவையைச் சரிசெய்யத் தண்ணீர் கோரும் இந்தச் சூழ்நிலையில் மனுக்களைத் திரும்பப் பெறவேண்டும் என்று நிபந்தனை விதிப்பது நீதியும் இல்லை, நியாயமுமில்லை. தற்போதுள்ள 'மாநிலங்களுக்கிடையேயான தண்ணீர் அளிப்பது' குறித்த ஒப்பந்தங்களை மீறி, நதியின் நீரோட்டத்தை வழிமறித்து நீரைத் தக்க வைத்துக் கொண்டு, மாண்புமிகு கர்நாடக முதல்வர் அவர்கள் இப்போது மனிதாபிமான அடிப்படையிலாவது வளர்ந்து நிற்கும் பயிர் களைக் காப்பாற்றக் கோரப்பட்ட குறைந்த அளவு நீரைக்கூட அளிக்க மறுத்து, நதி நீர்ப்படுகை யிலுள்ள மாநிலத்தின் அனைத்து உரிமைகளையும் விட்டுக் கொடுக்கக் கோருகிறேன்.

சரியான நேரத்தில் தண்ணீர் அளிக்கக் கர்நாடக அரசு மறுத்ததனால் பயிர்களுக்கு அழிவு நேர்ந்துள்ளது. மேட்டூர் அணையில் நீர் இருப் பின்றி 19.1.1991 முதல் நீர்ப்பாசனத்திற்குத் தண்ணீர் விடுவதை நிறுத்த நேர்ந்தது.

மாண்புமிகு கர்நாடக முதல்வர் அவர்கள் தனது கடிதத்தில், தமிழ்நாடு 30 டி.எம்.சி. தண்ணீர்விடக் கோரியிருந்தது என்றும், அதன்பின்னர் ஓரளவு மழை பெய்து நீர்ப்பாசனத்திற்கு உதவியுள்ளது என்றும் குறிப்பிட்டிருந்தார். ஜனவரி 1991 முதல் வாரத்தில் நானே காவிரி நீர்ப் படுகைப் பகுதியைச் சென்று பார்த்தேன்; மேட்டூர் அணையின் நீர்மட்டம் வேகமாகக் குறைந்து வருவதாலும், ஜனவரி மாத இறுதிக்குள் கர்நாடக நீர்த்தேக்கங்களிலிருந்து தண்ணீர் விடாவிட்டால், டெல்டாப் பகுதியில் குறிப்பாகக் கடைமடைப் பகுதியில் வளர்ந்துள்ள பெருமளவுப் பயிர்கள் வாடி அழிந்துவிடும். ஜனவரி 17, 18 தேதிகளில் டெல்டாப் பகுதியில் பெய்த மழையின் மூலம் சூழ்நிலை சிறிதளவு முன்னேற்றம் கண்டது; பொதுவாக, வடகிழக்குப் பருவமழை டிசம்பர் இறுதியில் படிப்படியாகக் குறைந்து விடும். இந்த மழை சற்றும் எதிர்பாராதது ஆயினும் வரவேற்கத்தக்கது. ஆனால், இந்த மழை பெய்தும் இறுதிப் பாசனத்திற்கு நீரின்றி டெல்டாவின் ஒரு சில 'பகுதிகளில் பயிர்கள் பாதிக்கப்பட்டுள்ளன.

காவிரி டெல்டாவில் இன்னும் ஏறத்தாழ 4 இலட்சம் ஏக்கர் நிலத்தில் நெற்பயிர் அறுவடை செய்ய வேண்டியுள்ளது. இதில், இறுதியில் இரண்டு, மூன்று முறை பயிர்களுக்கு நீர் பாய்ச்சி னால் ஏறத்தாழ 1 இலட்சம் ஏக்கரில் உள்ள நெற்பயிர் விளைச்சல் குறிப்பிடத்தக்க அளவு அதிகமாகும். இனி மழை வருவதற்கான வாய்ப்பே இல்லை. ஆகவே, இந்த இக்கட்டான சூழ்நிலையில் நிபந்தனைகளை வலியுறுத்தாது அவர்களுடைய நீர்த்தேக்கங்களிலிருந்து குறைந்தது 10 டி.எம்.சி.யாவது தண்ணீர் விடுமாறு கர்நாடக முதல்வர் அவர்களுக்கு அறிவுரை கூறவேண்டு மாய்த் தங்களை வேண்டிக்கொள்கிறேன்.

மாண்புமிகு இந்திய உள்துறை இணை அமைச்சர் திரு சுபோத் காந்த் சகாய் அவர்களுடன் இன்று நாங்கள் நடத்திய ஆலோசனையின்போதும் இந்தப் பிரச்சினை குறித்து அவரது கவனத்துக்குக் கொண்டு வரப்பட்டது.

- இவ்வாறு அக்கடிதத்தில் குறிப்பிடப் பட்டுள்ளது.





## தமிழ்நாடு ஆளுநரின் ஆலோசகராகப் பொறுப்பேற்றுள்ள திரு. வே.கார்த்திகேயன், இ.ஆ.ப. (ஓய்வு)

### அவர்கள் வாழ்க்கைக் குறிப்பு

**பிறந்த நாள்:** 7.10.1924. **கல்வி:** பி.ஏ., (ஆனர்ஸ்). **இதரத் தகுதிகள்:** (1) 1966 ஏப்ரல் மாதம் மலேசியா நாட்டில் கோலாலம்பூரில் நடைபெற்ற உலகத் தமிழ் - கல்வி மாநாட்டின் கருத்தரங்கு; (2) 1966 - ஜூலை-ஆகஸ்ட் திங்களில் ஜெர்மனியிலுள்ள வளரும் நாடுகளுக்கு உதவும் அமைப்பினால் மேற்கு பெர்லினில் ஏற்பாடு செய்யப்பட்ட வேளாண்மை வளர்ச்சித் திட்டங்கள் குறித்த உலக அளவிலான கருத்தரங்கு. (3) 1968 - செப்டம்பர்-அக்டோபர் திங்களில் சிங்கப்பூரில் நடைபெற்ற கடல் துறைகள் மற்றும் துறைமுகங்கள் பற்றிய மண்டலக் கருத்தரங்கு ஆகியவற்றில் கலந்துகொண்டு இருவாரப் பயிற்சி யும் பெற்றார்.

**பயின்ற இடம்:** சென்னை கிறித்தவக் கல்லூரி. **பணி:** 1947-ஆம் ஆண்டு நடைபெற்ற முதல் இ.ஆ.ப. தேர்வில் தேர்ச்சி பெற்று 1948-ஆம் ஆண்டு பணியில் சேர்ந்தார்.

**வகித்த பதவிகள்:** 1958 ஏப்ரல் 22 முதல் 1960 நவம்பர் 15 வரை வருவாய் வாரியம் (நில வருவாய்) மற்றும் உணவு உற்பத்தித் துறையின் செயலர்; 1960 நவம்பர் 16 முதல் 1963 நவம்பர் வரை வேளாண்மை இயக்குநர்; 1963 டிசம்பர் முதல் 1964 பிப்ரவரி 28 வரை வருவாய்த் துறையின் கூடுதல் செயலர்; 1964 மார்ச் 1 முதல் 1965 மார்ச் 10 வரை வருவாய்த் துறைச் செயலர்; 1965 மார்ச் 22 முதல் 1965 ஜூலை 20 வரை மத்திய அரசின் பெட்ரோலியம் மற்றும் இரசாயனப் பொருட்கள் அமைச்சகத்தில் சிறப்புப் பணி அலுவலர்; 1965 ஆகஸ்ட் 2 முதல் 1965 நவம்பர் 10 வரை தமிழ்நாடு அரசு பொதுத் துறையில் கூடுதல் செயலர் மற்றும் தமிழ் வளர்ச்சி இயக்குநர்; 1965 நவம்பர் 10 முதல் 1965 டிசம்பர் 27 வரை உணவு மற்றும் வேளாண்மைத் துறையின் கூடுதல் செயலர்; 1965 டிசம்பர் 28 முதல் 1967 மார்ச் 13 வரை வேளாண்மைத் துறைச் செயலர்; 1967 மார்ச் 14 முதல் 1967 மே 12 வரை உணவுத்துறைச் செயலர்; 1967 ஜூன் 29 முதல் 1970 மார்ச் 2 வரை மத்திய அரசு கப்பல் போக்குவரத்து மற்றும் போக்கு வரத்து அமைச்சகத்தின் கீழ் சென்னைத் துறை முகத்தின் தலைவர்; 1970 மார்ச் 2 முதல் 1972 செப்டம்பர் 2 வரை தமிழ்நாடு அரசு தொழில் துறை சிறப்புச் செயலர்; 1972 நவம்பர் 20 முதல் 1975 மே 18 வரை, சென்னை-5 வருவாய் வாரியத்தின் ஐந்தாவது உறுப்பினர்; 1975 மே 19 முதல் 1975 செப்டம்பர் 3 வரை வருவாய் வாரியத்தின் நான்காவது உறுப்பினர்; 1975 செப்டம்பர் 4 முதல் 1976 ஜனவரி 31 வரை வருவாய் வாரியத்தின் மூன்றாவது உறுப்பினர்; 1976 பிப்ரவரி 1 முதல் 1976 மார்ச் 11 வரை தமிழ்நாடு அரசு இரண்டாவது செயலர்; 1976 மார்ச் 12 முதல் 1977 பிப்ரவரி 15 வரை தமிழ்நாடு அரசு தலைமைச் செயலர் மற்றும் ஆணையர்; 1977 பிப்ரவரி 16 முதல் 1977 ஜூன் 29 வரை தமிழக ஆளுநரின் ஆலோசகர்; 1977 ஜூன் 30 முதல் 1981 ஆகஸ்ட் 21 வரை தமிழ்நாடு அரசு தலைமைச் செயலர்; 1981 ஆகஸ்ட் 21 முதல் 1984 மே 31 வரை தமிழ்நாடு மாநிலத் திட்டக்குழுவின் தலைவர்; 1979-லிருந்து இந்தியப் பொது நிர்வாகக் கல்லூரியின் தமிழ்நாடு மண்டலக் கிளையின் தலைவர்; 1985 ஜனவரி முதல் சென்னை தொழில் நுட்பப் பொருளாதாரக் கல்லூரியின் தலைமை ஆலோசகர்; அண்ணாமலை மற்றும் பாரதிதாசன் பல்கலைக் கழகச் சிண்டிகேட் குழுக்களில் உறுப்பினர்; சென்னை சின்மயா மிஷன் தலைவர்.

**இதரச் சாதனைகள் மற்றும் செயல்கள்:**

இங்கிலாந்து உட்பட ஐரோப்பா, அமெரிக்கா, ஹாங்காங், பாங்காக், ஜப்பான், மலேசியா, சிங்கப்பூர் மற்றும் ஸ்ரீலங்கா போன்ற அயல் நாடுகளில் 7 முறை சுற்றுப்பயணம் செய்துள்ளார்.

மார்ரே டிவிங்களின் ''வைஸ் பிரசிடென்ட் இன்சார்ஜ் ஆஃப் ரெவலூஷன்'' என்னும் நூலை 1965-இல் ''விவசாயப் புரட்சி'' எனும் நூலாகத் தமிழில் மொழி பெயர்த்துள்ளார்.

## தமிழ்நாடு ஆளுநரின் ஆலோசகர் திரு வி. இராமச்சந்திரன், இ.ஆ.ப. (ஓய்வு)

### அவர்கள் வாழ்க்கைக் குறிப்பு



பிறந்த தேதி: 21.3.1931. கல்வித் தகுதி: எம்.ஏ., எம்.எஸ்சி. (சென்னைப் பல்கலைக் கழகம், எம்.ப்பி.ஏ (ஹார்வர்ட் பல்கலைக்கழகம்) **பணி விவரம்:** இந்திய ஆட்சிப் பணியில் சேர்ந்த ஆண்டு 1954. ஓய்வு பெற்ற ஆண்டு 1989.

தற்போதைய பதவிகள் (கௌரவம்): 1) தலைவர், கேரள மாநிலத் தொழில் வளர்ச்சிக் கழகம். 2) தலைவர், நிர்வாக வளர்ச்சி மையம். 3) தலைவர், கேரள கனிமம் மற்றும் உலோக நிறுவனம். 4) தலைவர், கார்பன் மற்றும் இரசாயனப் பொருட்கள் இந்தியா லிமிடெட். 5) கௌரவ உறுப்பினர், வளர்ச்சிக் கல்வி மையம். **சிறப்புப் பயிற்சி:** வளர்ச்சிப் பிரச்சினைகள் மற்றும் நிர்வாகம்.

**வகித்த பதவிகள்:** 1954 மே மாதம் முதல் 1956 ஜுன் வரை இரண்டு ஆண்டுப் பயிற்சி (இ.ஆ.ப); 1956 ஜுலை முதல் 1963 மார்ச் வரை உதவி கோட்ட அலுவலராகவும், சார்புச் செயலர், துணைச் செயலாளராகவும், மாவட்ட ஆட்சித் தலைவராகவும், அரசுத் துறைத் தலைவராகவும் பணி; 1963 மார்ச் முதல் 1969 மார்ச் வரை கூடுதல் செயலர்; பின்னர் திட்டம் மற்றும் நிதித் துறைச் செயலர்; 1966-67-இல் அமெரிக்காவி லுள்ள ஹார்வர்ட் பல்கலைக்கழகத்தில் எம்.ப்பி.ஏ (பொது நிர்வாகம்) படிப்பு; 1969 மார்ச் முதல் 1972 ஆகஸ்ட் வரை கேரள மாநில மின்வாரியத் தலைவர்; 1972 செப்டம்பர் முதல் 1978 செப்டம்பர் வரை இந்தியப் பிரதமரின் இணைச் செயலர்; 1979 அக்டோபர் முதல் 1980 ஆகஸ்ட் வரை நிர்வாக இயக்குநர் மற்றும் தலைவர், கேரள மாநிலத் தொழில் வளர்ச்சிக் கழகம் மற்றும் பொது நிறுவனங்களின் ஆணையர்; 1980 ஆகஸ்ட் முதல் 1984 செப்டம்பர் வரை, ஆணையர், பொருளாதார வளர்ச்சி மற்றும் பொது நிறுவனங்களின் உறுப்பினர்; மாநிலத் திட்ட வாரியம், கேரளம்; 1981 ஜுன் முதல் 1984 செப்டம்பர் வரை ஜெனிவாவிலுள்ள ஐக்கிய நாடுகள் அவையின் வளர்ச்சி உரிமைகள் குறித்த அரசு நிபுணர்கள் அடங்கிய செயற் குழுவில் இந்திய அரசால் நியமனம் செய்யப் பட்டுப் பணி; 1984 செப்டம்பர் முதல் 1987 அக்டோபர் வரை, கேரள மாநிலத் தலைமைச் செயலர்; கூடுதல் பொறுப்புகளாகப் பொருளா தார வளர்ச்சி மற்றும் பொது நிறுவனங்கள் ஆணையர்; மாநிலத் திட்ட வாரிய உறுப்பினர்; பொது நிறுவனங்களின் தேர்வு வாரிய உறுப்பினர்; 1987 அக்டோபர் முதல் 1989 மார்ச் வரை, கேரள அரசின் சிறப்பு ஆலோசகர் மற்றும் பொது நிறுவனங்கள் வாரியத்திற்கும், கேரள மாநிலத் தொழில் வளர்ச்சிக் கழகத்திற்கும் தலைவர்.

**வெளியீடுகள்:** அரசுத் திட்ட அறிக்கைகள் மட்டு மன்றி, இ.ஆ.ப. பயிற்சிக்கும் விவர அறிக்கைகள், கட்டுரைகள் தயாரித்து அளித்துள்ளார்.

**1. கேரள அரசுக்கு அளித்த அறிக்கைகள்:** (அ) ஜனநாயக அடிப்படையில் மாவட்டம் மற்றும் அதற்கும் கீழ் அதிகாரம் பரவலாக்கப்படுவதற் கான வழிமுறைகள் - இரண்டு பாகங்கள் (1988). (ஆ) கேரளாவில் தொழில் முதலீடுகளை அதிகப் படுத்த வழிமுறைகள் (1988),

**2. மத்திய அரசுக்கு அளித்த அறிக்கைகள்:** (அ) இ.ஆ.ப அலுவலர்களுக்குப் பணிக்காலப் பயிற்சிக்கான அறிக்கை (1990) (ஆ) இந்திய எஃகு நிறுவனத்திற்கும் மத்திய அரசுக்கும் இடையி லான தொடர்பு (1990).

## ஓய்வு பெற்ற 28 அலுவலர்களுக்கு ரூ.14 இலட்சம்

**கோ**வை மாவட்டத்தில், மாவட்ட வளர்ச்சி மன்றக்கட்டடத்தில், 1.2.91 அன்று நடைபெற்ற ஓய்வு பெற்றோர் கூட்டத்தில், ஓய்வுபெற்ற 28 அலுவலர்களுக்கு மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. மா.இராமன் இ.ஆ.ப. அவர்கள் ஓய்வூதியப் பலனாக ரூ.14 இலட்சத்துக்கான காசோலை களை வழங்கினார்.



இரண்டாம் அட்டை சொல்லும் செய்தி

# தமிழகத்திற்குப் பெருமை சேர்த்த தேசிய மாணவர் படை

'இளைஞர் இலக்கியம்' பாடிப் பெருமை கொண்டவர் புரட்சிக் கவிஞர் பாரதிதாசன். அன்னாருக்கு நூற்றாண்டு விழாக் கொண்டாடும் காலம் இது.

'இன்று குழந்தைகள் நீங்கள்
இனிஇந்த நாட்டினை ஆளப்
பிறந்தீர்!' ...

—என்று புரட்சிக் கவிஞர் அவர்கள் பாடியதை உணர்ந்து நடந்துகொள்ள வேண்டும் என்பது, இன்றைய இளைஞர்களுக்குக் கற்றறி வாளர்கள் கூறும் சிறந்த ஆலோ சனையாகும்.

இன்றையப் பசுந்தளிர்கள் அதற் கேற்பவே நடந்து கொள்ளுகிறார்கள் என்பதை மெய்ப் பிக்கத் தகுந்த சம்பவமொன்று அண்மையில் நடைபெற்றிருக்கிறது.

தமிழ்நாடு, புதுவை, அந்தமான் நிகோபார் தீவுகளைச் சேர்ந்த தேசிய மாணவர் படையைச் சேர்ந்த மாணவ மாணவியர்- ஜனவரி 26-ஆம் நாள் குடியரசு நாளை யொட்டி, மறுநாள் போட்டிகளில் கலந்துகொண்டு பெரும் வெற்றி பெற்றிருக்கிறார்கள். ஆம்; இந்தக் குழுவைச் சேர்ந்த அந்த இளைஞர்கள், 'பிரதமரின் இயக்கங்களுக்கு இடையேயான சாம்பியன்ஷிப் பேனர் போட்டி'யில் கலந்து கொண்டு மூன்றாவது இடத்தில் தேர்ச்சி பெற்றிருக்கிறார்கள். விரை விலேயே முதலாவது இடத்தைப் பெறமுடியும் என்று உறுதி கூறு கிறார்கள்.

அதிலும் குறிப்பாக- அன்றைய தினம் தமிழகம் தனிப்பெருமை பெற்றிருக்கிறது. எப்படித் தெரியுமா?

சென்னையில் உள்ள ஸ்டெல்லா மேரி கல்லூரி மாணவியான குமாரி அஸ்வினி நாராயணன்- அகில இந்திய தேசிய மாணவர் படை (சீனியர் பிரிவு)யின் சிறந்த மாணவி யாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்; சென்னையில் உள்ள இலயோலா கல்லூரி மாணவரான கெவின் கோமேஸ், தேசிய மாணவர் படை யின் கடற்படைப் பிரிவின் சிறந்த மாணவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

இருவருக்கும் மாண்புமிகு இந்தியப் பிரதமர் திரு. சந்திரசேகர் அவர்கள் தங்கப் பதக்கங்கள் அளித்துப் பாராட்டினார்.

இது மட்டுமல்ல; அப்போட்டி யில் இக்குழுவைச் சேர்ந்த வேறுபல மாணவ மாணவியரும் பல்வேறு வகையில் தங்கள் திறம் காட்டிச் சிறப்படைந்திருக்கிறார்கள். புதுவை யில் உள்ள தாகூர் கலைக்கல்லூரி விமானக் கட்டுப்பாடு தொடர்பான பிரிவின் சிறந்த மாணவராகவும்- ஓ.செல்வம், கே.சங்கர் ஆகியோர் சிறந்த மாதிரிக் கப்பல் அமைப் பாளர்களாகவும் தேர்ந்தெடுக்கப் பட்டிருக்கிறார்.

இந்த வெற்றிப் பெருமிதத்தோடு சென்னை திரும்பிய அந்த மாணவ-மாணவிகளைத் தமிழ்நாடு, புதுவை, அந்தமான் நிக்கோபார் தீவுகளுக் கான தேசிய மாணவர் படையின் துணை இயக்குநர் ஜெனரல் திரு.சுசீந்திரநாத் முதலான உயர் அதிகாரிகள் வாழ்த்தி வரவேற்றார்கள்.



சாதிக் கொடுமைகள் வேண்டாம்-அன்பு
தன்னில் செழித்திடும் வையம்
ஆதர வுற்றிங்கு வாழ்வோம்-தொழில்
ஆயிரம் மாண்புறச் செய்வோம்!

உடன்பிறந் தார்களைப் போலே-இவ்
வுலகில் மனிதரெல் லாரும்;
இடம்பெரி துண்டுவை யத்தில்-இதில்
ஏதுக்குச் சண்டைகள் செய்வீர்!

# தருமபுரி மாவட்டத்தில் தோட்டக்கலை வளர்ச்சி

தமிழ்நாட்டில், தருமபுரி மாவட்டத்தில் தோட்டக்கலைப் பயிர் சாகுபடி செய்யத் தகுந்த சீதோஷ்ண நிலை உள்ளது. இம்மாவட்டம் பின்தங்கிய மாவட்டமாக இருந்தும் மற்ற மாவட்டங்களை விட, அதிகமான தோட்டக்கலைப் பயிர்கள் இங்குச் சாகுபடி செய்யப்பட்டு வருகிறது.

1965-ஆம் ஆண்டுக்கு முன்னர், விவசாயிகள் பெருமளவில் சிறு தானியப் பயிர்களையும், பயறு வகைகளையும் மட்டுமே பயிரிட்டு குறைந்த வருவாய் பெற்று வந்தனர். பின்னர் இப்பகுதியில் மா, திராட்சை போன்ற பழப் பயிர்களும், ஓசூர், தேன்கனிக்கோட்டைப் பகுதிகளில் முட்டைகோசு, உருளைக் கிழங்கு போன்ற குளிர் பிரதேசக் காய்கறிகளும் சாகுபடி செய்ய ஆரம்பித்து நல்ல வருவாய் பெற ஆரம்பித்தனர். இங்குள்ள வளங்களைக் கருத்தில் கொண்டு. அரசு 1979-ஆம் ஆண்டு தோட்டக்கலை இயக்ககத்தின் தலைமையிடத்தைத் தருமபுரியில் அமைத்தது.

### மா உற்பத்தி

இம்மாவட்டத்தில் மா சாகுபடி செய்வதற்குத் தகுந்த சீதோஷ்ணம் மற்றும் மண்வளம் இருப்பதனைக் கண்டறிந்த, பழ அபிவிருத்தித் திட்டம், ஒருங்கிணைந்த தோட்டக்கலை அபிவிருத்தித் திட்டம், மா பெருக்குத் திட்டம், வறட்சிக்கு இலக்காகும் பகுதித் திட்டம், மானாவாரியில் வேளாண்மை மேம்பாட்டுத் திட்டம் போன்ற திட்டங்களைச் செயல்படுத்தி, 1965-ஆம் ஆண்டில் 6250 எக்டேராக இருந்த பரப்பு, தற்சமயம் 17.339 எக்டேராக அதிகரிக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் கடந்த 25 ஆண்டுகளுக்கு முன்னர் மாம்பழம் உற்பத்தி 14,000 மெ.டன்னாக இருந்தது. தற்சமயம் 52,000 மெ.டன்னாக உயர்ந்துள்ளது.

### சேலத்து மாம்பழம்

தமிழ்நாட்டில் மா உற்பத்தியில் தருமபுரி மாவட்டம்தான் முதலிடத்தை வகிக்கிறது. 1965-ஆம் ஆண்டுக்கு முன் தருமபுரி மாவட்டம் சேலம் மாவட்டத்துடன் ஒன்றாக இருக்கும்பொழுது இம்மாவட்டத்தில் விளையும் மாம்பழத்தை, சேலத்து மாம்பழம் என்றுதான் அழைத்து வந்தனர். ஆனால், சேலத்தில் உற்பத்தி செய்யும் மாவின் அளவு மிகவும் குறைவே, மிகுதியான மா உற்பத்தி தருமபுரி மாவட்டத்தில்தான் உள்ளது. எனவே, சேலத்து மாம்பழம் என்றழைப்பதைத் தவிர்த்து, தருமபுரி மாம்பழம் (தகடூர் மாம்பழம்) என்று கூறுவதே பொருத்தமாகும்.

### புளி சாகுபடி:

மா சாகுபடிக்கு அடுத்தப்படியாக அதிக அளவில் சாகுபடி செய்வது புளியாகும். புளி சாகுபடியை ஊக்குவிக்கும் பொருட்டு தற்பொழுது உயர்ரக விளைச்சல் தரும் 'உரிகம் புளியன் செடிகள்' விவசாயத்திற்கு மானிய விலையில் வினியோகம் செய்யப்பட்டு வருகிறது. 1965-ஆம் ஆண்டு 700 எக்டர் பரப்பாக இருந்தது. தற்போது 1,555 எக்டருக்கு அதிகரிக்கப்பட்டுள்ளது.

### இதரப் பழச் சாகுபடி

இம்மாவட்டத்தில் மா மற்றும் புளி சாகுபடியைத் தவிர திராட்சை, கொய்யா, சப்போட்டா, சீதா போன்ற பழவகைகள் சாகுபடி செய்யப்பட்டு வருகிறது. சாகுபடியை ஊக்குவிக்கும் பொருட்டு, விவசாயிகளுக்குப் பழச்செடிகள் மானிய விலையில் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.

### காய்கறிச் சாகுபடி

இம்மாவட்டம், காய்கறி பயிரிடுவதற்கு ஏற்றதாகும், காய்கறிச் சாகுபடியில் அதிக இலாபம் பெற வாய்ப்பு உள்ளதால் காய்கறிச் சாகுபடியில் பரப்பினைப் பல திட்டங்களின் பயனாகக் கணிசமாக அதிகரிக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் 1965-ஆம் ஆண்டு 2,000 எக்டேராக இருந்த காய்கறிச் சாகுபடி தற்சமயம் 5,979 எக்டராக அதிகரிக்கப்பட்டுள்ளது. காய்கறி உற்பத்தி 7,000 டன்னிலிருந்து 80,789 டன்னாக உயர்த்தப்பட்டுள்ளது. இம்மாவட்டத்தில் தக்காளி, கத்தரி, முட்டைக்கோஸ் போன்ற பயிர்களின் வீரிய ஒட்டு இரகங்கள் அறிமுகப்படுத்தப்பட்டதால், ஒரு எக்டரின் உற்பத்தித்திறன் சுமார் 15 டன்னிலிருந்து 40 டன்னாக உயர்ந்துள்ளது.

இத்துறையின் மூலம் பழங்கள், காய்கறிகள், மலர்கள் போன்றவற்றில் பரப்பு மற்றும் உற்பத்தியைப் பெருக்கத் தேவையான மானிய விலையில் தரமான வீரிய ஒட்டு மா, சப்போட்டா, கொய்யா பதியன்கள் மற்றும் காய்கறி விதைகள் வினியோகம் செய்யப்பட்டு, புதிய உத்திகளும் விவசாயிகளுக்கு எடுத்துக் கூறப்படுகிறது.

### பழப்பதனிடும் தொழிற்சாலை

பல தோட்டக்கலைத் திட்டங்களைச் செயல்படுத்தியதன் விளைவாக, பழங்கள் மற்றும் காய்கறிகளின் உற்பத்தி 1965-இல் 49,315 மெ.டன்னாக இருந்தது, தற்சமயம் 2,18,228 மெ.டன்னாக உயர்ந்துள்ளது.



தருமபுரி மாவட்டத்தின் வளங்களைக் கருத்தில் கொண்டு அமைக்கப்பட்ட தோட்டக்கலை இயக்கத்தின் இயக்குநர் திரு என.சதாசிவம் அவர்களின் தலைமையில், மேற்கண்ட திட்டங்கள் செம்மையாகச் செயல்பட்டு வருகிறது.



தமிழ் வளர்த்த பெரியார்:

# கவி வேந்தர் செகவீரபாண்டியனார்

மா.லோ. தாமோதரம்



அப்பொழுது அந்தச் சிறுவனுக்கு வயது பன்னிரண்டு. ஐந்தாம் வகுப்போடு பள்ளிப் படிப்பு முடிந்தது. அதற்குள் ஆத்திசூடி, கொன்றை வேந்தன், மூதுரை, திவாகரம் முதலானவற்றில் நல்ல தேர்ச்சி பெற்றிருந்த அவன், தன் மூன்றாம் வயதிலேயே அருமைத் தந்தையை இழந்தவன்.

''தந்தையோடு கல்விபோம்'' என்பது முதுமொழி அல்லவா? பள்ளிப் படிப்புக்குப் புள்ளி வைத்து 'கம்பும் சிலம்பும், மல்லும் வில்லும்' என வீர விளையாட்டுகளில் பொழுதெல்லாம் கழிந்தன. அது தந்தை வழி வந்த சொத்து. உரம் மிக்க உடல் வலிமை பெற்றான்.

ஆர்வ மிகுதியால், 'எதைப் படிப்பது, எப்படிப் படிப்பது' என்று ஏங்கி வந்த அந்தச் சிறுவனுக்கு முதன் முதலில் ''தாயுமான சுவாமிகள் பாடல்கள்'' என்னும் நூலும், 'அரிமளம்' துறவியாரும், இலக்கண முத்துக் கவிராயரும் வழிகாட்டினர். கருவி நூல்களோடு அறிவு நூல்களையும் கற்றுத் தேர்ந்து ஞான பானுவாக உயர்ந்தான்.

### யார் அந்தச் சிறுவன்?

பிற்காலத்தில், தமிழ் வளர்ச்சிக் கழகம், மதுரைத் தமிழ்ச் சங்கம், கரந்தைத் தமிழ்ச் சங்கம், கம்பர் செந்தமிழ்ச் சங்கம் போன்ற அமைப்புகளும், 'செந்தமிழ்ச் செல்வி', 'கலைமகள்', 'கல்கி' போன்ற ஏடுகளும், 'இந்து', 'தினமணி', 'தமிழ்நாடு' போன்ற நாள் இதழ்களும், புலவர் பெருமக்களும்

'உயர் தமிழ்ப் புலமையோடு
உணர்ச்சி ததும்பச்
சொன்மழை பொழியும்
தூய மாமுகில்
தேசு மிகுந்தொளிர் செக
வீர பாண்டியர்'

என்று போற்றிப் பாராட்டியவரே தான், அந்தச் சிறுவன்!

முதல் சுதந்திர முழக்கம் செய்த வீரபாண்டிய கட்டபொம்மன் மரபில் உதித்த கவி வேந்தர் செக வீர பாண்டியனார், 'சின்னப் பாஞ்சாலங் குறிச்சி' என்று கூறும் ஒட்டநத்தம் என்ற சிற்றூரில் 10.3.1886-இல் பெருமாள்சாமி- ஆவுடையம்மை எனும் பெற்றோருக்கு ஒரே மகனாகப் பிறந்தவர்.

பத்தொன்பதாம் வயதிலேயே தம் ஊரில் 'ஆசிரியர்' என்று பலரும் போற்றும் நிலையினை அடைந்தார். இவர்பால் பலரும் பாடங் கேட்கலாயினர். ஆண்டுக் கணக்கில் கம்பராமாயணம், பெரிய புராணம் போன்ற புராணச் சொற்பொழிவுகளைக் கேட்டார் பிணிக்கும் தகையவாய்க் கேளாரும் விரும்புந் தன்மையனவாய், இன்னிசையுடன் ஆற்றுவார். இதனால் இவர் புகழ் எங்கும் பரவியது. பல திசைகளிலிருந்து பாராட்டுரைகளும் வாழ்த்துரைகளும் நாடி வந்த வண்ணமிருந்தன.

அரிய பெரிய விரிவுரைகளை காற்றோடு காற்றாய்க் கலந்து வறிதே போகும் நிலைகண்டு உளங்கவன்றார். என்றும் நிலைத்து நிற்குமாறு நூல் வடிவில் தருதலே தக்கதென கருதினார்.

அவ்வமயம், தாயாரை இழந்திருந்த அவர் தம் அன்பு வாழ்க்கைத் துணைவியார் வெள்ளைத்தாயுடன் தூத்துக் குடிக்குச் சென்றார். அங்கே தம் இல்லத்தில் அச்சுக் கோத்து மெல்ல மெல்ல நூல் ஆக்கி வெளியிடலானார். புத்தகம் வெளியிடுவதையும் விற்பதையும் மிகப் பரபரப்பானதொரு இயந்திர இயக்கம் ஆக்கி விடாமல், காந்திய நெறியில் நின்று குடிசைத் தொழில் போல் நடத்தி வந்தார்.

பாண்டியனார் பதிப்பித்த நூல்களுள் அளவால் மிகப் பெரிய நூல் 'திருக்குறட் குமரேச வெண்பா' வாகும். இந்நூல் 5,990 பக்கங்கள் கொண்டது. பதினான்கு ஆண்டுகள் இடைவிடாது செய்த முயற்சியால் முடிக்கப்பெற்றது.

ஒவ்வொரு திருக்குறளின் கருத்துக்களுக்குப் பொருத்தமான கதைகளை இராமாயணம், பாரதம் முதலிய பெரு நூல்களிலிருந்தும், பாகவதம் முதலிய புராணங்களிலிருந்தும், சிலப்பதிகாரம், சிந்தாமணி முதலிய காப்பியங்களிலிருந்தும், பத்துப்பாட்டு, எட்டுத்தொகை முதலிய சங்க நூல்களிலிருந்தும், இன்னோரன்ன பிறவற்றிலிருந்தும்

தெரிந்தெடுத்துத் தம் வழிபடு கடவுளாகிய குமரேசனது திரு முன்னர் விண்ணப்பித்து, அவற்றிற்கு விடைகூறு முறைமையில் திருக்குறட்பாக்களை அமைத்துப் பாடியுள்ளார் பாண்டியனார்! கதைகளைக் குறட்பாவில் அமைத்துத் திருக்குறள்களோடு இணைத்துத் தனிச் சீரும் சேர்ந்திருத்தலினால் இந்நூல் முழுவதும் நேரிசை வெண்பாவால் நிறைந்துள்ளது. கடவுள் வணக்கமும் அவையடக்கமும் உட்பட இந்நூலில், 1,332 வெண்பாக்கள் அடங்கியுள்ளன. திருக்குறளைத் தழுவிக் குமரேசனை முன்னிலையாகக் கொண்டு வெண்பாவால் இயற்றப் பெற்றதாதலின் இந்நூல் 'திருக்குறட் குமரேச வெண்பா' எனும் திருப் பெயரைப் பெறுவதாயிற்று.

இந்நூலில் அருணாசல புராணம் முதல் வச்சத் தொள்ளாயிரம் முடிய சுமார் 173 நூல்களிலிருந்து மேற்கோள்களை எடுத்தாண்டுள்ளார். பா ஒன்றுக்குக் கதை ஒன்று வீதம் 1,330 குறட்பாக்களுக்கு 1,330 அருங்கதைகளை அமைத்துப் பாடியுள்ளார். சில பாக்களுக்கு ஒன்றிற்கு மேற்பட்ட கதைகளும் இடம் பெற்றுள்ளன. ஒவ்வொரு குறள் விளக்க முடிவிலும் அதன் முடிப்புரையாகக் குறள் வெண்பா ஒன்றையும் பாடியுள்ளார். ஆனால் இடையிடையே சிலவற்றிற்கு இம் முடிப்புரைக் குறள் வெண்பாக்கள் காணப் படவில்லை.

ஒவ்வொரு தலைப்பு முடிந்ததும் அதன் தொகைப் பொருளாகக் கருத்துக்களைத் தொகுத்துத் தருகின்றார்; அவ்வாறே ஒவ்வொரு பாலின் இறுதியிலும் 'திரட்டுப் பால்' தருகின்றார்! இவையெல்லாம், படிக்கும் கருத்தை நினைவிலிருத்தற்கென அமைந்த பொருத்தமான புது முறைகள் எனலாம்.

கவி வேந்தர் செகவீர பாண்டியனார் தூத்துக்குடியினின்றும் மதுரை அடைந்தார். அங்கு மேல மாசி வீதியின்கண் 'திருவள்ளுவர் நிலையம்' ஒன்றை அமைத்தார்; 'வாசுகி' அச்சகத்தை உருவாக்கினார். தாம் எழுதும் நூல்கள் அனைத்தையும் அச்சுக் கோத்து, பிரசுரித்து வெளியிடலானார். இவ்வாறு அவர் எழுதி வெளியிட்ட நூல்தான் 'திருக்குறட் குமரேச வெண்பா -



## நேதாஜி—ஒரு பார்வை



**வங்கச் சிங்கம் என்று புகழப்பட்ட நேதாஜி சுபாஸ் சந்திர போஸ் இந்திய சுதந்திரத்தின் ஓர் விடிவெள்ளி. இந்தியத் துணைக் கண்டத்தில் மட்டுமல்ல அவரது சங்கநாதம் உலகெங்கும் ஒலித்தது. அவர் தம் வாழ்வில் செய்துள்ள சாதனைகள் எத்துணையோ!**

**★ ஒருமுறை வங்காளத்தில் பஞ்சம் ஏற்பட்டு ஆயிரக்கணக்கானோர் மடிந்தனர். அவ்வமயம் நேதாஜி ஒரு லட்சம் டன் அரிசியை சியாம் மற்றும் பர்மாவிலிருந்து வாங்கி கல்கத்தாவிற்கு அனுப்ப முயற்சி மேற்கொண்டார். இது குறித்து பிரிட்டிஷ் அரசுக்குக் கடிதம் எழுதி அரிசியைப்பெற்றுக் கொள்ளுமாறும் அவ்வாறு அரிசி எடுத்துச் செல்லும் படகுகளைத் திருப்பி அனுப்புமாறும் கேட்டுக்கொண்டார். இதனை பிரிட்டிஷ் அரசு ஏற்கவில்லை. கேளாக் காதினராய் இருந்து விட்டனர். இதனால் அரிசி அனுப்புவது மட்டுமல்ல, கொடிய பஞ்சத்திலிருந்து வங்க மக்களைக் காக்கவும் முடியாமல் போய்விட்டது.**

**★ ஹபீப் என்ற ஒரு பணக்கார வியாபாரி தனது சொத்து முழுவதையும் சுமார் ஒரு கோடி ரூபாய்க்கு ஈடானவற்றைநேதாஜிக்குப் போடப்பட்ட ஒரு மாலைக்கு ஈடாக வழங்கினார். இத்தொகை இந்திய தேசீய இராணுவத்துக்கே சேர்ந்தது.**

**★ நேதாஜி அவர்கள் தமக்கு அளிக்கப் படும் உணவைப் போலவே தமது சிப்பாய்களுக்கும் அளிக்கப்படவேண்டும் என்று கட்டளையிட்டிருந்தார். எவ்வகையிலும் தாம் மற்ற சிப்பாயைவிட மேலானவர்என்பதைக் காட்டிக் கொள்ளவில்லை.**

**★ ஜப்பான் இராணுவத்தினர் தாங்களே மூத்த இராணுவத்தினர் என்று கருதி தங்களை ஐ.என்.ஏ. இராணுவத்தில் அதே நிலையில் உள்ள அதிகாரிகள் கண்டால் முதலில் வணக்கம் சொல்லவேண்டும் என்று இராணுவ நிபந்தனை இட்டிருந்தார்கள். இதைக் கேட்ட நேதாஜி வெகுண்டார். நேரில் ஜப்பான் அரசிடம் பேசி இரு அதிகாரிகளும் தாங்கள் சந்திக்கும்போது ஒரே நேரத்தில் வணக்கம் சொல்லிக்கொள்ள வேண்டும் என்று தீர்மானித்து இந்திய தேசீய இராணுவத்தினரின் கவுரவத்தை நிலை நாட்டினார்.**

**★ ஆஸாத் ஹிந்த் என்ற தற்காலிக அரசை நிறுவினார் நேதாஜி.**

ம.செ. பாண்டியன்,
கண்காணிப்பாளர்,
தமிழ்நாடு ஆவணக் காப்பகம்.

மூலமும் உரையும்', மேலும் அகத்திய முனிவர், தருமதீபிகை, வீர பாண்டியம் (இந்நூலைப் படித்துவிட்டுத் தான், சிலம்புச் செல்வர் ம.பொ.சி. அவர்கள் வீரபாண்டிய கட்டபொம்மன் வாழ்க்கை வரலாற்றில் ஈடுபாடு கொண்டு நூல் எழுதி வெளியிட்டார்.) பாஞ்சாலங்குறிச்சி வீர சரித்திரம் (2 பகுதிகள்), கல்வி நிலை, இந்தியத் தாய், கவிகளின் காட்சி, உலக உள்ளங்கள் முதலியனவாகும். நியுமென் என்ற ஆங்கில அறிஞர் பாண்டியனார் எழுதிய 'தரும தீபிகை' என்னும் அறநூலில் இருந்து நூற்றெட்டு வெண்பாக்களைத் தேர்ந்தெடுத்து அவற்றை ஆங்கிலத்தில் செய்யுள் வடிவில் மொழி பெயர்த்துள்ளார்.

அம்மொழி பெயர்ப்பைப் படித்த ரால்வ் சினி என்னும் அமெரிக்கக் கவிஞர், "மூலமொழியை நேரே படிக்க முடியாத நாங்கள் இந்த மொழி பெயர்ப்பு நூல் வழியாகத் தமிழ் நாட்டில் உள்ள ஒரு மகானுடைய ஞான மணிகளைக் கண்டு மகிழ்ந்தோம்." என்று போற்றினார்.

'தரமான் புலமையெனில்
வெளி நாட்டார் அதை வணக்கம்
செய்தல் 'வேண்டும்!'

என்று சொல்லிய பாரதியின் வாக்கிற்கு உதாரணமாக விளங்கியவர் பாண்டியனார் என்பதை ஈண்டு நினைவு கொளல் வேண்டும்.

**க**ல்வி நலம் சிறந்து, நல்லியல்பு மிகுந்து கொடை, வீரம், நீதி முதலான பண்பு நலங்களில் உயர்ந்து உலகிற்கே அன்பு, அறிவு, உழவு, நெசவு, நாகரிகம் வழங்கியதில் நம் தமிழ்நாடே உயர்ந்தது என்பதில் எவருக்கும் ஐயம் எழ இடமில்லை, அல்லவா? இந்நாடு ஒரு காலம் மிகவும் பீடு பெற்றிருந்தமைக்கு முக்கியக் காரணம் திருவள்ளுவரும் கம்பருமே என்பது பாண்டியனாரின் அழுத்தமான கருத்தாகும்..

'சொன்னலங் கனிந்து பொருள் நலம் பொலிந்து' திகழும், கம்பராமாயணத்தைப் பற்றி ஒரு நூல் இயற்ற முடிவு கொண்டார் கவி வேந்தர்.

ஐயாயிரத்து எண்ணூற்றெண்பது பக்கங்களுக்கு மேல் விரிந்து பரந்த புலவர் உலகம்- கம்பன் கலை நிலை என்னும் நூலை 1940-ஆம் ஆண்டு வெளியிட்டார்.

**பா**ண்டியனார் தெலுங்கு மொழியைத் தாய்மொழியாகக் கொண்டவர். பள்ளியில் சேர்ந்து தெலுங்கு மொழியைப் பாடமாகப் படித்தவர் அல்லர் எனினும், கால வளர்ச்சியில் வடமொழி, ஆங்கிலம் இவற்றைக் கற்றது போலவே தெலுங்கு மொழியையும் விரும்பிக் கற்றார்.

தெலுங்கு மொழியில் இருந்த தியாகராசர், கிருஷ்ண தேவராயர், வேமனர் போன்றவர்களின் இலக்கிய நூல்களையும் தெலுங்கு பழமொழிகளையும் ஈடுபாடு கொண்டு படித்துள்ளார்.

ஏ,பி,சி,டி இருபத்தாறு எழுத்துக்கள் அறிந்தாலே "ஆங்கிலம்" கற்று முடித்து விடுவதாக எண்ணிவிடும் இளைய சமுதாயத்தினர், ஒரு மொழியை அறிதல் என்பது அம்மொழியின் மூல முதற் தரமான இலக்கிய நூல்களோடு மக்களின் வாய்மொழி இலக்கியங்களிலும் பயிற்சி கொள்ள வேண்டும் என்பதை அறிவார்களாக!

தன்னுடைய ஐம்பதாவது வயதில் மனைவியை இழந்தார். எவ்வழியும் ஆதாரமாய் இருந்து வந்த மனைவி மறைந்தார். ஆயினும் அவ்வம்மையாருடன் நிகழ்த்தி வந்த இருபத்தி நான்கு ஆண்டுகளின் இல்லற வாழ்க்கை நினைவுகளை அவர் மறையும் வரையில் நினைவு கொண்டு நெஞ்சில் உயர்ந்து வாழ்ந்தார். மறுமணம் செய்து கொள்ள மறுத்து விட்டார்.

நூல் வெளியீட்டால் இருந்த பொருள் எல்லாம் இழந்து நின்றார், புலமையாளர்க்குத் தலைமையான உரிமையாய் இருந்து வந்த வறுமை பாண்டியனாரையும் பற்றியது. எவரிடத்தும் சென்று ஏதும் இரந்தறியாதவர். ஆதலால் உண்ணவும் வழியின்றி வருந்தி வீட்டினுள்ளே சோர்ந்திருந்தார். அப்போது, முன்பு அவர் கண்டறியாத ஒருவர் வீட்டிற்கு வந்து வலியப்பேசி உதவி செய்து சென்றார். இது பாண்டியனாருக்கு ஒரு வியப்பாய்ப் பட்டது. அவர் பெயர் சிவசுப்பிரமணிய பிள்ளை என்று அறிந்தபோது நெஞ்சம் கரைந்து நெகிழ்ந்தார்.

பல்வகை நயங்களும் அரும் பெறல் பொருள் மணிகளும் இயற்றி தமிழ்த்தாய்க்கு அணிசெய்த மாமணி கவிவேந்தர் செகவீர பாண்டியனார் 1967-ல் தம் எண்பத்தியோராவது வயதில் இயற்கை எய்தினார்.

தமிழரின் தலைமாமணியாய்த் திகழ்ந்த இப்புலவர் பெருமானின் நூற்றாண்டு விழா 1986-ல் ஆரவாரமின்றிக்கழிந்தது.

தமிழ்த் தாயின் தண்ணருளால் கவி வேந்தர் செகவீர பாண்டியனார் தம் வாழ்நாளில் சுமார் 19,000 பக்கங்கள் கொண்ட நூல்களை வெளியிட்டிருந்த போதிலும் அப் புலவர் பெருமானைத் தமிழர்கள் போற்றத் தவறி விட்டனர் என்றே கூறலாம்!

அன்னாரின் நூல்களைப் படித்து அவருக்கும், தமக்கும், மொழிக்கும், நாட்டிற்கும் பெருமை சேர்க்க வேண்டியது இளைய சமுதாயத்தின் இன்றியமையாக் கடமையாகும்.



**விளையாட்டுப் பொம்மைகள் ஆவதற்காகப் பெற்றோர் உங்களைப் பள்ளிக் கூடங்களுக்கு அனுப்பவில்லை; அதற்கு மாறாக கருணை மிகுந்த - சகோதரிகளாக நீங்கள் ஆகவேண்டும் என்று எதிர்பார்த்தே, அவர்கள் இங்கு உங்களைக் கல்வி கற்க அனுப்பி வைத்திருக்கிறார்கள். ஒருவித உடை அணிந்து கொள்ளுபவர்களே கருணை உடைய சகோதரிகள் ஆவர் என்று தவறுதலாக எண்ணி விடாதீர்கள். தன்னைப் பற்றிய சிந்தனை அதிகமின்றி, தன்னைவிட ஏழ்மை நிலையிலும் துரதிர்ஷ்டம் பிடித்த நிலையிலும் இருப்பவர்களைப்பற்றி எவள் அதிகமாக நினைக்கிறாளோ, அவளே கருணையுடைய சகோதரி ஆவாள்.**

# எண்ணெய் வித்துச் சாகுபடியில் சாதனை

**லால் ரானா சைலோ, இ.ஆ.ப.,**
**இயக்குநர்- எண்ணெய் வித்துக்கள் துறை**

நிலக்கடலை, எள், சூரியகாந்தி, ஆமணக்கு ஆகிய எண்ணெய் வித்துக்கள் சுமார் 12 இலட்சம் எக்டேர் பரப்பில் ஆண்டுதோறும் பயிரிடப் படுகின்றன. இவற்றில் நிலக்கடலை மட்டுமே நமது மாநிலத்தில் 80 சதவிகிதத்திற்குக் கூடுதலான பரப்பில் சாகுபடியாகும் முக்கிய எண்ணெய் வித்துப் பயிராக விளங்குகிறது.

தமிழகத்தில் எண்ணெய் வித்துக்கள் பெரு வாரியான அளவில் மானாவாரியாகப் பருவ மழையை நம்பிச் சாகுபடி செய்யப்படுகின்றன. எனவே, நவீன சாகுபடி உத்திகளை விவசாயி களிடையே பிரபலப்படுத்தி நன்முறைப்படுத்துவதன் மூலம், உற்பத்தித் திறனை உயர்த்தி, விவசாயிகள் அதிக மகசூலைப் பெற்றிட எண்ணெய்வித்துக்கள் துறை, திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது.

தரமான விதைகளை விவசாயிகளுக்கு விநியோகித்து, விதைப்பண்ணைகள் அமைத்து இவ்வாறு அமைக்கப்படும் விதைப்பண்ணை களிலிருந்து தரம் வாய்ந்த விதைகளைக் கொள் முதல் செய்து, மீண்டும் அடுத்த பருவத்தில் விவசாயிகளுக்கு விநியோகித்தும் உற்பத்தித் திறனை உயர்த்திட, இத்துறை செயலாற்றி வருகிறது. விவசாயிகளிடையே எண்ணெய் வித்துக்கள் உற்பத்தியில் ஆர்வத்தினைத் தூண்டுவதன்மூலம், மாநிலத்தின் எண்ணெய்வித்துக்கள் உற்பத்தியை அதிகரித்திடச் செயலாற்றும் பல திட்டங்களில், மைய அரசின் நிதியுதவியுடன் இரண்டு பெரும் திட்டங்கள் இத்துறையினால் செயல்படுத்தப் படுகின்றன.

தேசிய எண்ணெய்வித்துக்கள் அபிவிருத்தித் திட்டத்தின் கீழ், 1990-91-ஆம் ஆண்டிற்கான நிதி ஒதுக்கீடு ரூ.308.65 இலட்சம் மைய அரசும், மாநில அரசும் 50:50 என்ற விகிதத்தில் செலவினைப் பங்கேற்கும் இத்திட்டத்தின் கீழ், குறிப்பிட்டுள்ள திட்டப்பணிகள் செயல்படுத்தப் படுகின்றன.

**விதை:**


ஒவ்வொரு பருவத்திலும் (காரீப் மற்றும் ராபி) தேர்வு செய்யப்பட்ட கிராமத்தில், விதைப் பண்ணை விவசாயிகளைத் தேர்வு செய்து, தரமான விதைகளை அவர்களுக்கு விநியோகித்து, விதைப்பண்ணைகள் அவர்களின் வயலில் அமைக்கப்படுகின்றன. தரமான விதைகள், இந்த விதைக் கிராம விதைப் பண்ணைகளிலிருந்து கொள்முதல் செய்யப்படுகின்றன. விதை உற்பத்தி செய்யும் விவசாயிக்கு (அங்காடி நிலவரப் படியான விலை மற்றும் விதைப்பண்ணை பிரிமியம் தவிர) தரமான விதை உற்பத்திக்காக குவிண்டாலுக்கு ரூ.50 முதல் 100 வரை இத் திட்டத்தின்கீழ் மானியம் வழங்கப்படுகிறது. இச்சலுகை நிலக்கடலை, எள், சூரியகாந்தி சான்று மற்றும் உண்மைச் சான்று விதை உற்பத்தி செய்யும் விவசாயிகளுக்கு வழங்கப்படுகின்றன.

ரைசோபியம் நுண்ணுயிர் பரிந்துரைகளின்படி உபயோகிப்பதன் மூலம், நிலக்கடலைப் பயிரில் வேர் முடிச்சுகள் அதிகரித்து- கூடுதல் மகசூல் கிடைக்கிறது. எனவே, விவசாயிகளுக்கு எக்டேருக்கு ரூ.15 மானியத்துடன் ரைசோபியம் நுண்ணுயிர்ப் பொட்டலங்களை இத்துறை, வேளாண்மை விரிவாக்க மையங்களில் இருப்பு வைத்து விநியோகம் செய்கிறது. இவ்வாறே எள் சாகுபடிக்கு அசோஸ் பைரில்லம் உபயோகித்து கூடுதல் மகசூல் பெற எக்டேருக்கு ரூ.15 மானியத்துடன் அசோஸ் பைரில்லம் நுண்ணுயிர்ப் பொட்டலங்களையும் இத்துறை விநியோகம் செய்கிறது.

நிலக்கடலைக்குப் பரிந்துரைகளின்படி நுண்ணூட்டச்சத்து பயன்படுத்தி உற்பத்தித் திறனைப் பெருக்கிட, எக்டேருக்கு ரூ.40 மானியத்தில் நுண்ணூட்டச்சத்து விவசாயிகளுக்கு விநியோகம் செய்யப்படுகிறது.

நிலக்கடலை மற்றும் எள் பயிரின் உற்பத்தித் திறனை அதிகரிக்க ஒட்டுமொத்தமாக எல்லா நவீன சாகுபடி முறைகளையும் கையாண்டு பெருமளவில் செயல்விளக்கங்கள் செய்து காட்டப்படுகின்றன. இத்திட்டத்தின்கீழ், விவசாயி களுக்கு மேற்படி பரிந்துரைகளின்படி இடு பொருள் உபயோகத்திற்காகக் கீழ்க்குறிக்கப் பட்டுள்ளவாறு சலுகை வழங்கப்படுகிறது.

| | |
|---|---|
| நிலக்கடலை 50 எக்டேர் பெருவிளக்கப் பண்ணை: | காரீப் பருவம் எக்டேருக்கு ரூ.1,000 வரை மானியம். ராபி பருவம் எக்டேருக்கு ரூ.1,200 வரை மானியம். |
| எள் 20 எக்டேர் பெருவிளக்கப் பண்ணை: | காரீப் மற்றும் ராபி பருவங் களுக்கு எக்டேருக்கு ரூ.300 மானியம். |







## உயர்ந்த செயல்!

உயர்ந்த வகுப்பார், தாழ்ந்த வகுப்பார், தீண்டத் தகுந்தவர், தீண்டத்தகாதவர் என்ற பாகுபாட்டை நீங்கள் காட்டாமல் இருப்பது மிகவும் உயர்ந்த செயல்.உங்கள் இதயமானது இதே துறையில் செல்வத்தோடுகூட, மற்ற பெண்களைவிட உயர்ந்த வர்கள் என்ற மனப்பாங்கையும் நீங்கள் அகற்றி விடுவீர்களாயின், உண்மையிலே அதுவும் மிக உயர்ந்ததே.

-அண்ணல் காந்தியடிகள்

**இடுபொருள் விநியோகத் திட்டம்:**

நிலக்கடலை, எள், சூரியகாந்தி, ஆமணக்கு, கடுகு, சோயா மொச்சை போன்ற பயிர்களில் தரமான புதிய இரக விதைகளின் உபயோகத்தை விவசாயிகளிடையே அறிமுகப்படுத்தும் வகையில் 0.1 எக்டேர் முதல் 0.2 எக்டேர் வரையில் சாகுபடிக்குத் தேவைப்படும் விதை, விதை நேர்த்தி மருந்து, சாகுபடிக் குறிப்புகள் ஆகியவை விவசாயி களுக்கு இடுபொருள் தளைகளாக விநியோகம் செய்யப்படுகின்றன. இதற்கான மொத்த விலை யில் 10 சதம் மட்டுமே, பயன்பெறும் விவசாயி களிடமிருந்து வசூல் செய்யப்படுகின்றது.

பிற்படுத்தப்பட்ட வகுப்பு-மலை சாதி விவசாயி களுக்கு ரூ.500- க்குக் குறைவான விலையுள்ள பண்ணைக் கருவிகள் 10 சத விலையில் இத் திட்டத்தின்கீழ் விநியோகிக்கப்படுகின்றன.

தண்ணீரைச் சிக்கனமாகச் செலவு செய்து அதிகப் பலனடைந்திடும் வகையில், தெளிப்பு நீர்ப்பாசனக் கருவிகள் உபயோகத்திற்கு விவ சாயிக்கு மானியம் வழங்கப்படுகிறது. இத்திட்டத் தின்கீழ் சிறு-குறு விவசாயிகளுக்கு 50 சத மானியமும், பிற விவசாயிகளுக்கு 25 சத மானியமும், ரூ.5000 உச்ச வரம்பு என்ற அளவில் வழங்கப்படுகின்றன.

மண் பரிசோதனை செய்து பரிந்துரைகளின் படி உரமிட, விவசாயிகளுக்கு மண் பரிசோதனை மாதிரி ஒன்றின் பரிசோதனைக்கான இரண்டு ரூபாய்க் கட்டணத்தில் ஒரு ரூபாய் சலுகை வழங்கப்படுகிறது.

ரூ.289.400 இலட்சம் செலவில் மைய அரசின் முழு நிதியுதவியுடன் இவ்வாண்டில் செயல் படுத்தும் இத்திட்டத்தில் விவசாயிகளுக்கு வழங்கப் படும் சலுகைகளாவன:

ஆதார விதை உற்பத்தியாளர்கள் அரசுக்கு உற்பத்தி செய்து தரும் விதைகளுக்கு குவிண்டா லுக்கு ரூ.300 என்ற அளவில் மானியம் வழங்கப் படுகிறது.

**பெருவிளக்கப்பண்ணை அமைத்தல்:**

நிலக்கடலை 50 எக்டேர் பண்ணை: காரீப் பருவம் எக்டேருக்கு ரூ.1000 வரை மானியம். ராபி பருவம் எக்டேருக்கு ரூ.1,200 வரை மானியம். சூரியகாந்தி 20 எக்டேர் பண்ணை: காரீப் மற்றும் ராபி பருவங்களுக்கு ரூ.400 வரை மானியம்.

பெருவிளக்கப்பண்ணையில் பரிந்துரைகளின் படி இடுபொருள் உபயோகத்திற்காகப் பங்கு பெறும் விவசாயிகளுக்கு மேற்குறிப்பிட்டுள்ள வாறு மானியம் வழங்கப்படுகிறது. இத்திட்டத்தில் பயிர்ச் சாகுபடிக்கான பரிந்துரைகள் அனைத்தை யும் கையாண்டு உற்பத்தித் திறனை அதிகரிக்கும் வழிகள், பெருமளவு பரப்பில் பாத்திகள் அமைத்து, விவசாயிகளுக்கு விளக்கப்படுகின்றன.

நிலக்கடலை மற்றும் சூரியகாந்தி பயிரில் தோன்றும் நோய் மற்றும் பூச்சி தாக்குதலைக் கட்டுப்படுத்த, ஒருங்கிணைந்த பயிர்ப் பாதுகாப்பு மேற்கொள்ள 50 சத மருந்து மற்றும் மானியமாக எக்டேருக்கு ரூ.100 வரை விவசாயிகளுக்கு வழங் கப்படுகிறது. பயிர்ப் பாதுகாப்புக் கருவிகள் வாங்குவதற்குக் கருவியின் விலையில் 50 சத மானியம், ரூ.300 உச்ச வரம்பு என்ற அளவில் மானியம் வழங்கப்படுகிறது.

நிலக்கடலை மற்றும் சூரியகாந்தி சாகுபடித் திட்டத்தின்கீழ் பண்ணைக் கருவிகள் வாங்கிட விவசாயிகளுக்குக் கருவியின் விதையில் 50 சத மானியம், ரூ.500 உச்ச வரம்பு என்ற அளவில் வழங்கப்படுகிறது.

நிலக்கடலைக்குப் பரிந்துரைகளின்படி ஜிப்சம் உபயோகித்திட, விவசாயிகளுக்கு எக்டேருக்கு 50 சதம் மானியம், அதிகபட்சமாக ரூ.200 மானியம் வழங்கப்படுகிறது.

மேற்குறிப்பிட்டுள்ள திட்டங்களின் மூலம் கடந்த ஆண்டுகளில் எண்ணெய்வித்துச் சாகுபடி செய்யும் விவசாயிகள் பெருமளவில் பயனடைந்து இருக்கின்றனர். நடப்பு ஆண்டிலும் இத்திட்டங் களின் கீழ் அளிக்கப்படும் சலுகைகளை விவசாயிகள் உரிய முறையில் பயன்படுத்திக் கொள்வார்கள் என்பது திண்ணம்.

உலக 'செஸ்' விளையாட்டுப் போட்டி:



# தமிழக வீரர் ஆனந்த் வெற்றி!

உலகச் சாம்பியன் பட்டத்துக்கான 'செஸ் போட்டி கேண்டிடேட்' பிரிவுப் போட்டியில், இந்திய வீரர் விஸ்வநாதன் ஆனந்த் வென்று, கால் இறுதிக்குள் நுழைந்திருக்கிறார். சென்னை மீனம்பாக்கத்தில் 8 சுற்றுக் கொண்ட 'உலகச் செஸ் கேண்டிடேட்' பிரிவுப் போட்டி நடைபெற்றது. இது 1993-இல் நடைபெறவிருக்கும் உலகச் செஸ் கால் இறுதியில் ஆடத் தகுதி பெறுவதற்கான பூர்வாங்கப் போட்டியாகும்.

இந்தப் போட்டியில் இந்தியா சார்பில், தமிழக வீரர் விஸ்வநாதன் ஆனந்தும், ரஷியா சார்பில் அலெக்சி டிரீவும் மோதினார்கள். எட்டு ஆட்டங்கள் கொண்ட தொடரில் 6-வது ஆட்டத்தில் ஆனந்த் சோவியத் வீரர் டிரீவை வென்றார்.

'கேண்டிடேட் செஸ் போட்டி'யின் முதல் ஆட்டத்தில் ஆனந்த் சோவியத் வீரர் அலெக்சி டிரீவை எளிதில் வென்றார். இரண்டாவது ஆட்டம் இருவருக்கும் வெற்றிதோல்வியின்றி முடிவுற்றது. மூன்றாவது ஆட்டத்தில் சோவியத் வீரர், ஆனந்தை வென்று ஆனந்துக்கு இணையாக 1.5 புள்ளிகள் பெற்றார். நான்காவது ஆட்டத்திலிருந்து இந்திய வீரர் ஆனந்தின் கை ஓங்க ஆரம்பித்துவிட்டது. ஆனந்த் நுணுக்கமாக, முழு வேகத்துடன் ஆடி நான்காவது, ஐந்தாவது ஆட்டத்தை வென்று, அதன் மூலம் 3.5 புள்ளிகள் பெற்று, தனது நிலையை வலுப்படுத்திக் கொண்டார். கால் இறுதிச் சுற்றை எட்ட இன்னும் ஒரு புள்ளி எடுத்தால் போதும் என்ற நிலையில் ஆனந்த் 6-வது சுற்று ஆட்டத்தை 30.1.91 அன்று துவக்கினார்.

வெள்ளை நிறக்காய்களுடன் விளையாடிய ஆனந்த், புதுமையான முறையில் காய்களை நகர்த்தி ரஷிய வீரரை வியக்க வைத்தார். 35-வது முறையாக ஆனந்த் காயை நகர்த்தியதும், தனது தோல்வி தவிர்க்க முடியாதது என்பதை உணர்ந்து சோவியத் வீரர் டிரீவ் எழுந்து, ஆனந்துடன் கைகுலுக்கித் தனது தோல்வியை ஒப்புக் கொண்டார். இத்துடன் 4.5 புள்ளிகள் பெற்று, ஆனந்த் கால் இறுதி செஸ் போட்டிக்குத் தகுதி அடைந்தார்.

**முதல் ஆசிய வீரர்**

உலகச் சாம்பியன் பட்டத்துக்கான செஸ் போட்டியில் - கால் இறுதிச் சுற்றுக்குத் தகுதி பெற்றுள்ள முதல் ஆசிய வீரர் விஸ்வநாதன் ஆனந்த். 21 வயது நிரம்பியவர். பிலிப்பைன்ஸில் நடைபெற்ற உலகச் செஸ் போட்டியில் 'ஜூனியர் சாம்பியன்ஷிப்' பட்டத்தை வென்றவர் என்பது குறிப்பிடத்தக்கது.

'பட்டர்பிளை குரூப்' நிறுவனத்தின் ஆதரவுடன் நடந்துவரும் இந்த 'உலகச் செஸ் கேண்டிடேட்' போட்டியில் முதலிடம் பெற்ற ஆனந்துக்கு ஒரு இலட்சத்து 25 ஆயிரம் ரூபாயும், சோவியத் வீரர் அலெக்சி டிரீவுக்கு ரூ.75 ஆயிரமும் பரிசுத் தொகையாக வழங்கப்படும்.

கே. விசுவநாதன்-சுசீலா தம்பதியரின் மகனான திரு. ஆனந்த், 7 வயது முதல் 'செஸ்' விளையாடித் தேர்ச்சி பெற்றவர். தாயாரே குருவாக இருந்து அவருக்குச் 'செஸ்' ஆட்டம் கற்பித்தார்.

1982-இல் ஜூனியர் செஸ் சாம்பியனாகவும், 1986-இல் உலக ஜூனியர் செஸ் சாம்பியனாகவும் தேர்ந்தெடுக்கப்பட்ட பெருமை திரு. ஆனந்துக்கு உண்டு.

கடந்த ஆண்டு இறுதியில் 'பத்மஸ்ரீ' விருதும் இவருக்கு அளிக்கப்பட்டது.



# பெண் சிசுக்கள் கொலைக்கு முற்றுப் புள்ளி



'கல்தோன்றி மண்தோன்றாக் காலத்தே முன் தோன்றி மூத்தகுடி' என்று பெருமைப்படக்கூடிய இனம் தமிழினம்.

இந்தத் தமிழ் இனத்தில்தான் பெண்ணின் பெருமை பேசப்படுகிறது. பூமியைப் பூமாதேவி என்றும், வீரத்தை சக்தியாகவும், பொருளிற்கு லட்சுமியாகவும், அறிவிற்குச் சரஸ்வதியாகவும், நாம் வழிபடுவதிலிருந்து தமிழ் இனம் பெண்ணின் பெருமைக்குப் புகழ் சேர்த்த இனம் என்பது நன்கு வெளிப்படுகிறது.

ஒரு சமுதாயம் நல்ல சமுதாயமாக ஆவதற்குப் பெண்கள்தான் முழுக்காரணம். பெண்கள் படித்த நல்ல அறிவுள்ளவர்களாக இருந்தால், அச்சமுதாயம் விழிப்புற்ற சிறந்த சமுதாயமாக அமையும். இல்லையென்றால் அச்சமுதாயம் சீரழிந்து விடும். இதை விளக்கும் வகையில்தான் 'ஆவதும் பெண்ணாலே, அழிவதும் பெண்ணாலே' என்ற பழந்தமிழ் மொழி கூறுகிறது. இதனால்தான் நம் மூதாதையர் பெண்களைப் போற்றிப் பாதுகாத்து வந்தார்கள்.

இந்தியாவிலேயே வேறு எந்த மாநிலத்திலேயும் இல்லாத அளவிற்குப் பெண்களுக்குப் பல சமூகநலத் திட்டங்களை அரசு அறிவித்துள்ளது. இதையெல்லாம் எண்ணிப்பார்க்காமல் சில பெற்றோர்கள் தாம் பெற்ற பெண் குழந்தைகளை அழிக்கின்ற நெஞ்சைப் பிழிந்திடும் நிகழ்ச்சிகள் மதுரை மாவட்டம் உசிலம்பட்டி தாலுகாவில் நடைபெற்றுள்ளது. இதை அறிந்த நம் தமிழக அரசானது, இதைத் தடுத்திட தீவிர ஏற்பாடுகள் செய்தது. சட்டத்தால் மட்டுமே இதை நிறுத்திவிட முடியாது என்றுணர்ந்த அரசு, அப்பகுதிகளில் வாழும் மக்களிடம் மனமாற்றத்தை ஏற்படுத்த முயன்றது.

முடிவில், இந்தியக் குழந்தைகள் நலச் சங்கத்தின் மூலமாகப் பெண் குழந்தைகளின் நல்வாழ்வு மையம் ஒன்று உசிலம்பட்டியில் அமைக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டது. அச்சங்கத்திற்குத் தமிழக அரசு ரூ.1.50 இலட்சம் நிதியுதவி அளித்தது. பெண் குழந்தைகள் பிறந்தால் அதைக் கொல்ல வேண்டாம், பெண் குழந்தைகள் காப்பகத்திற்குக் கொண்டு வாருங்கள் என்று அறிவிப்பும் அப்பகுதியில் செய்யப்பட்டது. அதன்படி கொண்டு வந்து சேர்க்கப்பட்ட அபிநயா என்ற 4 மாதக் குழந்தை, அர்ச்சனா என்ற 3 மாதக் குழந்தை, அபர்ணா என்ற 2 மாதக் குழந்தை, அபிதா என்ற ஒருமாதக் குழந்தை ஆகிய 4 பெண் குழந்தைகள் இந்த மையத்தில் பராமரிக்கப்பட்டு வருகின்றன.

இந்த நல்வாழ்வு மையத்தில் பராமரிக்கப்பட்டு வரும் பெண் குழந்தைகளைப் படிக்க வைத்து அவர்களுக்கு வேலைவாய்ப்பை உருவாக்கிக் கொடுத்து, திருமணமும் செய்து வைக்கின்ற வரை ஆகும் எல்லாச் செலவினங்களையும் அரசே ஏற்றுக் கொள்ளும்.

பெண் சிசுக் கொலைக் கொடுமைக்கு வறுமை மட்டுமே காரணமல்ல; வரதட்சணைக் கொடுமையும் இதற்கு ஒரு வகையில் மூலகாரணமாகிறது. இப்படிப்பட்ட நிலைமை நீங்கவேண்டுமானால், அரசு சட்டம் இயற்றுவது மட்டுமே போதாது; சமுதாய விழிப்புணர்வும் மிக முக்கியமாகும். ஆணுக்குப் பெண் சமம் என்று சொல்லுவது மட்டுமே போதாது; ஒவ்வொரு ஆணும் பெண்ணுக்குச் சமஉரிமை கொடுத்துச் செயல்படுவதும் அவசியமாகும்.

## பெருவிழா எடுப்போம்

**—தி.பட்சிராஜன்**

ஆணா? பெண்ணா? உயர்ந்தவர் எவரென்று
பட்டி மன்றம் நடத்துதல் மடமை!
'ஆணுக்குப் பெண்ணிங்கு நிகரெனக் கொள்வதால்
அறிவில் ஓங்கி இவ்வையம் தழைக்குமாம்;'
'பேணிப் புவியை வளர்த்திடும் ஈசன்
பெண்ணுக்கு ஞானத்தை வைத்தான்' என்று
பூணும் அன்பால் பெண்குலம் போற்றிய
பெருங்கவி பாரதி சொல்லை மறப்பதோ!

கல்விக்குக் கலைமகள், அன்புக்கு அலைமகள்,
கரையில்லாச் சக்திக்கு மலைமகள், பொறுமைக்கு
நிலமகள் என்றெலாம் பெண்தெய்வம்
வணங்குவோம்;
நிலத்தில் வாழும் பெண்களை மட்டும்
விலைபேசும் ஆடு மாடு கோழிபோல்
விற்றிங்கே ஆண்வர்க்கம் வீரம் பேசும்
நிலையிங்கு மாற நம் மனம்மாற வேண்டியே
நிகழ்வது பெண் குழந்தைகள் ஆண்டென
முழங்குவோம்!

பெண்கள் எல்லாம் கல்வியில், கலையில்
பலவகைத் தொழிலில், நாடுகாக்கும் படையில்
நுண்மைமிகு பொறியியல்- மருத்துவத் துறையில்
நாட்டை வழிநடத்தும் நற்பணியில், இன்னும்
விண்வெளி ஆய்வில் என்றின்று துறைதோறும்
வியத்தகு சாதனைகள் விளைக்கக் கண்டோம்.
பெண்மகவு பிறந்தாலினி பெருந்துயராய்க் கருதாமல்
பெருமகிழ்வில் வரவேற்றுப் பெருவிழா
எடுப்போம்!

# நூல் நயம்

## தமிழ் இதழியல் களஞ்சியம்

**ஆசிரியர்: மா.சு. சம்பந்தன்**
**வெளியீடு:**
தமிழர் பதிப்பகம்
243, இலிங்கச்செட்டித் தெரு,
சென்னை-600 001.

விலை: ரூ.30.00 பக்கம்: 264

ஏறக்குறைய 81 இதழ்களின் தலையங்கங்களையும் - அவற்றில் காணப்படும் அரிய தகவல்களையும் ஏந்தியபடி உலா வந்திருக்கும் 'தமிழ் இதழியல் களஞ்சியம்' ஒரு களஞ்சியமாகவே விளங்குகிறது.

ஒவ்வோர் இதழும், தலையங்கத்தை எந்த உணர்வுடன் தீட்டியிருக்கிறது என்பதை இந்நூலின் வாயிலாக உணர முடிகிறது. இதழ்களின் கொள்கை நெறியையும், இதழாசிரியர்களின் தமிழ் நடையையும், தலையங்கங்கள் வெளிவந்த கால கட்டத்தையும் - பின்புலத்தையும் அறிந்து இன்புற முடிகிறது.

'தமிழ் இதழியல் களஞ்சியம்' என்பது நூலின் தலைப்பென்பதால் ஈழம், சிங்கப்பூர் போன்ற வெளிநாட்டு இதழ்களின் தலையங்கங்களும் இடம் பெற்றுள்ளன.

தலையங்கங்களுக்கு முன்னர்-தலையங்கம் இடம் பெற்ற இதழின் வரலாறு மிகச் சுருக்கமான அளவில் குறிப்பிடப் பட்டிருப்பது பாராட்டுதற்குரியது. தகவல் களஞ்சியம் என்னும் பகுதியில் காணப்படும் செய்திகள் இன்றுள்ள சூழ்நிலையில் அகழ்வாய்வில் கிடைத்த அரும் பொருள்களாகவே விளங்குகின்றன.

1925-ஆம் ஆண்டிலேயே தமிழர் பல்கலைக் கழகம் உருவாக்கத் திட்டமிட்ட செய்தியை அறிய முடிகிறது. செய்திப் பத்திரிகைகளின் இலக்கணத்தைப் புரிந்து கொள்ள வாய்ப்பு ஏற்படுகிறது.

நூலாசிரியரின் கடுமையான உழைப்புக்கு இந்நூல் கட்டியங் கூறுகிறது. தமிழ் நூல் வரிசையில் குறிப்பிடத்தக்க சிறப்பிடம் இந்நூலுக்கு உண்டு.

- தமிழ்ப்பித்தன்

## சோழர்கள் (புத்தகம் - 1 & 2)

**ஆசிரியர்: கே.ஏ. நீலகண்ட சாஸ்திரி**
**வெளியிட்டோர்:**
இந்தியன் கவுன்சில் ஆப் ஹிஸ்டாரிகல் ரிசர்ச், புதுடில்லி
மற்றும் நியூ செஞ்சரி புக் ஹவுஸ் பிரைவேட் லிமிடெட், சென்னை-98

புத்தகம்1-பக்கம் 608 2 பாகங்களும்
புத்தகம்2-பக்கம் 1219 விலை ரூ.160.00

பழம் பெருமை மிக்க நம்முடைய தமிழகத்தின் வரலாற்றில், மூவேந்தர்களின் ஆட்சிக்காலம் மிகுந்த சிறப்புடையதாகும். சேர, சோழ, பாண்டியர் எனக் குறிப்பிடப்படும் அவர்களில் - இரண்டாவது இடத்தில் வைத்துக் குறிப்பிடப்பட்ட போதிலும் சோழ மன்னர்களின் ஆட்சிக் காலம்தான் பொற்காலம் என்கிற பெருமை பெற்றதாக விளங்கியது.

கடல்கடந்த வாணிபம் மேற்கொண்டதிலும், யவனத்தோடும் கீழை நாடுகளோடும் தமிழ்நாடு கிறிஸ்து பிறப்பதற்கு முன்பே தொடர்பு கொண்டிருந்ததிலும் சோழர்களே முக்கியத்துவம் பெற்றிருந்தார்கள் என்கிறது வரலாறு.

அத்தகைய புகழ்மிக்க வரலாற்றை - சோழ மன்னர்களின் வரலாற்றை விவரிப்பதோடு மட்டும் நிறுத்திக் கொள்ளாமல் - ஆட்சிமுறை, வரிவிதிப்பு, நிதி, நீதி பரிபாலனம், மக்களின் வாழ்க்கை முறை, வாணிபம், தொழில், விவசாயம், நிலஉரிமை , கல்வி, சமயம், கலை, இலக்கியம், பண்பாடு, கல்வெட்டுச் செய்திகள் என்றெல்லாம் பகுத்து அரும்பாடு பட்டு ஆய்வு செய்து சான்றுகளோடு விளக்கி நமக்கு அற்புதமான நூலாக்கித் தந்திருக்கிறார் திரு. கே.ஏ. நீலகண்ட சாஸ்திரியார். அவரது ஆங்கில எழுத்தோவியம், திரு . கே.வி. இராமனால் பழுதின்றிச் சுவை மாறாமல், பக்குவம் கெடாமல், தமிழாக்கித் தரப்பட்டிருக்கிறது.

'சோழர்கள்' முதல் புத்தகமானது, முதலாம் குலோத்துங்கன் பட்டத்திற்கு வந்தது வரையிலான வரலாற்றைத் தெரிவிக்கிறது. இரண்டாவது புத்தகமானது சோழர்களின் அரசியல் வரலாற்றை இறுதிவரை சொல்லுவதோடு சோழப் பேரரசினுடைய நிர்வாகம், சமூக வாழ்வு ஆகியவற்றை விவரிப்பதாகத் தொகுக்கப்பட்டிருக்கிறது.

வரலாற்றுத் துறையினர் மட்டுமல்ல; பழம்பெருமை மிக்க சோழர்கள் வரலாற்றை அறிந்து கொள்ளும் ஆவலுடையோரும் அவசியம் படித்துப் பயன்பெறவேண்டிய நூற்கள் இவை.

- பி.எல்.ஆர்

## வர்ம காவியம்

**ஆசிரியர்:**
டாக்டர்.எஸ்.சிதம்பரதாணுப்பிள்ளை
**வெளியீடு:**
இன்டர்நேஷனல் இன்ஸ்டிடூட் ஆப் தாணுவாலஜி
இ.32, அண்ணாநகர் (கிழக்கு)
சென்னை-600 102.

விலை:ரூ.50 பக்கம்:52

வர்மக் கலையின் வரலாறு, அக்கலையின் விளக்கம், அக்கலை சார்ந்த நூல்கள் பற்றிய விளக்கங்கள் ஆகியவை இந்நூலில் சொல்லப்பட்டுள்ளன.

விபத்துக்குள்ளானோர்க்கும், சுளுக்கு போன்றவற்றிற்கு ஆட்பட்டோருக்கும் வர்மக்கலை மருத்துவம் தரும் அற்புதச் சிகிச்சை வியப்பைத் தருகிறது.

இக்கலை, இந்த மருத்துவ முறை தமிழகம் முழுவதும் பரவிப் பயன்பட வேண்டுமென்ற ஆசிரியரின் நல்லெண்ணம் நியாயமானதே.

## நன்றி •

**ஆசிரியர்: நீலவன்**
**வெளியீடு:**
இளவழகி பதிப்பகம்
295 ஈ, மாரியம்மன் கோவில்தெரு,
நியூடவுன்,
வாணியம்பாடி, வ.ஆ.அ.மாவட்டம்

விலை:ரூ.10 பக்கம்:79

சிறுவர்களுக்கு என்று எழுதப்படும் கதைகள், கவிதைகள், கட்டுரைகள் ஆகியவற்றில் ஏதாவது ஒரு நீதி சொல்லப் பட வேண்டும் என்பது நியதி.

அந்த வகையிலும் இந்நூல் சிறப்புப் பெறுகிறது. பளிச்சென்று வேகமாகச் செல்லும் கதையின் போக்கும், நடையும், கதை சொல்லி இருக்கும் பாணியும் பாராட்டும்படியாக உள்ளது.

## இனிமையாகப் பேசுவது எப்படி?

**ஆசிரியர்: தங்கவயல் லோகிதாசன்**
**வெளியீடு:**
ஓரி நிலையம்
3/37, சத்தியமூர்த்தி நகர்
நந்தனம், சென்னை-35.

விலை:ரூ.10 பக்கம்:100

பேசுவதில்தான் எத்தனை வகை! அவற்றை அழகாக, விளக்கமாகக் கூறுகிறார் நூலாசிரியர். சொற்பொழிவின் தொடக்கம், தொடர்ச்சி, முடிவுரை என்றெல்லாம் சிறப்பாகக் கூறி, இளம் பேச்சாளர்களை உருவாக்கத் துணை செய்கிறது இந்நூல்.

- குமாரசாமி



# குழாய்க் கிணற்றில் மின்னியல் ஆய்வின் அவசியம்

ஒரு நாட்டின் முதுகெலும்பாய் விளங்குவது வேளாண்மை ஆகும். வேளாண்மை வளம்பெற வேண்டுமானால், தண்ணீர் மிகவும் அவசியம். ''நீரின்றி அமையாது உலகு'' என்ற முதுமொழியின்படி இன்றைய வேளாண்மை வளர்ச்சிக்கும், மனித வளர்ச்சிக்கும் நீர் இன்றியமையாத ஒன்றாகும். நீர் நமக்குப் பல வகைகளில் கிடைக்கின்றது.

1. மழை நீர், 2. ஆறு, ஏரி, குளம் போன்ற நீர்த் தேக்கங்களின் மூலம் கிடைக்கும் மேல்நிலை நீர், 3. நிலத்தின் அடியில் சேமித்து வைக்கப்படும் நிலத்தடி நீர்.

மேலே குறிப்பிட்டுள்ள அனைத்து நீர் வகைகளுக்கும் மழைநீர்தான் முக்கியக் காரணமாகும். பருவ மழை பற்றாக்குறை ஏற்பட்டுள்ள இன்றைய நாட்களில் மிஞ்சி இருக்கும் நிலத்தடி நீரை மிகுந்த கவனத்துடன் சிக்கனமாகப் பயன்படுத்தியாக வேண்டும்.

நிலத்தடி நீரை விவசாயிகள் நம்பி இருப்பதனால், தமிழ்நாடு வேளாண்மைப் பொறியியல் துறையின் ஒரு பிரிவான சிறு பாசனத் திட்டத்தின்கீழ், பல்வேறு பணிகளை நவீன விஞ்ஞான ரீதியில் நிலத்தடி நீரை நிலபௌதீக ஆய்வு முறையிலும், மின்னியல் ஆய்வு முறையிலும் ஆய்வு செய்து குழாய்க் கிணறுகளை அமைத்துக் கொடுப்பதிலும் முக்கியப் பங்கு வகிக்கிறது.

### நில பௌதிக ஆய்வு மற்றும் ஆலோசனைப் பணிகள்:

நிலபௌதீக ஆய்வைப் பலவிதக் கருவிகளைக் கொண்டு நிலத்தின் உள் அமைப்புகளையும், தண்ணீரின் மட்டங்களையும் அறியலாம். வேளாண்மைப் பொறியியல் துறையில் மின் தடை (Resistivity Meter) எனும் கருவியைக் கொண்டு துள்ளியமாக, நிலபௌதிக ஆய்வு மேற்கொள்ளப்படுகிறது. இக்கருவியைக் கொண்டு குறைந்த பட்சம் 200 மீட்டர் ஆழத்திலும் அதிக பட்சம் 600 மீட்டர் வரை நிலத்தின் ஆழத்தில் உள்ள தண்ணீரும் மற்றும் நிலத்தின் உள் படிவங்களையும் அறியமுடியும்.

விவசாயிகளின் நிலங்களில் இத்திட்டத்தின் மூலம் எந்த இடங்களில் திறந்த கிணறுகள் அமைக்கலாம் மற்றும் துளைக் கிணறுகள் அமைத்தால் போதுமான அளவு நீர் கிடைக்க, எந்த ஆழத்திற்குக் கிணறுகள் மற்றும் துளைக் கிணறுகள் அமைக்க வேண்டும் என்பதை நீர்ப் புவியியல் ஆய்வு செய்வதன் மூலம் தெளிவு பெறலாம்.

நல்ல நீர் மற்றும் உப்புத்தன்மை கொண்ட நீர் கிடைக்கும் பகுதிகளையும் நன்கு அறியலாம். இது போன்ற ஆலோசனைகளைக் குறைந்த கட்டணத்தில் விவசாயப் பெருங்குடி மக்களின் நலம் கருதி இத்துறை செய்து வருகின்றது. குழாய்க்கிணறு அமைக்க விரும்பும் ஒவ்வொரு விவசாயக் குடிமகனும் இத்துறையை அணுகிப் பயன்பெற வேண்டும்.

### மின்னியல் ஆய்வின் முன் ஆய்வு விதிமுறைகள்:

மண்படிவப் பாறை அமைப்புள்ள இடங்களில் துளைக் கிணறுகள் அமைப்பதற்கு முன்பு தகுதியான இடங்களைத் தேர்ந்தெடுக்கவேண்டி நிலபௌதிக ஆய்வு மேற்கொண்ட பிறகு, ஆய்வின் முடிவுப்படி முன்மாதிரி துளைக்கிணறு (Pilot Bore Hole) குறைந்த விட்டத்தில் சுழல் விசைத்துளைக் (Rotary Drill) கருவிகளைக் கொண்டு குறிப்பிட்டுள்ள ஆழத்திற்குத் துளைக் கிணறு அமைத்தவுடன் மின்னியல் ஆய்வு மேற்கொள்ளப்பட வேண்டும். முக்கியமாக மணல் பாங்கு, படிவப் பாறைகள் மற்றும் கடலோரப் பகுதிகளில் இந்த மின்னியல் (Electrical Logging) ஆய்வு மேற்கொள்ளுவது மிகமிக அவசியமானதாகும்.

### தென்னார்க்காடு மாவட்டத்தில் மின்னியல் ஆய்வு மேற்கொள்ளப்படவேண்டிய ஊராட்சி ஒன்றியங்கள்:

முக்கியமாகத் தென்னார்க்காடு மாவட்டத்தில் உள்ள விருத்தாசலம், நல்லூர், திட்டக்குடி, சும்மாபுரம், ஸ்ரீமுஷ்ணம், காட்டுமன்னார்கோயில், புவனகிரி, கீரப்பாளையம், பண்ருட்டி, அண்ணாகிராமம், நெல்லிக்குப்பம், கடலூர், வானூர், மரக்காணம், ஆகிய ஊராட்சிகளில் களிமண் (Clay), மணல் (Sand), களிகலந்த மணல் (Claymixed sand) களிமிகுந்த மணல் (Clacy sand), கல்மண் (Sandstone) அல்லது மணற்பார், சுண்ணாம்பு பார் (Limestone), மற்றும் களிசூழ்ந்த மணல் (Clay bound sand) போன்ற மண்படிவங்கள் பல்வேறு நிலவியல் படிவ அமைப்பில் காணப்படும். இத்தகைய ஆற்றுப்படிவ மண்வடிவப் பகுதிகளில் மின்னியல் ஆய்வு மேற்கொள்ளுவதன் மூலம் மேற்கண்ட மண் படிவங்களை வேறுபடுத்தி இனம் காண முடியும். எனவே, மின்னியல் ஆய்வு முக்கியமானதாகும்.

### மின்னியல் ஆய்வின் முக்கியச் சிறப்புகள் மற்றும் பயன்கள்:

ஒரு மனிதனுக்கு உயிர்வாழ முக்கியமான உருப்பாக விளங்கும் இருதயத்தின் ரத்த அழுத்தத்தை இ.சி.ஜி. என்னும் கருவியைக் கொண்டு ரத்தத்தினுள் அழுத்தங்களையும், இருதயத்தின் உள் துடிப்புகளையும் மருத்துவர்களின் உதவியால் கண்டுகொள்கிறோம். இதே முறையில் பலவிதமான மின்னியல் ஆய்வு (Ele-Logger) கருவிகளைக் கொண்டு மின்கதிர் அரைவரிசைகளைக் கையாண்டு துளைக் கிணற்றின் உள் படிவங்களையும், நல்ல நீர், உப்புநீர், நீரின் அழுத்தம், நீரின் அளவு மற்றும் எந்த இடத்தில் சல்லடைக்குழாய் பொறுத்த வேண்டும்

கு. அருமைசிங்
தலைமைப் பொறியாளர்
வேளாண்மைப் பொறியியல் துறை.

# மிதக்கும் கப்பல் பழுது பார்க்கும் தளங்கள்

சென்னைத் துறைமுகத்தில் — நவீன கப்பல் பழுது பார்க்கும் தளம் ஒன்று இல்லாமல் இருந்தது ஒரு பெருங் குறையாகவே இருந்து வந்தது.

இத்துறைமுகத்தின் கப்பல்களான காவேரி, கொள்ளிடம் போன்ற மண்வாரிக் கப்பல்களைப் பழுது பார்ப்பதற்குக்கூட, இரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை அவற்றை கல்கத்தா, விசாகப்பட்டிணம் துறைமுகங்களுக்கு அனுப்பி, பழுது பார்த்துக் கொண்டு வரும் நிலை இருந்தது. இதன்காரணமாகப் போய் வருவதற்கான காலமும், செலவும் ஏற்பட்டு வந்தன.

இதைத் தவிர்ப்பதற்காக — சென்னைத் துறைமுகத்திலேயே ஒரு மிதக்கும் கப்பல் பழுது பார்க்கும் தளம் அமைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

இத்தகைய கப்பல் பழுது பார்க்கும் தளத்தை சென்னைத் துறைமுகத்தில் அமைக்க உலகம் முழுவதிலிருந்தும் பல்வேறு நிறுவனங்கள் முன் வந்தன. அவற்றுள் 'சொக்கானி இன்டர்நேஷனல்' நிறுவனம் தேர்வு செய்யப் பட்டது.

இதன்படி இந்த நிறுவனம்—மார்ச் 16ஆம் தேதி 'பாரத்' எனும் மிகப் பெரும் மிதக்கும் கப்பல் பழுது பார்க்கும் தளத்தை சென்னைத் துறைமுகத்தில் அமைத்தது; ஏப்ரல் 10ஆம் தேதி 'மதுசூதன்' எனும் மற்றொரு சிறிய மிதக்கும் கப்பல் பழுது பார்க்கும் தளத்தையும் சென்னைத் துறைமுகத்தில் அமைத்தது.

**"பாரத்" தளம் பற்றிய குறிப்புகள்:**

இதன் நீளம் : 190 மீட்டர்
அகலம் : 40 மீட்டர்
உயரம் : 14.6 மீட்டர்
தூக்கும்திறன் : 14,000 டன்கள் (அதாவது 40 ஆயிரம் டன் கொள்ளவு உள்ள கப்பல்கள்)

**'மதுசூதன்' தளம் பற்றிய குறிப்புகள்:**

இதன் நீளம் : 108 மீட்டர்
அகலம் : 25.2 மீட்டர்
உயரம் : 9.6 மீட்டர்
தூக்கும் திறன் : 2,400 டன்கள் (அதாவது 10 ஆயிரம் டன் கொள்ளவ உள்ள கப்பல்கள்)

இதில் 500க்கும் மேலானோருக்கு நேரிடை வேலை வாய்ப்பும், மற்ற வகையில் மேலும் 500 பேருக்குமான வேலை வாய்ப்பும் கிடைக்கும். இது கப்பல் கட்டும் துறையிலான தொழில் நுட்பத்தை வளர்க்கவும் உதவியாக இருக்கும்.

இந்த வசதியின் காரணமாக சென்னைத் துறைமுகத்திற்கு கப்பல்கள் வருவதும் போவதுமான போக்குவரத்து அதிகரிக்கும் சூழ்நிலை உருவாகி உள்ளது. இதனால் சென்னையிலும், சென்னையைச் சுற்றியுள்ள பகுதிகளிலும், கப்பல் பழுது பார்ப்பதற்குத் தொடர்பான தொழில்கள் உருவாகவும், அவற்றில் வேலை வாய்ப்புகள் பெருகவும் இது வழிகோலுகிறது.

தற்போது இந்தியாவில் உள்ள 800 கப்பல்களில் ஆண்டுக்கு 80 கப்பல்களைப் பழுது பார்க்கும் வசதி மட்டுமே நம்மிடம் உள்ளது. தற்போது சென்னைத் துறைமுகத்தில் அமைந்துள்ள இந்த வசதியின் காரணமாக, மேலும் அதிகமான கப்பல்களைக் கையாளும் வசதி ஏற்பட்டுள்ளது.

நன்றி: சென்னைத் துறைமுகம்

போன்ற பலவிதமான தேவையான விவரங்களைக் கண்டு அறிய உதவும் கருவிதான், மின்னியல் ஆய்வுக் கருவி.

விசைத்துளைக் கருவியினைக் கொண்டு மண் படிவங்கள் உள்ள பகுதிகளில் குழாய்க் கிணறு அமைக்கும்போது, முன்னோடித் துளைக் கிணறு போடும்போது பெண்டோனைட் களிமண்ணுடன் மண் படிவங்கள் கலந்து வருவதால் மண் படிவ அமைப்பினையும் மண்படிவங்களின் கடினத்தன்மை பிளவுகள் மற்றும் கூழாங்கற்கள் போன்ற பரல்கள் கிடைக்கும்போதும், சுண்ணாம்பு பார், கட்டுமணல் களி சூழ்ந்த மணல் போன்ற படிவங்கள் காணப்படும் போதும் திட்டவட்டமாகவும் அப்படிவங்களில் காணப்படும் ஊற்றுத் திறன் பற்றியும் தெளிவுற முடியாமல் போகும் வாய்ப்புகள் மிகுதியானவை. இப்படிவங்களின் இடையில் உப்புநீர் ஊடுருவி வருவதற்கும் வாய்ப்புகள் அதிகமாக உள்ளது. அதற்குக் கீழே கிடைக்கும் நல்ல நீர் எந்தப் படிவங்களில் கிடைக்கும் என்பதைத் துள்ளியமாக அறிந்து, நீரை வெளிக்கொண்டு வந்தால், சிறப்பான முறையில் விவசாயிகள் விவசாயத்தைச் செய்து உற்பத்தியைப் பெருக்கும் வாய்ப்பும் அதிகரிக்கும்.

மேலும், துளைக் கிணறுகளில் ஒரு சில பகுதிகளில் காணப்படும் உப்பு நீரையும், தேவையற்ற பகுதிகளையும், களிமண் அல்லது சிமெண்ட் கலவை முறையிலும் அடைத்து நல்ல நீர் கிடைக்கும் பகுதிகளில் மணலின் தன்மையையும், நீரூற்றுத் தன்மைகளையும் கண்டுபிடித்து அதற்குத் தகுந்தாற் போல் சல்லடைக் குழாய்கள் பொருத்தி நல்ல நீரை .- அதிக அளவில் கிடைக்கும் நீரை விவசாய உபயோகத்திற்கு வெளிக் கொண்டு வந்து பயன்படுத்தலாம்.

நிலபௌதிக ஆய்வு மற்றும் மின்னியல் ஆய்வின் கருவிகளைப் பயன்படுத்தி விவசாயிகள் மற்றும் விவசாயம் அல்லாத நிலங்களில் சுழல் விசைத்துளைக் கருவிகளைக் கொண்டு குழாய்க் கிணறு அமைப்பதன் மூலம் விவசாயிகள் அவர்களது மூலதனத்தை வீணாக்காமல் நல்ல திறன் மிகுந்த குழாய்க் கிணறுகளை அமைக்க முடியும். இதற்காக வேளாண்மைப் பொறியியல் துறையினர் மிகவும் குறைந்த வாடகையில் எல்லா சிறு பாசனக் கருவிகளையும் விவசாயிகளுக்கு வழங்கி வருகின்றனர்.


1. நில பௌதிக ஆய்விற்கு (ஒரு இடம் தேர்வு செய்ய) விவசாயப் பணிக்கு ரூ.200.00 இதர பணிக்கு ரூ.400.00.

இதேபோல, மின்னியல் ஆய்வுக்கு (ஒரு குழாய்க் கிணறுக்கு) போக்குவரத்து உட்பட விவசாயப் பணிக்கு ரூ.300.00 இதரப் பணிக்கு ரூ.500.00 ஆகும்.



பெரியார் மாவட்டத்தில்

# பட்டுத் தொழில் வளர்ச்சி



பட்டுப்புழுக்களின் உணவுக்கான மல்பெரித் தோட்டம்

பெரியார் மாவட்டத்தில் தாளவாடி ஒன்றியம் நீங்கலாக 19 ஒன்றியங்களிலும், சமவெளிப் பகுதியில் பட்டு வளர்ப்புத் தொழில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

உலக வங்கி நிதியுதவியுடன் கூடிய தேசியப் பட்டு வளர்ச்சித் திட்டம் 1989-90 முதல் பெரியார் மாவட்டம் உட்பட 10 மாவட்டங்களில் செயல்பட்டு வருகிறது. தேசியப் பட்டு வளர்ச்சித் திட்டத்திற்காக உலக வங்கி ரூ.41.77 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்துள்ளது. நடப்பாண்டு 1990-91-ஆம் ஆண்டு இரண்டாம் ஆண்டாக இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

பெரியார் மாவட்டத்தில் சமவெளிப் பகுதியில் 1900.00 ஏக்கரில் இறைவைச் சாகுபடியின் கீழ் மல்பரி பயிர் செய்து, 2226 பட்டு விவசாயிகள் பட்டு வளர்ப்புப் பணியில் ஈடுபட்டு வருகின்றனர்.

**பட்டுக் கூடு உற்பத்தி:**

இதுவரை 2.05 இலட்சம் கிலோ பட்டுக் கூடுகள் உற்பத்தி செய்யப் பட்டுள்ளது. இதன் மதிப்பு சுமார் 1.8 கோடி ரூபாங் ஆகும். பெரியார் மாவட்டப் பட்டு விவசாயப் பெரு மக்கள் உற்பத்தி செய்த பட்டுக் கூடுகளைப் பிற மாவட்டங்களிலும், கர்நாடக மாநிலங்களிலும் தான் விற்பனை செய்ய வேண்டிய நிலையைக் கருதி, ஈரோட்டில் அரசு பட்டுக் கூடு அங்காடி நிறுவப்பட உள்ளது. இதன் மூலம் எளிதில் உற்பத்தி செய்த பட்டுக் கூடுகளை விற்பனை செய்ய வழி வகை செய்யப்படும்.

**மல்பெரி விரிவாக்கம்:**

நடப்பாண்டிற்கு 217 ஏக்கர்கள் மல்பரி பயிர் இறைவைச் சாகுபடியின் கீழ்க் கொண்டுவர இலக்கு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. இது வரை 414.80 ஏக்கர்களில் மல்பரி சாகுபடி செய்யப்பட்டுள்ளது.

1990-91-ஆம் ஆண்டிற்கு 2.5 இலட்சம் நாற்றுகள் உற்பத்தி செய்ய இலக்கு நிர்ணயம் செய்யப்பட்டு. அதற்கான நிதி குறியீடாக ரூ.12,500 ஒதுக்கப்பட்டுள்ளது. நவம்பர் 1990 திங்கள் வரை 10 இலட்சம் மல்பரி நாற்றுக்கள் உற்பத்தி செய்யப் பட்டுள்ளது. நிதிக் குறியீட்டில் ரூ.12,500 செலவு செய்யப் பட்டுள்ளது.

**கடன் வசதிகள்:**

பட்டு வளர்ப்புத் தொழில் மேற்கொள்ள கடன் வசதிகள் பட்டு விவசாயிகளுக்கு ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டு வருகின்றன. இத்திட்டத்தில் பட்டுப்புழு வளர்ப்பிற்கு மல்பரி பயிரிடவும், பட்டுப்புழு

வளர்ப்புத் தளவாடங்கள் வாங்கவும், பட்டுப்புழு வளர்ப்பு மனை கட்டவும், கிணறுகள் ஆழப்படுத்தவும், மற்றும் புதிய கிணறுகள் தோண்டவும் விண்ணப்பங்கள் பெறப்பட்டு வங்கிகளுக்கு அனுப்பப் பட்டு, கடன் வசதிகள் கிடைக்க ஏற்பாடுகள் விரிவாக்கத்திற்கு மானிய வசதி ஏதும் இல்லாததால், பட்டு விவசாயிகளுக்கு மானியமில்லா வங்கிக் கடன் வசதி கிடைக்க வேண்டி விண்ணப்பங்கள் பெறப் பட்டு நேரடியாக வங்கிகளுக்கு அனுப்பப்பட்டு வருகின்றது. மேலும், சிறு மற்றும் குறு விவசாயிகள் ஆகியோர்களிடம் இருந்து மானிய வசதிக்காக விண்ணப்பங்கள் பெறப் பட்டு ஊராட்சி ஒன்றிய அலுவலகத் திற்கு அனுப்பப்பட்டு, மாவட்ட அரசு வளர்ச்சி முகமை உதவியுடனும், மாவட்ட ஆட்சித் தலைவர் உதவியுடனும், மானிய வசதிகள் கிடைக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகிறது.

நபார்டு கடன் அளவுகோல்படி, ஒரு ஏக்கருக்கு மல்பரி பயிரிட ரூ.1,400 பட்டுப்புழு வளர்ப்புத் தளவாடங்கள் வாங்க ரூ.3,200 பட்டுப்புழு வளர்ப்பு மனை கட்ட ரூ.5,000 ஆக மொத்தம் ரூ.9,600 கடன் சிபாரிசு செய்யப்படுகிறது.

நவம்பர் 1990 வரை 270 கடன் விண்ணப்பங்கள் மல்பரி பயிரிடக் கடனுக்காகவும், பட்டுப்புழு வளர்ப்புத் தளவாடங்கள் வாங்கவும், பட்டுப்புழு வளர்ப்பு மனை அமைக்கவும், 17 கடன் விண்ணப்பங்கள் கிணறு ஆழப்படுத்தக் கடன் வசதி கோரியும் வங்கிகளுக் குப் பரிந்துரை செய்து அனுப்பப் பட்டுள்ளது. 51 விவசாயிகளுக்கு மல்பரி பயிரிடவும், பட்டுப்புழு வளர்ப்புத் தளவாடங்கள் வாங்கவும் மற்றும் பட்டுப்புழு வளர்ப்பு மனை கட்டவும் கடன் ரூ.5 இலட்சம் அனுமதி கிடைத்துள்ளது.

### பட்டு விவசாயப் பயிற்சி:

பட்டு வளர்ச்சி பயிற்சிக்கென நடப்பாண்டிற்கு 72 பட்டு விவசாயிகளுக்குப் பயிற்சியளிக்க இலக்கு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. நிதிக் குறியீடு ரூ.21,600 ஒதுக்கப்பட்டுள்ளது. நவம்பர் 1990 வரை 72 விவசாயிகளுக்குப் பயிற்சி அளிக்கப் பட்டு உள்ளது. பயிற்சிக்கால உதவித் தொகையாக ரூ.10,800 விவசாயிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. பயிற்சி பெற்ற ஒவ்வொரு விவசாயிகளுக்கும், ரூ.150 மதிப்புள்ள பட்டுப்புழு வளர்ப்பு உபகரணங்கள் இலவசமாக வழங்கப் படும். இதற்காக ரூ.10,800 நிதி ஒதுக்கீடு பெறப்பட்டுள்ளது.

### பட்டு நூற்பகங்கள் அமைத்தல்:

நடப்பாண்டிற்கு 20 பட்டு நூற்பு இயந்திரங்கள் அமைக்க குறியீடு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. நவம்பர் 1990 வரை 35 பட்டு நூற்பு இயந்திரங்கள் அமைக் கப்பட்டு விட்டன. பட்டு நூற்பு இயந்திரங்களுக்குப் பட்டு நூற்பு மூலதனக் கடன் வேண்டி 3 நபர்களுக்குக் கடன் வசதி செய்து கொடுக்க வங்கிக் கடன் விண்ணப் பங்கள் வங்கிகளுக்குப் பரிந்துரை செய்து அனுப்பப்பட்டுள்ளன.

பெரியார் மாவட்டத்தில் நூற்பு நிலையங்களைத் தனியார் துறையில் ஊக்குவித்து இம்மாவட்டத்தில் உற்பத்தி செய்யப்படும் பட்டுக் கூடுகளைப் பட்டு நூலாக நூற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இதன்மூலம் படித்த மற்றும் படிக்காத இளைஞர்களுக்குச் சுயவேலை வாய்ப்பு கிடைக்கும். பட்டு நூற்பு ஆலைகளுக்குத் தேவைப்படும் பணியாளர்களுக்கு, மாதம் ரூ.250 உதவித் தொகையுடன், இலவசமாக ஆறு மாதக் காலம் பயிற்சி அளிக்கும் அரசு பட்டு நூற்புப் பயிற்சி நிலையமும் ஈரோட்டில் துவக்கப்பட்டுள்ளது. நடைமுறை மூலதனமாக ரூ.9,000 வங்கி மூலம் கிடைக்கவும் சிபாரிசு செய்யப்படுகிறது.

பட்டு வளர்ச்சித்துறை, அனைத்துத் தொழில் நுட்ப உதவிகளையும் வழங்கும். உற்பத்தி செய்த பட்டு நூலை, தமிழ்நாடு பட்டுக் கூட்டுறவு இணையம் கொள்முதல் செய்யும். ஆகையால், தனியார் துறையில் பட்டு நூற்பாலைகள் நிறுவ முன் வரலாம்.

### தனியார் பட்டு முட்டைத் தயாரிப்பு நிலையம்:

உலக வங்கி உதவியுடன் செயல் படுத்தப்படும் தேசீய பட்டு வளர்ச்சித் திட்டத்தின் கீழ், ஈரோட்டில் இரண்டு தனியார் பட்டு முட்டைத் தயாரிப்பு நிலையங்கள் ஆரம்பிக்க உரிமம் வழங்கப்பட்டுள்ளது.

ஒன்று, ராஜா பட்டு முட்டைத் தயாரிப்பு நிலையம் ஆகும். மற்றொன்று ஸ்ரீவெங்கடேசுவரா பட்டு முட்டைத் தயாரிப்பு நிலையம் ஆகும். இவ்விரு தனியார் பட்டு முட்டைத் தயாரிப்பு நிலையங்களும் துவக்கப்படுவதற்கு முன்னர், பட்டு விவசாயிகள் தங்களுக்குத் தேவையான பட்டு முட்டைகளைத் தர்மபுரி, கோயம்புத்தூர், ஓசூர் மற்றும் கர்நாடக மாநிலங்களிலிருந்து பெற வேண்டிய நிலை இருந்தது. தற்பொழுது இரண்டு தனியார் பட்டு முட்டை உற்பத்தி செய்யும் நிலையங்கள் ஈரோட்டில் செயல்பட்டதிலிருந்து பெரியார் மாவட்ட விவசாயிகளுக்கு எளிதில் பட்டு முட்டை கிடைப்பதோடு, காலத்தே கிடைக்கக் கூடிய சூழ்நிலை ஏற்பட்டு பட்டு விவசாயிகளின் சிரமங்கள் தவிர்க்கப்பட்டுள்ளன.



பட்டு முட்டைத் தயாரிப்புக்கான விதைப் பட்டுக் கூடுகள்.

## மாணவர் பக்கம்

### அறிவுச் சுடர்

1. ''ஒன்றே குலம்'' ''ஒருவனே தேவன்'' என்ற தொடர் எந்த நூலில் உள்ளது? இதை இயற்றியவர் யார்?
2. ஜோடி எழுத்துக்களில் நெடில் முன்னும், குறில் பின்னும் வரக் கூடிய ஒரு தமிழ்ச்சொல் எது?
3. தமிழில் தோன்றி அழிந்துபோன முதல் தமிழ் இலக்கண நூல் எது?
4. தமிழில் முதன் முதலில் அச்சுக் கூடத்தை ஏற்படுத்தியவர் யார்?
5. இந்தியாவில் மிகப்பழமையான மலைத்தொடர் எது?
6. இந்தியாவின் ''மினி சுவிட்சர் லாந்து'' என அழைக்கப்படும் நகரம் எது?
7. இந்தியாவின் முதலாவது வானொலி நிலையம் எங்கே? எப்போது தொடங்கப்பட்டது?
8. மாணவர்களுக்கு இரண்டு கைகளாலும் எழுதக் கற்றுத்தரும் நாடு எது?
9. வெள்ளை நிறத்தைத் துக்கத்தின் சின்னமாக ஏற்றுக் கொண்ட நாடு எது?
10. மனித உடலில் எவ்வளவு சதவிகிதம் இரத்தம் உள்ளது?
11. மனித உடலில் இரத்த ஓட்டமில்லாத பகுதி எது?
12. புகைப்படத் தொழிலில் பயன்படும் பொருள்(உப்பு) எது?
13. ஒலிப்பதிவு நாடாவின் மீது பூசப்படும் பொருள் எது?
14. தீயை அணைக்க உதவும் வாயு எது?
15. அழுகை மதில் (Wailing Wall) எங்குள்ளது?
16. இதுவரை நிலவில் காலடி வைத்தவர்கள் எத்தனைப் பேர்?
17. உலகிலேயே அதிக அளவு கோதுமை உற்பத்தி செய்யும் நாடு எது?

### விடைகள்

1. நூல் - திருமந்திரம்
   எழுதியவர் - திருமூலர்
2. தூது
3. குமரவேல் இயற்றிய 'குமரம்'
4. சீகன் பால்கு ஐயர்
5. ஆரவல்லி மலைத்தொடர்
6. லூதியானா
7. சென்னையில், 1923-ஆம் ஆண்டு
8. ஜப்பான்
9. சீனா
10. 4 சதவிகிதம்
11. விழிவெண்படலம்
12. வெள்ளி புரோமைடு
13. இரும்பு ஆக்சைடு
14. கார்பன்-டை-ஆக்சைடு
15. இஸ்ரேல்
16. 12 பேர்
17. சோவியத் யூனியன்

—வீ. குமணன்
திரிபுரசுந்தரி அம்மன்
தொழில் நுட்பப்பயிலகம்
(முதல் ஆண்டு) சகை கிராமம்
திருக்கழுக்குன்றம்.



### குறள் விளக்கு

தஞ்சைப்பாண்டியன்



குறளைப் படிக்க வருவாயே-தம்பி
குவலயம் போற்ற உயர்வாயே!
அறமும் பொருளும் இன்பமுமே-தம்பி
அள்ளி வழங்கும் திருக்குறளே!

அற்புதக் கவியே வள்ளுவனே-உலகில்
அனைத்தும் அறிந்த வல்லவனே!
பற்பல நூல்கள் இருந்தாலும்-இன்று
பலரைக் கவரும் திருக்குறளே!

முப்பால் திகட்டாக் கனிச்சாறு-நூல்
முழுதும் தத்துவ வரலாறு!
இப்புவி அரங்கில் ஒளிவிளக்கம்-பெரும்
இருளை அகற்றும் திருக்குறளே!

உலகப் பொதுமறை இந்நூலே-அதுதான்
உள்ளம் கவரும் நன்னூலே!
விலையே இல்லா மாமணியே-தம்பி
விரும்பிப் படிப்பாய் திருக்குறளே!

### பழமொழிகள்

எள் என்பதற்கு முன்னே, எண்ணெயா நிற்பான்.
ஒரே கல்லில் இரண்டு மாங்காய்.
ஒன்று செய்தாலும் உருப்படியாகச் செய்ய வேண்டும்.
ஓடுகிற பாம்பை மிதிக்கிற பருவம்.
கடுகு சிறுத்தாலும் காரம் போகாது.
கண்டால் ஒரு பேச்சு காணாவிட்டால் ஒரு பேச்சு
கற்றோர்க்குச் சென்ற இடமெல்லாம் சிறப்பு.
காற்றுள்ள போதே தூற்றிக்கொள்.
கிணறு இறைக்க இறைக்கச் சுரக்கும்.
குரு வாய்மொழியே திருவாய்மொழி.
கூடி வாழ்ந்தால் கோடி நன்மை.
கெடுவான் கேடு நினைப்பான்.
கைப்புண்ணுக்குக் கண்ணாடியா வேண்டும்?.
கோபம் உள்ள இடத்தில் குணம் உண்டு.
சிறு துரும்பும் பல் குத்த உதவும்.
சேர்ந்து வாழ்வதே சிறந்த வலிமை.
தவளை தன் வாயால் கெடும்.
தாயிற் சிறந்ததொரு கோயிலுமில்லை.
திரை கடல் ஓடியும் திரவியம் தேடு.
தீராக் கோபம் போராய் முடியும்.
தொட்டில் பழக்கம் சுடுகாடு மட்டும்.
நம்பினவரை நட்டாற்றில் விடலாமா?.
நெற்றி வேர்வை நிலத்தில் விழ உழை.

-'வாசன் உயர்தரத் தமிழ்க் கையகராதி' என்னும் நூலிலிருந்து.

தரமான காஞ்சிபுரம் பட்டுச் சேலைகள், பாவாடைகள், சோளி ரகங்கள்
• நியாயமான விலையில் வாங்க சிறந்த இடம்

தொலைபேசி: 2101 தந்தி: ''முருகோசில்க்''

**காஞ்சிபுரம் முருகன் பட்டு நெசவாளர் கூட்டுறவு உற்பத்தி மற்றும் விற்பனைச் சங்கம் லிமிடெட். நெ.ஜி. 1653**

79-காந்தி ரோடு, காஞ்சிபுரம்-631 501.

(குளிர்பதனம் செய்யப்பட்டது)

*விற்பனை நிலையங்கள்:*

1. 'காஞ்சி கூட்டுறவு பட்டு'
உம்மிடியார் ஷாப்பிங் சென்டர்,
811, அண்ணா சலை,
சென்னை-600 002.
2. நெ.39, ஆற்காடு ரோடு,
கோடம்பாக்கம், சென்னை-600 024.
(நேரடி விற்பனை நிலையம்)
3. நெ.9, கீழ் ஆவணி மூலவீதி,
மதுரை-625 001.
4. ''சுவேதா சில்க்ஸ்''
நெ.10-சி, இரண்டாவது அக்ரஹாரம்,
சேலம்-636 001.
5. ஸ்ரீவெங்கடேஸ்வரா சில்க் அவுஸ்,
நெ.206, ருக்மணி பில்டிங்ஸ்,
சிக்பெட், பெங்களூர்-560 053.
6. மகாலட்சுமி சில்க்ஸ்,
7-3-276, மெயின் பஜார்,
இந்துப்பூர்-515 201

இரா. விஜேந்திரன், பி.ஏ.,
துணை இயக்குநர்/தனி அலுவலர்

தந்தி: ''பல்கோ சில்க்'' போன்: '2634'

*பார்புகழும் சிறப்பு - காஞ்சிபுரம் பட்டுச் சேலைகளுக்குப்*
*பார்த்து வாங்கிட வாருங்கள் - பல்லவர் பட்டுக் கூட்டுறவுச் சங்கத்துக்கு*

**காஞ்சிபுரம் பல்லவர் பட்டுக் கைத்தறி நெசவாளர் கூட்டுறவு உற்பத்தி மற்றும் விற்பனைச் சங்கம் லிட்., நெ.கே.பி. (ஸ்பெஷல்) 83.**

429-பி, 430, காந்தி ரோடு, காஞ்சிபுரம்-631 501

**கிளை விற்பனை நிலையங்கள்**

1. ஸ்ரீ சில்க்ஸ்
2 நியூ காம்ப்ளெக்ஸ்,
ஆர்.சி. பில்டிங்ஸ்,
பி.வி.கே. அய்யங்கார் ரோடு, பெங்களூர்.
2. காவேரி சில்க்ஸ்,
15-3-415 மெயின் ரோடு,
ஹிந்துபூர் (ஆந்திரா).
3. காஞ்சி கோ-ஆப்-சில்க்ஸ்,
உம்மிடியார் ஷாப்பிங் சென்டர்,
அண்ணா சாலை, சென்னை-600 002.
4. ராமரத்னா சில்க்ஸ்,
241-2வது அக்ரஹாரம்,
சேலம்-636 001.
5. ஸ்ரீ மாருதி சில்க்ஸ்,
13/528 சிவாலயம் தெரு,
புரொடட்டூர்-கடப்பா ஜில்லா, (ஆந்திரா)
6. வி.எஸ். சந்திரசேகரன் அண்ட் கோ,
139, கீழவெளி வீதி,
மதுரை-1
7. ஸ்ரீ வாஸவி சில்க்ஸ்,
15-204-ஏ வைஸ்யா ஹாஸ்டல் ரோடு,
அனந்தபூர் (ஆந்திரா).
8. தேவி சில்க்ஸ்,
19 திருவேங்கடசாமி தெரு,
ஈரோடு-638 001.
9. மன்ரோஸ் டெக்ஸ்,
39, ஆற்காடு ரோடு,
கோடம்பாக்கம், சென்னை-24.
10. பெருமாள் சில்க்ஸ்,
282, சி. ராஜ வீதி,
கோயம்புத்தூர்.

**நிர்வாகஸ்தர்கள்:**

டி. ஏகாம்பரம்
டி. கலா
கே. மீனாட்சி

ஜி. நடராஜன்
வி.எம். சந்திரபானு
என். கோவிந்தராஜ்
பி. ஜெயவேல்

ஏ. நாகராசன்
தலைவர்
எஸ். லோகநாதன்
உப தலைவர்

ஜி. நாகலிங்கம்
துணை இயக்குநர்/செயலர்





# மாமல்லபுரத்தில் வசந்த விழா

''இந்தியாவுக்கு வாருங்கள்'' சுற்றுலா ஆண்டாக 1991-ஆம் ஆண்டு கொண்டாடப்படுவதையொட்டி, செங்கை-அண்ணா மாவட்டம் மாமல்லபுரத்தில், பிப்ரவரி 9-ஆம் நாள் முதல் 19-ஆம் நாள் முடிய 11 நாட்கள் வசந்த விழா நிகழ்ச்சிகள் நடைபெறுகின்றன.

தமிழ்நாடு சுற்றுலாத்துறை, இந்திய பரத நாட்டியக் கலைஞர்கள் சங்கம் மற்றும் சென்னை கைவினைஞர்கள் அறக்கட்டளை ஆகியன இணைந்து இந்தக் கலை விழாவிற்கு ஏற்பாடு செய்துள்ளன.

இந்த விழாவினை, மேதகு தமிழக ஆளுநர் அவர்களின் ஆலோசகர் திரு. வி. கார்த்திகேயன் அவர்கள் 9-2- 1991 அன்று மாமல்லபுரத்தில் துவக்கி வைத்தார்.

இந்த 11 நாள் வசந்த விழாவில் நாட்டிய நிகழ்ச்சிகள், கைவினைப் பொருள் கண்காட்சி மற்றும் உணவுப் பொருள் கண்காட்சிகள் நடத்தப்படுகின்றன.

வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகளை ஈர்க்கும் வகையில் 1991- ஆம் ஆண்டினை ''இந்தியாவுக்கு வாருங்கள்'' என்றழைக்கும் சுற்றுலா ஆண்டாக மத்திய அரசு கடைப்பிடிக்கிறது. இதையொட்டி சுற்றுலாப் பயணிகளைக் கவரும் விதத்தில் இந்தியாவின் பல்வேறு இடங்களில் வண்ணமிகு விழாக்களுக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. தமிழ்நாட்டில் மாமல்லபுரத்தில் இத்தகைய ஒரு விழாவுக்கு ஏற்பாடு செய்யப்பட்ட

விழாவில், தமிழக அரசு செய்தி-சுற்றுலாத் துறைச் செயலாளர் திருமதி ஜெயந்தி சுற்றுலாத்துறை இயக்குநர் திருமதி சிவகாமி தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக மேலாண்மை இயக்குநர் திரு. பி. செல்வம் செங்கை அண்ணா மாவட்ட ஆட்சித் தலைவர் (பொறுப்பு) திரு. கிருஷ்ணசாமி ராஜீவன் செங்கல்பட்டு நாடாளுமன்ற உறுப்பினர் திரு. காஞ்சி பன்னீர் செல்வம் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்புரை ஆற்றினார்கள்.

விழாவிற்கு வந்திருந்த அனைவரையும் செய்தி-சுற்றுலாத் துறைச் செயலாளர் திருமதி ஜெயந்தி அவர்கள் வரவேற்றுப் பேசுகையில், ''இந்தியாவுக்கு வாருங்கள்'' சுற்றுலா ஆண்டையொட்டி வெளிநாட்டுச் சுற்றலாப் பயணிகளை ஈர்க்கும் பொருட்டு ஒவ்வொரு மாநிலமும் இரண்டு விழாக்கள் நடத்த மத்திய அரசு அனுமதி வழங்கியுள்ளது. தமிழ்நாட்டில் பல்லவர்காலச் சிற்பங்கள் நிறைந்த மாமல்லபுரத்தில் இத்தகைய ஒரு விழாவுக்கு அரசு ஏற்பாடு செய்துள்ளது. சென்ற ஆண்டைக் காட்டிலும் இவ்வாண்டு 25 சதவிகிதம் கூடுதலாகச் சுற்றுலாப் பயணிகள் மாமல்லபுரம் வருகை புரிவார்களென எதிர்பார்க்கப்படுகிறது. சரித்திரப் புகழ்பெற்ற மாமல்லபுரத்தைத் தமிழகத்தின் கலாச்சாரத் தலைமையிடமாக ஆக்குவதற்கு அரசு நடவடிக்கை எடுத்துவருகிறது என்று தெரிவித்தார்.

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் மேலாண்மை இயக்குநர் திரு. பி. செல்வம் அவர்கள் பேசுகையில், ''தமிழ்நாட்டில் வெளிநாட்டு மற்றும் உள்நாட்டுச் சுற்றுலாப் பயணிகளைக் கவரும் வகையில் விழாவுக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. ஒவ்வொரு மாநிலத்திற்கும் ஒரு நாட்டியச் சிறப்பு உண்டு. அந்த நாட்டியச் சிறப்புகளை ஒரே இடத்தில் கண்டு களிக்கும் வகையில் மாமல்லபுரத்தில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது'' என்று கூறினார்.

செங்கல்பட்டு நாடாளுமன்ற உறுப்பினர் திரு. காஞ்சி பன்னீர் செல்வம் அவர்கள் பேசுகையில், ''மாமல்லபுரத்திற்கு வருகைதரும் சுற்றுலாப் பயணிகளுக்கு வசதிகள் செய்துதரப்பட வேண்டும், சென்னையிலிருந்து மாமல்லபுரத்திற்குத் துரித ரயில் விட ஏற்பாடு செய்யப்பட வேண்டும்'' என்று கேட்டுக் கொண்டார்.

மேதகு ஆளுநரின் ஆலோசகர் திரு. வி. கார்த்திகேயன் இ.ஆ.ப. (ஓய்வு) அவர்கள் விழாவினைத் தொடங்கி வைத்துப் பேசுகையில், இந்த விழா ''இந்தியாவுக்கு வாருங்கள்'', சுற்றுலா ஆண்டையொட்டி ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. இத்தகைய விழாக்களினால், அந்நியச் செலாவணி அதிகரிப்பதுடன், நமது நாட்டின் கலைச் செல்வங்களை அயல் நாட்டினர் காணும் வாய்ப்பினையும் உண்டாக்கும்.

''உலகத்திலேயே வேறெங்கும் இல்லாத அற்புதமான கலைப்படைப்புகள் நமது நாட்டில் உள்ளன. மாமல்லபுரத்தில் ஒரே பாறையைக் குடைந்து பலவிதமான சிற்பங்கள் நுண்ணிய முறையில் செதுக்கப்பட்டுள்ளன. பல்லவர் காலத்தில் இந்தப்பகுதி பெரிய துறைமுகமாக இருந்தது. பின்னர் சரியாகப் பராமரிக்கப்படாததால் அது அழிந்தது. இப்பொழுது இருக்கும் கடற்கரைக் கோயிலையாவது நாம் காப்பாற்ற வேண்டும்.

''நான் இந்தியன் என்று சொல்லும் எண்ணம் இன்னும் வரவில்லை. எல்லோரும் இந்தியர் என்ற எண்ணத்தை உருவாக்குவதில் எல்லோரும் பாடுபட வேண்டும். இதற்கு இத்தகைய கலை நிகழ்ச்சிகள் பெரிதும் உதவுகின்றன'' என்று கூறினார்.

விழா முடிவில், சுற்றுலாத்துறை இயக்குநர் திருமதி. சிவகாமி நன்றி கூறினார். அப்போது அவர் பேசுகையில், ''இந்த விழாவின் மூலம் தமிழகத்திற்கும், மாமல்லபுரத்திற்கும் அதிக அளவில் சுற்றுலாப் பயணிகள் வருகை புரிவார்கள்'' என்றார்.

சென்னை கைவினைஞர்கள் அறக்கட்டளையின் தலைவர் திருமதி டெபோரா தியாகராசன், இந்திய பரத நாட்டியக் கலைஞர்கள் சங்கத்தின் துணைத் தலைவர் திருமதி லட்சுமி விஸ்வநாதன் ஆகியோரும் விழாவில் கலந்து கொண்டு வாழ்த்துரை வழங்கினார்கள்.

விழாவின் முடிவில் திருமதி லட்சுமி விஸ்வநாதன் மற்றும் தனஞ்செயன் குழுவினரின் பரத நாட்டியம் நடைபெற்றது. விழாவினையொட்டி 'மைதூர் லாம்ப்ஸ்' நிறுவனத்தார் உதவியுடன் அர்ச்சுணன் தபசு சிற்பம், பல வண்ண மின்விளக்குகளால் அலங்கரிக்கப்பட்டிருந்தது.

**நிகழ்ச்சித் தொகுப்பு: ஜே. சந்திரன்.**

---

● நல்ல எண்ணங்களைத் தூவினால் தான் அவை நல்ல பலனைத் தரும். பகுத்தறிவால் பண்படாத எந்த உள்ளத்தில் நல்லெண்ணத்தை விதைத்தாலும் அது நல்ல விளைவைத் தராது.

—அறிஞர் அண்ணா

---







# சென்னை மாநகராட்சிச் செய்திகள்

## துப்புரவுப் பணி தீவிரம்

சென்னை மாநகராட்சியின் குப்பை கொட்டும் தளங்கள் வட சென்னையில் கொடுங்கையூரிலும், தென் சென்னையில் பெருங்குடியிலும் உள்ளன. தென்சென்னையில் துணை ஆணையாளர் டாக்டர் கே. அருள்மொழி, உதவி ஆணையாளர்கள் திரு டி. நாகசுந்தரம், திரு பி. இளங்கோ, ஆகியோரும், வடசென்னையில் நகரப் பொறியாளர் திரு எ.ஜே. லோனப்பன் உதவி ஆணையாளர் திரு பி. சோணை, மக்கள் தொடர்பு அலுவலர் திரு நி.வே. பாலு, ஆகியோரும் திடீர் சோதனையிட்டு குப்பை கொட்டும் தளத்திற்கு வரும் லாரிகள் குப்பையை முழு அளவு கொண்டு வருகின்றனவா, அவற்றின் மீது குப்பை பறந்து சிதறாமல் இருக்க தார்ப்பாலின் போர்வை போர்த்தப்பட்டுள்ளனவா எனப் பரிசோதித்தனர்.

மொத்தம் 95 லாரிகள் சோதனையிடப்பட்டன. 70 லாரிகள் முழு அளவு குப்பையை அள்ளி வந்தன. 15 லாரிகள் 3/4 அளவும் 10 லாரிகள் 1/2 அளவும் குப்பை அள்ளி வந்தன. 14 லாரிகள் தார்ப்பாலினால் மூடப்படாமல் இருந்தன. கடமை தவறிய 39 ஓட்டுநர் மீது மாநகராட்சி ஒழுங்கு நடவடிக்கை எடுத்துள்ளது.

## பிறப்பு இறப்புப் பதிவேடு

மருத்துவமனைகளில் பிறக்கும் குழந்தைகளின் பிறப்புப் பதிவு மருத்துவமனை அதிகாரிகளால் பிறப்புப் பதிவேட்டில் பதிவு செய்யப்படுகிறது. மகப்பேற்றுக்காகத் தாயை மருத்துவமனையில் சேர்க்கும் நேரத்தில், தவறான தகவல்களைக் கொடுத்தால் பிறப்புப் பதிவு செய்யப்படும் போதும் தவறுதலான தகவல் பதிய ஏதுவாகிறது. இத்தகைய தவறுதலான பதிவினால் பிறப்புச் சான்றிதழிலும் தவறு நேர்ந்து, பெற்றோர்களுக்கு மிகுந்த சிரமங்களைக் கொடுக்கிறது. ஆகவே, பொது மக்கள் தாயை மகப்பேற்றுக்காக அரசு மருத்துவமனையிலோ, மாநகராட்சி நலவாழ்வு மையத்திலோ, தனியார் மருத்துவ மனையிலோ சேர்க்கும்போது, தகப்பனார் பெயர், தாயின் பெயர், சரியான முகவரி போன்ற விவரங்களைத் தவறு இல்லாமல் தெரிவிக்க வேண்டும்.

உடல் நலன் குன்றியவர்களை மருத்துவமனையில் மருத்துவப் பரிசோதனைக்கு அனுமதிக்கும்போதும், பொதுமக்கள் சரியான பெயர், மற்றும் மேற்கூறப்பட்ட இதரத் தகவல்களையும் தவறு இல்லாமல் கொடுப்பதில் மிகுந்த கவனம் செலுத்தக் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

சாலை விபத்தில் உயிரிழந்தவரின் உறவினர்கள், காவல்துறை அதிகாரிகளுக்கு, இறந்தவரின் பெயரினைத் தவறில்லாமல் தெரிவித்தால்தான், காவல்துறையின் இறப்பு அறிக்கையிலும் சரியான தகவல்கள் தருவதற்கு ஏதுவாக இருக்கும்.

வீட்டில் நேரிடும் இறப்பிற்கான, இறப்பு அறிவிப்பினை மருத்துவச் சான்றிதழுடன் பெறுவதற்கு, தனியார் மற்றும் மாநகராட்சி இடுகாடுகளில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இறப்பினை அறிவிக்கும்போது இறந்தவரின் உறவினர்கள் மற்றும் வாரிசுதாரர்கள் இறந்தவரின் சரியான பெயர், முறையான முகவரி, தந்தை, கணவர் பெயர்கள் சரிவர உள்ளனவா என்

பதைக் கவனித்துக் கொள்ள வேண்டும். அவ்வாறு சரியான தகவல்கள் கொடுக்கவில்லையெனில், சொத்துக்கள் பங்கீட்டின் போதும், கருணை அடிப்படையில் வேலைக்கு விண்ணப்பிக்கும்போதும் குடும்ப ஓய்வூதியம் வாங்கும்போதும் இறந்தவரின் உறவினர்கள் மிகுந்த தொல்லைகளுக்கு ஆளாகிறார்கள்.

ஆகவே, பொதுமக்கள் சரியான பிறப்பு, இறப்பு விவரங்கள் கொடுத்தால்தான் பிறப்புச் சான்றிதழோ அல்லது இறப்புச் சான்றிதழோ தவறில்லாமல் கிடைக்க ஏதுவாகும் என்பதனைப் பொதுமக்களுக்கு, இவ்வறிக்கையின் மூலம் தெரிவிக்கப்படுகிறது. பெயர் மற்றும் இதர விவரங்கள் பிறப்பு, இறப்புப் பதிவேட்டில் பதிவு செய்தபின் மாற்றுவதற்கு இயலாது என்பதனையும் தெரிவித்துக் கொள்ளப்படுகிறார்கள்.

இவ்வாறு சென்னை மாநகராட்சி பத்திரிகைக் குறிப்பு தெரிவிக்கிறது.

## டெலிவிஷன் மூலம் ''ஷாப்பிங்'' செய்யலாம்

டெலிவிஷன் ஸ்விட்சைப் போட்டு விட்டு, அதில் தெரியும் நிகழ்ச்சிகளை வெறுமனே பார்த்து ரசித்துக் கொண்டிருந்த காலமெல்லாம் மாலையேறிவிட்டது. பார்த்துக் கொண்டிருக்கும் நிகழ்ச்சிகளில் பார்வையாளர்கள் தங்களுக்குத் தேவையான மாற்றங்களைச் செய்து கொள்ளும் அளவுக்குப் பல புதுமைகள் வந்து விட்டன. வீடியோ கேசட்டுகளும், லேசர் கதிர் வீடியோ டிஸ்க்குகளும் இதற்குப் பயன்படுகின்றன.

''தி டான்ஸ் கனெக்ஷன்'' என்னும் புதுமையான கேசட் நடனக்கலை பற்றியதாகும். வீடியோவில் இந்தக் கேசட்டைப் போட்டுவிட்டு, தொலைவிருந்தபடியே இயக்கும் 'ரிமோட் கண்ட்ரோல்' சாதனத்தைக் கையில் வைத்துக் கொண்டால் போதும். டெலிவிஷனில் தெரியும் அந்த நாட்டிய நட்சத்திரங்களை உங்கள் விருப்பம் போல் ஆட்டுவிக்க முடியும். காமெரா கோணத்தை மாற்றவேண்டுமா? குறிப்பிட்ட நடனக்கலைஞரின் முகத்தை 'குளோஸ்-அப்'பில் பார்க்க வேண்டுமா? ரிமோட் கண்ட்ரோல் சாதனத்தின் பொத்தானை அழுத்தினால் போதும். விருப்பம் போலக் காட்சிகள் மாறும்!

டெலிவிஷன் மூலம் 'ஷாப்பிங்' செய்வதற்கு வசதியாகவும் பல புதிய சேவைகள் அமெரிக்காவில் துவக்கப்பட்டுள்ளன.

ஒரு குறிப்பிட்ட பகுதியில் உள்ளவர்கள், தங்கள் டெலிவிஷனில் ஒரு குறிப்பிட்ட அலைவரிசையைத் திருப்பினால், பல்வேறு விதமான பொருட்கள் பற்றிய விவரங்களும், அவற்றின் விலைகளும் பற்றிய தகவல் குறிப்புகள் ஒளிபரப்பாகும். பொதுமக்கள் தங்களுக்கு வேண்டிய பொருட்களைத் தேர்ந்தெடுத்து, தொலைபேசி மூலமாக 'ஆர்டர்' கொடுக்கலாம். அவற்றையெல்லாம் வீட்டிலேயே கொண்டுவந்து டெலிவரி செய்து விடுகிறார்கள்!

பள்ளி மாணவர்களுக்குப் பயன்படக்கூடிய பாடபோதனை தொடர்பான கேசட்டுகளும், குடிப்பழக்கம், போதைப் பழக்கம், புகைப்பழக்கம் ஆகியவற்றின் கேடுகளைச் சித்திரிக்கும் கேசட்டுகளும் கூடப் புதுமையான முறையிலும் எளிதில் மனதில் பதியும் வகையிலும் தயாரிக்கப்பட்டுள்ளன.

இவையெல்லாம் இங்கல்ல, அமெரிக்காவில்!

## நீரிழிவு நோயாளிகளுக்குப் புதுமையான சிகிச்சை

நீரிழிவு நோயாளிகளுக்கு ஒரு இனிப்பான செய்தி! தங்கள் நோயைக் கட்டுப்படுத்துவதற்கு நாள்தோறும் 'இன்சுலின்' ஊசி போட்டுக் கொள்ளும் தொல்லையிலிருந்து அவர்கள் விரைவில் விடுபட்டுவிட முடியும் என்னும் நம்பிக்கை தோன்றியுள்ளது.

'சர்க்கரை வியாதி' என்று அழைக்கப்படும் நீரிழிவு நோயால் பாதிக்கப்பட்டவருக்கு இன்சுலினை இயற்கையாகவே அவரது உடலில் ஊறச் செய்வதற்கு, அமெரிக்க மருத்துவர் ஒரு புதிய முறையைக் கையாண்டுள்ளார்.

ஆரோக்கியமான நபர் ஒருவர் தானமாகக் கொடுத்த கணையத்திலிருந்து 'ஐலட் செல்ஸ்' (Islet Cells) எனப்படும் செல்களை ஓர் அறுவைச் சிகிச்சை மூலம் அவர் தனியே பிரித்தெடுத்தார். இவை இன்சுலினை உற்பத்தி செய்யும் செல்களாகும். இந்த செல்களைத் தூய்மை செய்து, அவற்றை நீரிழிவு நோயாளிகள் சிலருக்கு ஊசி மூலம் அவர் செலுத்தினார். இந்த செல்கள் செலுத்தப்பட்ட நீரிழிவு நோயாளிகள் ஒன்பது பேரில், ஐவருக்கு நல்ல குணம் ஏற்பட்டது. இவர்கள் நாள்தோறும் 'இன்சுலின்' ஊசி போட்டுக் கொள்ள வேண்டிய அவசியம் குறைந்துவிட்டது.

இந்த நோயாளிகளின் உடலில் செலுத்தப்பட்ட செல்கள் அவர்களது கல்லீரலை அடைந்து அங்கே இன்சுலினை உற்பத்தி செய்யத் துவங்கும். பரிசோதனை முறையில் நடத்தப்பட்ட இந்த மாற்று அறுவைச் சிகிச்சை வெற்றி பெற்றுள்ளது.

—அமெரிக்கத் தகவல் நிலையம்




# சிறுசேமிப்புத் துறை




எதிர்பாரா இன்னல்கள் ஏற்படுமுன் சேமியுங்கள். வரி செலுத்துவதைத் திட்டமிட்டு, இன்ஷுரன்ஸ் பாதுகாப்பும் பெறுங்கள். இன்றே கீழ்க்கண்ட சிறுசேமிப்புத் திட்டத்தில் ரூ.1,000/-ம் அதற்குமேலும் முதலீடு செய்து தனிநபர் விபத்து இன்ஷுரன்ஸ் பாலிசியைப் பெறுங்கள்.

**கீழ்க்கண்ட திட்டங்களின்கீழ் தனிநபர் விபத்து இன்ஷுரன்ஸ் பாதுகாப்பு கிடைக்கும்:**

- கிசான் விகாஸ் பத்திரம்
- தேசிய சேமிப்புத் திட்டம்
- அஞ்சலக மாதாந்திர வருமானத்திட்டம்
- அரசுப்பணியாளர்களுக்கான டெபாசிட் திட்டம் 1989
- தேசிய சேமிப்புப்பத்திரம் 8வது வெளியீடு
- 15 வருட பொது சேமநலநிதி
- அஞ்சலக குறித்தகால டெபாசிட்

**வருமான வரி விலக்குப் பெற தேசிய சேமிப்பில் முதலீடு செய்வீர்**


| வசதிகள் | தேசிய சேமிப்பு பத்திரம் 8-வது வெளியீடு | பொதுசேம நலநிதி | தேசிய சேமிப்பு திட்டம் |
|---|---|---|---|
| வட்டி | 12% | 12% | 11% |
| முதலீட்டுக்கு வருமான வரிவிலக்கு | ரூ.50,000 பிரிவு 88-ன்கீழ் | ரூ.50,000 பிரிவு 88-ன்கீழ் | ரூ.40,000 பிரிவு 80 CCA-ன் கீழ் |
| வட்டிக்கு வருமான வரிவிலக்கு | வருமான வரிச் சட்டம் பிரிவு 88-ன்கீழ் | வருமான வரியில் இருந்து வட்டிக்கு முழுவிலக்கு | வட்டி தொகை சேரும்போது வருமான வரி விலக்கு |
| செல்வ வரி | ரூ.5,00,000 வரை விலக்கு | முழுவிலக்கு | முழுவிலக்கு |
| டெபாசிட்டுகளுக்கான வரம்பு | வரம்பு கிடையாது | ரூ.60,000 | ரூ.40,000 |

**தமிழக அரசின் சிறப்பு சலுகைகள்:**

- ஒவ்வொரு ரூ.500/- முதலீட்டிற்கும் ஒரு இலவச பரிசு கூப்பன் மூலம் 262 பரிசுகளில் ஒன்றைப் பெறும் வாய்ப்பு.
- தமிழ்நாட்டில் குறிப்பிட்ட சில திட்டத்தில் முதலீடு செய்யும் ஒவ்வொரு ரூ.1,000/- முதலீட்டிற்கும் 1% வரை ஊக்கத்தொகை.
- 1.1.91 முதல் 31.3.91 வரை தமிழ்நாட்டில் குறிப்பிட்ட திட்டங்களில் முதலீடு செய்யும் ஒவ்வொரு ரூ. 1000/- முதலீட்டிற்கும் தனிநபர் விபத்து இன்ஷுரன்ஸ் வசதி. பிரீமியத்தை தமிழக அரசே செலுத்துகிறது.

DIPR/1.89/MS/91/ARIES

**இலவச தனிநபர் விபத்து காப்புறுதி திட்டம் — அதிகபட்ச நஷ்ட ஈடு ரூ. 50,000 -**



**கூடுதல் சலுகைகள்:**

- இந்திய அரசின் முழுப்பாதுகாப்பு
- சொத்து வரிவிலக்கு
- உங்கள் குழந்தைகள் பெயரில் முதலீடு செய்து வருமான வரிவிலக்கு பெறுங்கள்.

யுனைடெட் இந்தியா இன்ஷுரன்ஸ் நிறுவனம், சென்னை. தனிநபர் விபத்து இன்ஷுரன்ஸ் பாலிசி கிடைக்குமிடம்: அனைத்து மாவட்ட ஆட்சியாளர் அலுவலகம் மற்றும்

இயக்குநர்
**சிறுசேமிப்புத்துறை**
143, அண்ணாசாலை, சென்னை-600 002.
தொலைபேசி: 840223/846209.

# படமும் செய்தியும்



மேதகு ஆளுநர் திரு. கர்ஜித்சிங் பர்னாலா அவர்களை, பெல்ஜியம் நாட்டுத் தூதர் திரு. ஏ. கேமியெல் கிரையல் அவர்கள் ஆளுநர் மாளிகையில் சந்தித்தார் (9.2.'91).



மேதகு ஆளுநர் அவர்களின் ஆலோசகர் திரு. வி.கார்த்திகேயன் அவர்கள் தமிழ்நாடு அரசு மருத்துவ அறிவியல் மற்றும் ஆராய்ச்சி நிறுவனத்தின் (தாமரை) முதலாம் ஆண்டு நிறைவு விழா மற்றும் மருத்துவக் கல்லூரி பரிசளிப்பு விழா நிகழ்ச்சியில் கலந்து கொண்டு பரிசுகள் வழங்கிச் சிறப்புரையாற்றினார் (4.2.'91).

சென்னையில் நடைபெறும் இந்தியச் சுற்றுலா வர்த்தகப் பொருட்காட்சியில், நடைபெற்ற நாய்கள் கண்காட்சியில் தேர்ந்தெடுக்கப்பட்ட சிறந்த நாய்களை வளர்த்தவர்களுக்கு, செய்தி மற்றும் சுற்றுலாத்துறைச் செயலாளர் திருமதி ஜெயந்தி, அவர்கள் பரிசுகள் வழங்கினார் (3.2.'91).







மேதகு ஆளுநர் திரு. கர்ஜித்சிங் பர்னாலா அவர்கள் தலைமைச் செயலகம் சென்று அதிகாரிகளுடன் ஆலோசனை நடத்தினார். ஆளுநரின் ஆலோசகர் திரு. வி.கார்த்திகேயன் மற்றும் தலைமைச் செயலாளர் திரு. டி.வி.அந்தோணி ஆகியோர் உடனிருந்தனர் (1.2.'91).


மாண்புமிகு மத்திய உள்துறை ராஜாங்க அமைச்சர் திரு. சுபோத்காந்த் சகாய், மேதகு ஆளுநர் திரு. கர்ஜித்சிங் பர்னாலா ஆகியோர் தமிழ்நாட்டின் சட்டம் ஒழுங்கு நிலை குறித்து ஆளுநரின் ஆலோசகர்கள் திரு. வி.கார்த்திகேயன், திரு. வி.ராமச்சந்திரன், தலைமைச் செயலாளர் திரு. டி.வி.அந்தோணி, மாநில காவல்துறைத் தலைவர் திரு. பி.பி.ரங்கசாமி மற்றும் காவல்துறை உயர் அதிகாரிகளுடன் ஆளுநரின் மாளிகையில் ஆலோசனை நடத்தினார்கள் (11.2.'91).





வளமான வாழ்வுக்கு
மதராஸ் பெர்ட்டிலைசர்ஸ்
அளிக்கும்

# விஜய்
உரங்கள்




HTA 7343

ஆசிரியரும் வெளியிடுபவரும் : தமிழ்நாடு அரசு செய்தி மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை. அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட
முகவரி : தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-600 002. தொலைபேசி எண் : 568926, 568927

எளிமையானவை! நேர்த்தியானவை!
மேன்மை மிகுந்தவை!
தோற்றம் அளிப்பவை!



கோ-ஆப்டெக்ஸ்
தமிழ்நாடு கைத்தறி

* பருத்தி, பாலியஸ்டர், பட்டுச் சேலைகள்.
* பருத்தி, பாலியஸ்டர் சர்ட்டிங்ஸ், பட்டுத் துணிகள்.
* பருத்தி, பாலியஸ்டர் சூட்டிங்ஸ்.
* லுங்கிகள், துவாலைகள், வேட்டிகள்.
* படுக்கை விரிப்புகள், அலங்காரத் துணி வகைகள்.

அருகாமையில் உள்ள கோ-ஆப்டெக்ஸ்
விற்பனை நிலையத்தை அணுகவும்.

